754

கதர் மலர்

மலர் 5 இதழ் 6

அகில பாரத சர்க்கா சங்கம் வெளியிடும் மாதப் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 MAR 1952
MADRAS



போட்டோ:— கனு காந்தி — காந்தி சித்திராலயம், ராஜ்கோட்

மார்ச்

1952

★

வருட சந்தா ரூ. 3

விலை அணா 4

ஸர்வோதய பிரசுராலயம் (A. I. S. A.,) வீரபாண்டி, திருப்பூர்

கதர் மலர்

மார்ச் 1952 தொடர் நெ. 54

பொருளடக்கம்

கதர் இயக்கத்தில் புதிய யுகம்:
— மகாத்மா காந்தி
வினேபாஜியின் பூமிதான யக்ஞம்:
— ஜெகந்நாதன், மூந்தடா
மஹாதேவ் தேசாயின் இறுதி நாட்கள் நான்கு:
— சுசீலா நையார்
காந்தியும் மார்க்ஸூம்:
— ஆச்சாரிய விநோபாஜி
அஹிம்சையும் கருணையும்:
— காகா கலேல்கர்
நான் கண்ட காந்தி:
— திவாகர்
ஆத்ம விழிப்பால்தான் துன்பம் தீரும்:
— விநோபா பாவே
அமெரிக்காவின் பாசக்கயிறு:
— குமரப்பா
சர்க்கா சங்கத்தின் தீர்மானங்கள்:
காந்திஜி உலகிற்கு அளித்த புதிய வழி:
— விநோபா பாவே
இத்தாலியில் சர்வோதயப் பிரார்த்தனை:
பத்திரிகை உலகில் "ஹரிஜன்"
சர்வோதய மேளா—யாத்திரை:
மாகாணங்களில்
தமிழ் நாட்டில்
சர்வோதய யாத்திரையும் கிராம வேலையும்
குறிப்பும் செய்தியும்:
சர்வோதய சம்மேளனம்
பூமிதான யக்ஞம்
'கீதா ப்ரவசனம்'
கதாயி மண்டலும் "கதர் மலரு"ம்

ஜபத்தின் சிறப்பு

மகாத்மா காந்தி

"ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பது என் காதை உறுத்துகிறது. இது கணிதத்தில் பற்றும் அறிவு வாதத்தில் ஈடுபாடும்கொண்ட என் மனோபாவத்திலுள்ள குறையினால் இருக்கலாம். ஆனால் எந்தக் காரணத்தினாலோ, எனக்கு ஜபம் என்றாலே பிடிப்பதில்லை. உதாரணமாக, பாக்கினுடைய அற்புதமான இசையும், 'தந்தையே அவர்களை மன்னியுங்கள், அவர்கள் தாம் செய்வது என்னவென்று அறியார்' என்ற வரி திரும்பத் திரும்பப் பாடப்படுகையில் எனக்குப் பிடிப்பதில்லை."

"ஆனால் கணிதத்திலும் மடங்கு தசமம் உண்டே" என்று காந்திஜி சிரித்துக் கொண்டே சொன்னார்.

"ஆனால் ஒவ்வொரு எண்ணும் ஒரு புதிய பொருளைக் குறிப்பதாக அல்லவா இருக்கிறது" என்றார் கணித பண்டிதர்.

"அவ்வாறே ஒவ்வொரு தடவையும் திரும்பச் சொல்லுதல் அல்லது ஜபித்தலுக்குப் புதிய புதிய பொருளுண்டு. ஒவ்வொரு தடவை திரும்பச்சொல்லும் பொழுதும் நாம் கடவுளை ஒவ்வொரு அடியாக அணுகிக் கொண்டிருக்கிறோம், இது ஒரு நிதர்சனமான விஷயம். நீங்கள் இங்கே பேச்சளவோடு நிற்கும் ஒருவனுடன் பேசிக்கொண்டிருக்க வில்லை; தான் சொல்வதைத் தன் வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் அனுபவித்து வந்திருப்பவன் ஒருவனுடனேயே நீங்கள் உரையாடிக் கொண்டிருக்கிறீர்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லி வைக்கிறேன். ஆகவே என் நாடி அல்லது உயிர் ஓடுவது நின்று விட்டாலும் நின்றுவிடுமே தவிர இந்த இடையறாத ஜபம் மட்டும் நில்லாது. அது ஆன்மாவுக்கு மிகவும் தேவையானதொன்று."

"எனக்கு இது நன்றாய்ப் புரிகிறது. ஆனால் சாதாரண மனிதனுக்கு இது பொருளற்ற வெறும் வார்த்தையாகி விடுகிறதே."

"ஒப்புக்கொள்கிறேன். ஆனால் மிகச் சிறந்த வஸ்துவும் தவறாக உபயோகிக்கப் படலாம். மோசடி செய்வதற்கு மிகுந்த இடம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் மோசடியும் நற்குணத்தின் பெருமைக்கே ருஜு. பத்தாயிரம் மோசக்காரர்கள் இருக்கிறார்களென்றால் கோடிக்கணக்கான கள்ளங் கபடமற்ற ஆன்மாக்கள் இதிலிருந்து மனவமைதி பெறுகிறார்களென்பதைக் காண்பீர்கள். கட்டடத்திற்கு சாரத்தைப் போல இது மிகவும் இன்றியமையாதது."

"ஆனால்" பியரி ஸெரிஸோல் மேலும் சொன்னதாவது: "உங்கள் உவமையையே மேலும் தொடர்ந்து கொண்டு செல்லுவோமானால் கட்டடம் கட்டியான பிறகு சாரத்தை அகற்றி விடவேண்டும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள் அல்லவா?"

"ஆம் இந்த உடல் அகற்றப்படும்பொழுது அதுவும் அகற்றப்படும்."

"ஏன்?"

"ஏனெனில்" தர்க்கத்தை மிகவும் ஊன்றி கவனித்து வந்த வில்கின்ஸன், "நாம் சதா சர்வகாலமும் கட்டடம் எழுப்பிக்கொண்டேயிருப்பதினாலேயே" என்றார்.

"ஏனெனில் நாம் சதாசர்வகாலமும் பூரணத்துவத்தைக் கருதிப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். கடவுள் ஒருவரே பரிபூரணர். மனிதன் என்றும் அபூரணனே" என்றார் காந்திஜி.

('ராமநாமம்')

கதர் மலர்

மலர் 5 | கர-ஹூ பங்குனி-மீ * மார்ச் 1952 | இதழ் 6

★ கதர் இயக்கத்தில் புதிய யுகம் ★

மகாத்மா காந்தி

கதர் உணர்ச்சி

கதர் உணர்ச்சி யென்பதற்கு கதர் அணிவதிலுள்ள கருத்து நமக்குத் தெரிந்திருக்கவேண்டுமென்று அர்த்தம். நாம் ஒவ்வொரு நாள் காலையிலும் வெளியே போவதற்காக அணியும்பொருட்டு கதராடையைக் கையிலெடுக்கும்பொழுது நாம் அதை தரித்திரநாராயணனின் பெயரால், பட்டினி கிடந்து வருந்தும் கோடிக்கணக்கான இந்திய மக்களுக்காக அணிகிறோம் என்பதை நினைத்துக்கொள்ளவேண்டும். நமக்குக் கதர் உணர்ச்சி இருக்குமானால் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் எளிமை புலனாக வேண்டும். கதர் உணர்ச்சி என்பதற்கு எல்லையில்லாத பொறுமையென்பது பொருள். கதர் உற்பத்தியில் பரிச்சயமுள்ளவர்களுக்கு நூற்பவர்களும் நெசவாளரும் தம் தொழிலை எவ்வளவு பொறுமையுடன் செய்யவேண்டியிருக்கிறதென்று தெரியும். அதே வகையில் நாம் சுயராஜ்ய சூத்திரத்தை முறுக்குகையில் பொறுமையுடன் இருந்துவரவேண்டும். கதர் உணர்ச்சி என்பதற்கு அதே வகையில் அமைந்துள்ள அளவிலடங்காத நம்பிக்கை யென்பதும் பொருளாகும். தன் ராட்டையில் உழைத்து நூற்றுக்கொண்டிருப்பவன் தான் நூற்கும் நூல் அளவில் சிறியதாயினும் மற்ற எல்லோரும் நூற்கும் நூலுடன் சேரும்பொழுது அது இந்தியாவிலுள்ள எல்லோருக்கும் உடுத்தப் போதுமானது என்ற எல்லையில்லா நம்பிக்கை கொண்டிருப்பதைப்போல, நாமும் சத்தியமும் அஹிம்சையும் இறுதியில் எல்லாத் தடைகளையும் வென்று வெற்றி பெறுமென்ற எல்லையற்ற நம்பிக்கை கொண்டிருக்கவேண்டும். கதர் உணர்ச்சி என்பதற்கு உலகத்திலுள்ள எல்லா மனிதர்களிடமும் சகோதர பாவம் கொள்ளுதல் என்பது பொருள். அப்படியானால் நமது சகோதர மக்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய எல்லாவற்றையும் அறவே துறந்து விடுதல் என்று ஆயிற்று. கதர் உணர்ச்சியில் இந்த எல்லா சக்திகளும் அடங்கியிருந்தபோதிலும் அதில் ஒரு நிபந்தனையும் உண்டு. அதாவது, அதை ஆதரிப்பவர்களுடைய தவமும் அதில் சேர்ந்திருக்கவேண்டும். தம் வாழ்க்கையையே கதருக்கென அர்ப்பணம் செய்துவிட்டவர்கள் இடையறாது வாழ்க்கைத் தூய்மையை வற்புறுத்தாது இருந்துவிடுவார்களானால் நம் நாட்டு மக்கள் ‘கதரை எம் கிட்டத்திலேயே கொண்டுவராதே’ என்று சொல்வது நிச்சயம் என்ற விஷயத்தை நான் ஒவ்வொரு நிமிஷமும் நன்கு உணர்ந்து வருகிறேன். கதர் மற்ற வியாபாரப் பண்டங்களோடு சம நிலையில் இருந்துகொண்டு அவை கூறும் வகைகளிலெல்லாம் போட்டியிட முடியாது என்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் கதர் தனிச் சிறப்பு வாய்ந்தது. அதன் முன் இந்தியாவில் உள்ள வேறு எந்தப் பொருளினாலும் நிற்கமுடியாது என்பதையும் நான் உறுதியாய் அறிவேன். (22—10—’27)

* * *

கதர் நிஷ்டை

காங்கிரஸுக்கு வெளியே கதரைக் குறை கூறிக்கொண்டு தம் கையால் அதைத் தொடுவதுமில்லை யென்று இருந்துவரும் பிரபலஸ்தர் பலர் உண்டு என்பதைக் கதர்

ஊழியர்கள் அறியவேண்டும். காங்கிரஸுக்கு உள்ளேயே கதரில் நம்பிக்கையில்லாமல் அதை எப்பொழுதும் கேலிசெய்துகொண்டு காங்கிரஸிலிருந்து அதை நீக்கியாகும் வரையில் கட்டுப்பாட்டுக்கு அஞ்சி உடுத்தி வருவோர் உண்டு என்பதையும் அவர்கள் அறிய வேண்டும். இந்தத் தடைகள் குறுக்கிட்டும் கதர் முன்னேறியிருக்கிறது. இம்மாதிரியான எதிர்ப்பை சமாளிக்கவேண்டியிராவிட்டால் அது இன்னும் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மேலும் பரிசீலனை செய்ததில் தாம் இனி கதருக்கு எதிராகக் கிளம்பவேண்டியது அவசியமென்று கதர் ஊழியருக்குத் தோன்றுமானல் அவர் செய்யவேண்டியது என்ன?

16 வருஷம் கதரில் அனுபவம் பெற்று அது சாதிக்கக்கூடியது என்னென்ன வென்பதை உணர்ந்தவர்களும் அசையாத நம்பிக்கையுள்ளவர்களுமான அன்பர்கள் போதிய தொகையில் இருக்கிறார்களென்றும் அவர்களுடைய நம்பிக்கை அது வேலை செய்துவரும் முறைகளைப்பற்றிய அறிவை ஆதாரமாகக் கொண்டிருப்பதென்றும் நான் நம்புகிறேன். அவருடைய நம்பிக்கை பிறர் சொல்வதைக் கேட்டுத் தலையாட்டுவதாயிருக்குமானல் நான் இறந்ததும் கதரும் மறைந்துபோகும். என் மரணத்திற்குப் பிறகு ராட்டைகளெல்லாம் முறித்துப்போடப்பட, அவை என் உடலை வைத்துக் கொளுத்துவதற்குப் போதுமானதாயிருக்கும் என்று ஒரு பிரபல பத்திரிகாசிரியர் ஜோசியம் சொன்னது உண்மையாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

அவர்கள் தம் நம்பிக்கையை மீண்டும் சோதித்துப் பார்த்துக்கொள்ளட்டும். அவ்வாறு பார்க்கையில் அவர்களுக்குக் கதரின் பொருளாதார மகத்துவத்தைப் பற்றி ஏதேனும் சந்தேகம் தோன்றுமானல் அவர்கள் தம் மனப்போக்கை மாற்றிக்கொள்ளட்டும் என்று நான் ஆலோசனை கூறுகிறேன்.

6—6—'36

அஹிம்சா சமூகத்தில் நூற்பு

அஹிம்சையின் மூலமாகத்தான் இந்தியாவை விடுவிக்கவும், பெற்ற விடுதலையைப் பாதுகாக்கவும் முடியுமென்று நம்புகிறவர்கள் அஹிம்சையை எல்லா மக்களும் அனுஷ்டிக்க வேண்டுமென்றால் அதற்கு மக்கள் அனைவரும் நாட்டின் நலனுக்குதவும் ஏதேனும் ஒரு தொழிலில் தத்துவ உணர்ச்சியுடன் ஈடுபட்டாகவேண்டு மென்பதைக் கட்டாயம் அறிவார்கள். குறிப்பிடத்தக்க முதலீடு எதுவும் இல்லாமலே எல்லோரும் சுலபமாகச் செய்யக்கூடியதும், செய்வோருக்கு மன அமைதியை அளிப்பதுமான அந்த வேலை யாது? இதற்கு சந்தேகத்திற் கிடமில்லாத பதில், நூற்பும் அதற்கு முந்திய கிரியைகளும் என்பதே.

சர்வ சாதாரணமாக யுத்தங்களில் ஈடுபடும் ஐரோப்பிய நாடுகளில் வயது வந்த ஆண்களெல்லாம் குறிப்பிட்ட வருஷங்கள் யுத்தசேவை செய்வதற்காக பலவந்தமாய்த் திரட்டப்படுகிறார்கள். போருக்கான ஆயுத்தங்கள் எதுவும் செய்யாமல் தற்காப்பையும் தம் அன்றாட வாழ்க்கையையும் ஒழுங்குபெற அமைத்துக் கொள்ள விரும்பும் ஒரு நாட்டார் ஏதேனும் ஒரு தேசீயப் பொருள் உற்பத்தி முயற்சியில் கட்டாயமாய்ச் சேர்க்கப்படவேண்டும். ஒரு நாட்டின் ஜீவாதாரத் தேவைகள் குவியல் முறையில் உற்பத்தி செய்யப்படுமானல் ஒரு முதலாளி தன் சொத்துக்களைப் பாதுகாப்பதைப் போல அந்த நாடும் அவைகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியமென்பதை உணரும். அஹிம்சையின் அடிப்படையில் எந்த நாட்டின் கலாசாரம் அமைந்திருக்கிறதோ அது ஒவ்வொரு வீடும் கூடிய வரையில் சுயதேவைப் பூர்த்தி செய்து சுயம் பூர்ணமாய் இருப்பது அவசியமென்பதை உணரும்.

4—12—'39

காந்திஜியின் 'ராட்டை-தத்துவ விளக்கம்' என்ற புத்தகத்திலிருந்து ★ ★

நகரங்களே நிரந்தரமான ஆபத்து

இந்தியா அதன் ஏழு லக்ஷம் கிராமங்களிலேயே இருந்துவருகிறது. கைவிரல்களைக் கொண்டு எண்ணிவிடக் கூடிய 5, 6 நவீன நகரங்கள் இருக்கின்றனவே, அவை இயற்கைக்கு மாறாக இதன்மேல் முளைத்தெழுந்திருப்பதோடு, தற்சமயம் கிராமங்களின் ரத்தத்தை உறிஞ்சும் பாவச் செயலில் ஈடுபட்டிருக்கின்றன. [illegible]தரென்பது, இவ்வாறு நடப்பதைத் திருத்தவும் மாற்றியமைக்கவும், நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையே இப்பொழுது உள்ளதைவிடச் சிறந்த உறவை ஏற்படுத்தவும் செய்யப்படும் முயற்சியாகும். மமதை கொண்ட நகரங்கள் கிராமங்களின் வாழ்வுக்கும் சுதந்திரத்திற்கும் நிரந்தரமான ஆபத்துக்களாய் இருக்கின்றன.

—மகாத்மா காந்தி

12778 600 008

★ விநோபாஜியின் பூமிதான யக்ஞம் ★

JL M4K N52

அன்பின் அற்புத சக்தி

"கம்யூனிஸ்டுகள் சில இடங்களில் தேர்தலில் வெற்றிபெற்றிருப்பதால் சிலர் பீதியடைகிறார்கள். எதற்காக இந்த பயம்? ஏழைகளின் துக்கத்தைப் போக்க சேவை செய்யப்போவதில்லை என்று நீங்கள் தீர்மானித்துவிட்டால் பயப்படவேண்டியதுதான்!" இவ்வாறு விநோபாஜி பருக்காபாத்தில் சுமார் பதினாயிரம்பேர் கூடியிருந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசும்போது சொன்னார். வானம் இருண்டு மழை பெய்துகொண்டிருந்ததால், கூட்டம் நடப்பது எவ்வாறு என்ற சிந்தனை. ஆயினும், பிற்பகல் 3-மணிக்கு வானம் நிர்மலமாகியது; மக்களுக்கு ஒரே உற்சாகம். சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம் விநோபாஜியின் பிரசங்கத்தை மிகவும் அமைதியுடன் கேட்டனர். மேலும் அவர், "கம்யூனிஸ்டுகளின் பலாத்காரச் செயல்கள் நடந்துகொண்டிருப்பினும் நான் தெலுங்கானாவில் பயமின்றி கிராமம் கிராமமாகச் சுற்றினேன். அவர்களும் என்னிடம் அன்பாக இல்லாமல் வேறு என்ன செய்யமுடியும்? நான் போன இடங்களிலெல்லாம், காலையிலிருந்து மாலை வரை ராம பஜனை நடந்தது. இரண்டு மாதங்களும் ராம நாமத்தையே கேட்டுக்கொண்டிருந்தேன். கம்யூனிஸ்டுகளைத் தேர்ந்தெடுத்த அம் மக்களின் மனோ நிலையைத் தான் உங்களுக்குச் சொல்கிறேன். நான் தெலுங்கானாவில் அப்பொழுதே சொன்னேன்: கம்யூனிஸ்டுகள் வருவார்கள் போவார்கள்; ஆனால் நம் நாட்டில் ராமநாமம் என்றென்றும் இருந்துகொண்டிருக்கும். அவரை நினைத்து சேவையில் ஈடுபடுபவர்களுக்கு கம்யூனிஸ்டுகளிடமோ அல்லது வேறு யாரிடமோ ஒரு பயமும் இல்லை."

தரித்திரநாராயணனின் பங்கு

"ஏழைகளின் பிரதிநிதியாக தரித்திர நாராயணனுக்கு ஆறில் ஒரு பங்கு கொடுப்பது நியாயமானது. எல்லாவற்றையும் ஏழைகளுக்கென்று அர்ப்பணித்துக் கொடுத்துவிடுவது மகா தியாகமாகும். இந்த பாக்கியம் பக்தி சோதனையாலும், பகவத் கிருபையாலும் சிலருக்குக் கிடைக்கிறது. இவ்வளவு தியாகம் செய்யாவிட்டாலும் எல்லோரும் ஆறில் ஒருபங்கு கொடுக்கவேண்டியது மனித தர்மம்" என்பதை அறிவித்து விநோபாஜி, மேலும், "நிலம் இல்லாதவர்களுக்கென்று ஆறில் ஒருபங்கு கொடுங்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்கிறேன். சாஸ்திரங்களில் அரசனுக்கு ஆறில் ஒருபங்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது அரசன் யார் என்று உங்களிடம் கேட்கிறேன். நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் உற்பத்தியாளர்தான் நம் ராஜா. மழை பெய்துவிட்டால் மாத்திரம் உணவு உற்பத்தியாகிவிடாது; புல்தான் வளரும். ஆனால் உழைக்கும் நம் ராஜாவின் நெற்றி வியர்வை ஒரு பக்கம், ஆண்டவன் அருளால் மழை ஒருபக்கம், இரண்டும் சேர்ந்துதான் உணவு உற்பத்தியாகிறது. இந்த நம் நாட்டு, உழைத்து உற்பத்திசெய்யும் அரசனுக்கு ஆறில் ஒருபங்கு கொடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

புரட்சிவாதி யார்?

மேலும் அவர், "சிலர் தங்களை புரட்சிக்காரர்கள் என்று எண்ணிக்கொண்டு, நான் பத்தாம்பசலிக்காரன், புரட்சி வேகத்தைத் தடுக்கிறேன் என்றும்; வேறு சிலர் நான் சூரியன், காற்று, தண்ணீர் இவைகளைப் போன்று பூமியும் எல்லோருக்கும் பொதுவானது என்று சொல்வதால் கம்யூனிசத்திற்கு வழி வகுக்கிறேனென்றும்; மற்றும் சிலர், கம்யூனிஸ்டுகளாவது பணத்திற்கு மதிப்புக்கொடுக்கிறார்கள், ஆனால் நான் பணத்தையே நிராகரிப்பதால் கம்யூனிஸ்டுகளைக் காட்டிலும் பயங்கரமானவன் என்றும் சொல்கிறார்கள். ஆனால் நான் யார் என்று யாருக்குத் தெரியும்? உங்கள் அனைவரிடமும் அளவுகடந்த பிரேமை கொண்டிருக்கும் அன்பன் நான். கண்ணாடியில் என் சொரூபத்தைப் பார்ப்பதுபோல் உங்களுடைய ஆத்மசொரூபத்தில் என்னையே பார்க்கிறேன். உங்களிடம் என்னுடைய பங்கைக் கேட்கிறேன். கேட்பதினால் நிலம் வாங்கி நிலப் பிரசினையைத் தீர்க்கும்படியாக அன்பிற்கு அவ்வளவு சக்தியுண்டா என்று கேட்கிறீர்கள்.

க்ஷயரோகம் பிடித்த மனிதனுக்கு வலிமையின் பெருமை எப்படித் தெரியும்? அன்பு யாரிடத்தில் இல்லை? அனைவரின் உள்ளத்திலும் அன்பு மறைந்திருக்கிறது. கோபம் நிறைந்தவர்களிடத்திலும் அன்பு மறைந்திருக்கிறது. தன்னிடத்திலாவது எல்லோருக்கும் அன்பு இருக்கிறதல்லவா? தன்பால் உள்ள அன்பு தான் விரிந்து பிறர்பால் செல்கிறது. நாம் அனைவருமே கடவுளின் குழந்தைகள். ஏழைகளாக இருப்பவர்கள் செல்வந்தர்களை எதிர்த்துக் கையில் கத்தி எடுத்தால், அவர்களும் சகோதரர்களே. உரிமைக்காகத் தன் சகோதரனிடத்திலல்லாமல் வேறு யாரிடம் சண்டை போடுவது? உரிமையைக் கொடுக்க மறுப்பதால், நம் சகோதரர்களே விரோதிகளாகிவிடுகிறார்கள். சகோதரனை கொடிய விரோதியாக்கவும் விரோதியை ஆருயிர் சகோதரனாக்கவும் நம்மிடம் சக்தியிருக்கிறது. ஆகையால்தான் அன்பின் அபார சக்தியைப் பரிசோதித்துப் பார்க்கும்படி உங்களிடம் சொல்கிறேன். கத்தியெடுக்கும் ஏழையின் உள்ளத்திலும் அன்பு இருக்கிறது. ஆத்திரத்தில் புத்தியிழந்து பலாத்கார வழியை நாடுகிறார்கள். நிதானமாக யோசித்தால் ஹிம்சையைவிடுத்து சத்தியாக்கிரக வழியைத் தெரிந்து கொள்வார்கள். ஆனால் சத்தியாக்கிரகம், ஆத்மீக சக்தியில் பலமுள்ளவர்களின் ஆயுதம். நாம் ஆர்வத்துடன் காரியம் செய்தால், பொருளாதார சமூகப் பிரசினைகளை அன்பு வழியில் தீர்த்துவிடலாம்'' என்றார்.

பருக்காபாத் ஜில்லாவில் இரண்டு நாட்களில் 500 ஏக்கர் வரை பூமி தானம் கிடைத்திருக்கிறது. இந்த ஜில்லாவின் 'கோட்டா' பதினயிரம் ஏக்கரையும் ஏப்ரல் மாதத்திற்குள் சேர்த்து விடுவதாக ஊழியர்கள் வாக்களித்துள்ளார்கள். இப்போது வினோபாஜி ஹார்டோயி ஜில்லாவில் யாத்திரை செய்து கொண்டிருக்கிறார்.

* * *

அவர்களின் பக்தியால் சாந்தி; இல்லையேல் கிராந்தி (புரட்சி)

உத்தரப் பிரதேசத்தில் லக்கிம்பூர் ஜில்லாவில் மைலானி என்னும் ஊரில் ரயில்வேத் தொழிலாளர்களும் மர வேலை செய்யும் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். சுற்றிலும் அடர்ந்த காடுகள். இங்கிருந்து மரங்கள் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. வினோபாஜியின் பிரார்த்தனைக் கூட்டத்தில் தொழிலாளர்கள் அதிகமாகக் கலந்து கொண்டார்கள். அவர் ரயில்வே என்ஜின் (Workshop) தொழிற்சாலைக்கு எதிரிலுள்ள ரயில்வே அதிகாரியின் வீட்டில் தங்கியிருந்தார். வினோபாஜி நாள் முழுதும் பல அலுவல்களில் ஈடுபட்டிருந்தாலும், தொழிலாளர்களின் உழைப்பையும் வாழ்க்கையையும் உற்றுக் கவனித்து, அவர்களைப் பற்றிய சிந்தை மிகுந்தவராய், பிரார்த்தனைப் பிரசங்கத்தில் "நம் நாட்டில் உழைப்பவர்கள் பக்தி மனோபாவம் மிகுந்தவர்கள். ஆகையால் தான் இன்று இந்தியாவில் சாந்தி நிலவியிருக்கிறது. பகவத் பக்தியால் பைத்தியம் பிடித்தவர்களாக தங்களின் தரித்திர நிலைமையும் தங்களுக்கு பகவான் விரும்பும் உன்னத நிலை என்று எண்ணுகிறார்கள். உழைப்பவர்களிடம் இந்த மனோபாவம் இல்லாத நாடுகளில் ரத்தப் புரட்சி நடப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் நம் நாட்டில் அவர்கள் தன்னடக்கத்துடன் வாழ்கிறார்கள். ஏழ்மையில் இன்பங் காண முயற்சிக்கிறார்கள். ஆடிப் பாடிக் களிக்கிறார்கள். கிராமங்களில் வாழும் உழைப்பாளிகள் தங்களின் கஷ்டங்களை பிறருக்கு எடுத்துச் சொல்லவும் சக்தியற்றிருக்கிறார்கள். ஆகையால், நான் அவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையில் செய்தி எடுத்துச் செல்லும் ஒரு தபால்காரனைப்போல கிராமம் கிராமமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறேன். ஏழைகளின் சார்பில், நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுத்து அவர்களை வாழ்விக்கச் செய்யுங்கள் என்று தெரிவிக்க வந்திருக்கிறேன். அதனால் கொடுப்பவர்களும் வாழ்க்கையில் சுகம் பெறுவார்கள். ஏழைகளுக்கு நிலம் கிடைத்தவுடன் சும்மா உட்கார்ந்து சாப்பிட முடியாது. வியர்வை சிந்த உழைத்து உற்பத்தி செய்து உணவு தேடிக் கொள்ளுவார்கள். பூமி தானம் வழங்கும் உங்களை மனதார வாழ்த்தி வாழ்நாள் முழுதும் கடமைப் பட்டிருப்பார்கள்'' என்று உருக்கத்துடன் பூமி தானம் வழங்கும்படிக் கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர், உழைப்பவர்களால் தான் உலகம் வாழ்ந்தாலும், அவர்கள் படும் கஷ்டங்களை விவரித்து, தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தவராய், பல முறை பேசவும் முடியாது தழுதழுத்த குரலில், "சிறிது

சிந்தித்துப் பாருங்கள். உலகம் உழைப்பவர்களுக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறது என்பது விளங்கும். அவர்கள் சமூக சேவைக் கென்றே பிறந்திருக்கிறார்கள். 'பகவான் கிருஷ்ணனின் கர்ம யோகிகளாக உலக சேவையில் ஈடுபட்டிருக்கிறோம்' என்பதும் அவர்களுக்குத் தெரியாது. ஏதோ வயிறு வளர்ப்பதற்காகப் பாடுபடுவதாகக் கருதுகிறார்கள். எஜமான்கள் சொன்னபடி கேட்கும் தாசர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். தங்களுக்கு வேலை கொடுப்பவர்களை நன்றியுடன் வாழ்த்துகிறார்கள். உழைப்பவர்களை எவ்வாறு புகழ்வது! உலகமே அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது. அவர்களின் சுகதுக்கங்களை நான் உணர்வதுபோல நீங்களும் உணர்வீர்கள். அனைவரும் அவர்களின் துக்கத்தைத் துடைக்கப் பாடுபட வேண்டும். ஒரு விதத்தில் அவர்கள் நமக்குத் தந்தை போன்றவர்கள். பெற்றோருக்கு மக்கள் செய்வது போன்று, இவர்களுக்கு சேவை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏழைகள் வேண்டுவதுதான் என்ன? உல்லாசமாகச் சுற்றி வருவதற்காக மோட்டார் கார் கேட்கவில்லை; சுகபோக வாழ்க்கைக்கு பங்களாவும் கேட்கவில்லை. பசியாற உணவும், குடியிருக்கச் சிறு வீடும், குழந்தைகளின் கல்விக்கு வசதி, இவைதான் அவர்கள் வேண்டுவது. 'ராமாயணம்', 'குர்ரான்' யாராவது படித்து சொல்லக் கேட்டு ஆத்ம திருப்தியடைகிறார்கள். இந்த நம் சகோதரர்களின் க்ஷேம லாபங்களில் சிந்தனை செய்து கவனிக்காவிட்டால், நம் வாழ்க்கையில் திருப்தியிராது. நாம் சந்தோஷமாக வாழ முடியாது. இதைச் சொல்லவே நான் கிராமம் கிராமமாகச் சுற்றிக்கொண்டிருக்கிறேன். கிராமங்களில் ஏழைகள் வாழ வேண்டுமானால், அவர்களுக்கு நிலம் கிடைக்க வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டார்.

பிரார்த்தனைக் கூட்டத்தின்போது சிறிய விவசாயிகளாக 42 பேர் 180 ஏக்கர்வரை பூமி தானம் அளித்தார்கள். கால், அரை ஏக்கர் விகிதம் பலர் கொடுத்தார்கள். இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் சட்ட சபை அங்கத்தினர் ஒருவர் தனக்கிருந்த 20 ஏக்கர் முழுதையும் அர்ப்பணித்துவிட்டார். இதுவரை லக்கிம்பூர் ஜில்லாவில் 1,300 ஏக்கர் நிலம் கிடைத்திருக்கிறது. இந்த ஜில்லா வாசியாகிய, மாகாண காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி ஸ்ரீ பன்சீதர்ஜியும் அவருடைய சக ஊழியர்களும் 21,000 ஏக்கர் நிலம் பூமி தானத்திற்காகச் சேர்க்க தீவிரமாக வேலை செய்து வருகிறார்கள்.

பூஜ்ய வினோபாஜி ஸீதாபூர் ஜில்லாவில் கால்நடை யாத்திரையை ஆரம்பித்திருக்கிறார்.

ச. ஜெகந்நாதன்

* * *

"குறுகிய மனப்பான்மையால் கிடைக்கும் லாபம் கொஞ்சம்; நஷ்டந்தான் அதிகம். சமூக நன்மைக்காகத் தங்கள் உடைமைகளத்தனையும் தத்தம் செய்த சந்நியாசிகள் கொடுப்பது கொஞ்சமாயினும், அதனால் அவர்களுக்குக் கிடைக்கும் பயன் அபரிமிதமானது. ஆதலால், ஜனங்கள் தங்கள் நிலத்தில் ஒரு பகுதியை நிலமில்லாதவர்களுக்காக தானமாய்க் கொடுக்கவேண்டும். இதனால் எல்லையற்ற அன்பும் நன்றியும் அந்நிலத்தைப் பெறுபவர்களிடமிருந்து கிடைக்கும். தன் உடைமைகளைத் தன் வீட்டின் அளவுக்கே வரையறுத்து வைக்கும் மனிதனின் மனப்பான்மை எவ்வளவு குறுகியது என்றார் துளசிதாசர். எல்லோரும் ஒருவரே என்றும், தம் சம்பத்து எந்தப் பெட்டியும் ஸ்தாபனமும் கொள்ளமுடியாத அளவுக்கு எங்கும் பரவியிருப்பதாகவும் பாடுகிறார் துகாராம் சுவாமிகள். நான் சொல்வதெல்லாம் கற்பனையோ, காவிய ரீதியானதோ அல்ல; அனுபவ வாயிலாகவே எதுவும் சொல்கிறேன். "ஈயாத லோபிகள் திருடர்களின் தாய் தந்தையர்" என்கிறது உபநிஷத். ஆனால் கம்யூனிஸ்டுகளின் தாய் தந்தையரும் அவர்களேதான். எங்கு கருமித்தனம் குறைகிறதோ அங்கு கம்யூனிஸமும் இல்லாமற் போய்விடும். சேர்த்துவைக்காமல் சமூக சேவையில் ஈடுபடுகிறீர்கள் என்று கம்யூனிஸ்டுகள் உணர்வார்களானால், அவர்களும் உங்களுடன் சேர்ந்து ஏழைகளின் சேவையில் ஈடுபடுவார்கள்." இவ்வாறு கோலகோகர்நாத்தில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் ஆச்சாரிய வினோபாஜி பேசுகையில் குறிப்பிட்டார்.

பூமிதான யக்ஞத்தைப்பற்றிய பாட்டுகளுடன், விளம்பரங்களைத் தூக்கிக்கொண்டு, ஒரு பெரிய ஊர்வலம் நடைபெற்றது. "பூமிதான யக்ஞத்தை நிறைவேற்றி வைப்போம்," "ஆச்சார்ய வினோபாஜிக்கு

ஜே", "மகாத்மா காந்திக்கு ஜே" என்னும் கோஷங்கள் கிளம்புகின்றன. சுதந்திரப் போராட்டத்தின்போது இம்மாதிரியான ஊர்வலங்கள் நடந்தது நினைவுக்கு வருகிறது. இரண்டிலும் ஒரேவிதமான உற்சாகம்! மகாத்மா காந்தியடிகளுக்கு மிக்க பிரியமானவரும் நெருங்கியவருமான விநோபாஜி இந்த பொருளாதார சுதந்திரப்போரை உரிய காலத்தில்தான் ஆரம்பித்திருக்கிறார். அஹிம்சா புரட்சி, அதனால் சமூகத்திலும் தனி மனிதரிடத்தும் உண்டாகும் மாறுபாடுகள், மனிதருக்கிடையேயுள்ள பரஸ்பரத் தொடர்பு, நிலப்பிரசினையின் அவசியம் ஆகிய வற்றுக்கு ஒவ்வொரு நாளும் புதிய புதிய முறையில் விளக்கம் கொடுத்து வருகிறார் ஸ்ரீ விநோபாஜி. குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் உள்ள உறவுபற்றிக் குறிப்பிடும்போது அவர் சொன்னார்:

"குடும்பம் கௌரவத்தையும் பண்பாட்டையும் பொறுத்து தனித்தன்மை வாய்ந்தது. ஆனால் கிராமம் சுபீட்சமடைய வேண்டுமானால், செல்வத்தைக் கூட்டுப் பொறுப்பு ஆக்குவது அவசியம். குடும்பத்தின் பரம்பரைப் பண்பு குழந்தைக்குப் படிகிறது; குழந்தை குடும்பத்துடன்தான் வளர வேண்டும். ஆனால் செல்வமோ அந்தந்தக் கிராமம் முழுமைக்கும் சொந்தமானதென்று கருதவேண்டும். எல்லாக் காரியங்களும் கிராமத்தின் பொது நன்மைக்காக நடைபெறவேண்டும். கூட்டுப் பொறுப்பையும் கூட்டுறவு நடவடிக்கைகளையும் குலைக்கும் ரீதியில் எதுவும் நடைபெறக்கூடாது. தனி மனிதன் சமூகத்தினுள் ஐக்கியமாகிவிட வேண்டும். நிரந்தரமான ஆத்மாவின் ஸ்தூலமான ஒரு புகலிடமே இந்த உடல் என்ற கருத்து வந்துவிட்டால், இயற்கையின் இருமை (சூடு-குளிர்ச்சி; பெருமை-சிறுமை முதலிய) நிலைகள் நம்மைப் பாதிக்க மாட்டா. மனித சமூகத்தின் ஒருமை நமக்குப் புலனாகும். இந்த உலகில் இத்தகைய மனிதர்களைக் காண்பது அரிதுதான்; ஆனால் உலகத்தை வழிநடத்திச் செல்லும் ஆற்றல் அவர்களுக்குத்தான் உண்டு. சாதாரணர்களுக்கு இது சாத்தியமல்ல. எனவே, சூரியன், காற்று, தண்ணீர் ஆகிய வற்றைப்போல் நிலமும் எல்லோருக்கும் பொதுவானது என்று எளிய முறையில் சொல்கிறேன். ஒரு காலத்தில் பெருமையும் சக்தியும் பெற்றிருந்த நாடு, இன்று சுயநலத்தில் மூழ்கிவிடுவது கூடாது. அது நிலைத்திருக்க வேண்டுமானால், நிலம் எல்லோருக்கும் பொதுவான தென்பதை மக்கள் சரிவர உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். சுயநலத்தில் மூழ்குவதால், நாடு சீரழிந்துவிடும். இவ்வளவு பெரிய நாட்டில் குறுகிய அற்ப புத்திக்கு இடம் எங்கே? நல்ல விரிந்த மனப்பான்மை கொண்ட மக்கள் உள்ள நாடுதான் முன்னேற்றமடைய முடியும்."

"என்னுடைய போதனைகளை உணர்ந்தாலும் தங்களுக்கு குழந்தைகளும் குடும்பமும் இருப்பதால், நிலமில்லாதவர்களுக்குத் தங்கள் நிலத்தில் ஒரு பகுதியைக் கொடுக்க முடியவில்லை யென்று சிலர் சொல்கிறார்கள். நிலமற்ற ஏழைகளுக்கும் குழந்தைகுட்டிகள் உண்டு என்பதை அவர்கள் ஏன் மறந்துவிடுகிறார்கள்! ஒரு சில ஏக்கர் நிலத்தை வேண்டிப் பெறுவது எனது நோக்கமல்ல. தரித்திரநாராயணனின் பிரதிநிதியாக அவனுடைய உரிமையைத்தான் நான் கேட்கிறேன். பிச்சையாக இடும் பிடி அன்னமும் சில செப்புக்காசுகளும் ஏழைகளைக் கடைத்தேற்றமாட்டா; அவர்களை அடிமைப்படுத்தவே செய்யும். பணம் அவர்களைத் தீய வழிகளிலும் பழக்கங்களிலும் புகுத்திவிடும். உற்பத்தியின் சாதனமான நிலம் அவர்களிடம் போய்ச் சேரவேண்டும். மக்களின் ஆத்ம பலத்தை வளர்த்து அதன் மூலம் பொருளாதார சுதந்திரத்தை ஸ்தாபிப்பது தான் எனது விருப்பம். குடும்பத்தின் குறுகிய எல்லைக்குள் கட்டுப்பட்டிருக்கும் அன்பை வெளிப்படுத்தி, கிராமம் முழுதும் பரவச்செய்வதே என் ஆசை. நம் கிராமங்கள் 'கோகுலம்' ஆகவேண்டும். கிருஷ்ண பரமாத்மா ஐயாயிரம் வருஷங்களுக்கு முன் வாழ்ந்தவர் அல்ல; அவர் இங்கு, இப்போது எல்லோரது இதயங்களிலும் வீற்றிருக்கிறார். அவருடைய 'கோகுல' உணர்ச்சி நம் எல்லோரிடமும் பரவவேண்டும. உங்களது உடைமைகளிலிருந்து விடுபட்டு, உற்பத்தியின் சாதனங்களைச் சமூகத்திற்குக் கொடுங்கள். புதிய வாழ்வுக்கான வழி இதுதான்."

இங்கு 440 ஏக்கர் நிலமும் இரண்டு கிணறுகளும் ஒரு ஜோடி எருதும் கிடைத்தன.

தாமோதர்தாஸ் மூந்தடா

★ மஹாதேவ் தேசாயின் இறுதி நாட்கள் நான்கு ★

சுசீலா நையார்

(சென்ற இதழ் 145-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இரு ஸ்நான அறைகளுக்குமிடையில் உள்ள சுவர் கூரை வரையில் எழுப்பப்பட வில்லையாகையால், ஒரு அறையில் பேசினால் அடுத்த அறைக்குச் சுலபமாகக் கேட்கும். வலது புறத்திலுள்ள ஸ்நான அறையை பாபூ உபயோகிப்பதோடு, பிறரும் தேவையான பொழுது உபயோகித்துக் கொள்ளலாம். இந்த அறையில் கமோடுக்குமேலே விளக்கு வசதியிருக்கிறது. பாபூ எப்பொழுதும் கக்கூஸுக்குப் போகும்பொழுதும் படிக்கும் வழக்கமாகையால், அவருக்கு இந்த அறை பிடித்திருந்தது. ஆனால் இங்கே ஆள் உயரத்தில் இருந்த நிலைக் கண்ணாடி பாபூவுக்குப் பிடித்தமானதல்ல. இரண்டாவது அறையை ஸரோஜினி நாயுடு உபயோகித்து வந்ததோடு, பாவும் மீராபஹனும் உபயோகிப்பதுண்டு. அநேகமாக ஒவ்வொரு நாளும் நான் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு புதிய ஆடையை உடுத்தும்பொழுது மஹாதேவ் பாய், ஸரோஜினி நாயுடுவின் அறையிலிருந்து வெளிவருகிறவர், "ஏ சுசீலா, எவ்வளவு நேரம் நீ குளிப்பாய்?" என்று கூவுவார். இன்று என்றுமில்லாத வகையில் அவருக்கு நல்ல பசியாயிருந்தது. பாபூ அவரை வற்புறுத்தி நான் வருவதற்கு 45 நிமிஷங்களுக்கு முன்பே சாப்பாட்டிற்கு அனுப்பிவிட்டார். பிறகு பாபூ என்னைக் கூவி அழைத்து, "உனக்கு ரொம்ப நேரமாகிறது. எவ்வளவு நாழியாக மஹாதேவ் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாரென்று தெரியுமா?" என்றார். நான் மஹாதேவ் பாயினிடம், "மஹாதேவ்பாய், நீங்கள் எனக்காகக் காத்திருந்தீர்கள். உரிய நேரத்தில் நீங்கள் சாப்பிடப் போய்விடுங்கள், அடுத்தாற்போல் நானும் வந்துவிடுகிறேன்" என்றேன். மறு நாள் பாபூவின் ஸ்நான அறையிலிருந்து நான் வெளிவந்தபொழுது நான் அவரிடம் இதற்கென்றே போய், "நீங்கள் சாப்பிடப் போங்கள், எனக்கு நேரமாகும்" என்றேன். ஆனால் நான் ஸ்நானம் செய்துவிட்டு வெளி வந்து பார்த்தால் மஹாதேவ்பாய் எனக்காகக் காத்துக்கொண்டிருந்தார். எனக்கு தனியாகச் சாப்பிடுவதென்றால் பிடிக்காதென்பது அவருக்குத் தெரியும். சாப்பாட்டு மேஜை ஸரோஜினி நாயுடுவின் அறையில் இருந்தது. இங்கே வருவதற்குமுன் எனக்கு அவருடன் பழக்கமில்லையென்றே சொல்லலாம். ஆகையால் மஹாதேவ்பாய் சாப்பாட்டு நேரத்தில் என்னுடன் இருந்து வந்ததோடு முடிந்தவரையில் பிற வேலைகளிலும் எனக்கு உதவி வந்தார்.

மஹாதேவ்பாய் ஸரோஜினி நாயுடுவின் அறைக்குப் போய் இன்ஸ்பெக்டர் ஜெனரலுடன் பேசலானார். நான் பாபூவுக்கு மாலீஷ் செய்துகொண்டிருந்தேன். பேச்சினிடையில் சிரிப்பின் ஒலி கேட்டுக் கொண்டேயிருந்தது. நான் ஒரு காலை மாலீஷ் செய்துவிட்டு மற்றொரு காலை ஆரம்பிக்கப்போன தருணத்தில் ஸரோஜினி நாயுடு, "சுசீலா, இங்கே வா" என்று என்னைக் கூவி அழைத்தார்.

நான், 'இன்ஸ்பெக்டர் ஜெனரல் எல்லோரையும் பார்க்க விரும்புகிறார்போலும். இரண்டாவது காலையும் விரைவில் முடித்துக் கொண்டு போகலா'மென்று எண்ணினேன். இதற்குள் இரண்டாவது குரல் வந்துவிட்டதோடு, பா இரைக்க இரைக்க ஓடிவந்து, "மஹாதேவுக்கு என்னவோ ஆகிவிட்டது. அவருக்கு ஏதோ நோய் கண்டுவிட்டது. வாதம்போல் தோன்றுகிறது" என்றார். நான் பாபூவின் காலை விட்டுவிட்டு ஓட்டமாய் ஓடினேன். ஸரோஜினி நாயுடு மீண்டும் கூவினார். நான் அவர் அறையை அடைந்தேன். இதற்குள் அதிகமானால் ஒரு நிமிஷம் ஆகியிருக்கும்.

போய்ப் பார்த்தால் மஹாதேவ்பாய் ஸரோஜினி நாயுடுவின் அறையில் பெஞ்சியின் மேல் நினைவற்றுக் கிடந்தார். முகத்தில் விறைப்புத் தோன்றிற்று. நான் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே தலையிலிருந்து கால் வரையில் ஒரு பலமான குலுக்கும் ஏற்பட்டது. நான் நாடியைப் பிடித்துப்பார்த்தேன். நாடியே தென்படவில்லை. ரத்தத்தின் அழுக்கம் எப்படியிருக்கிற தென்று

பார்க்க முயன்றேன்; ரத்த ஓட்டமேயில்லை. இருதயத்தின்மீது ஸ்டெதாஸ்கோப் வைத்துப் பார்க்க, அங்கும் ஸர்வ மௌனமாயிருந்தது; ஹிருதயத்தின் துடிப்பு கேட்கவில்லை. நான் "பாபூவைக் கூப்பிடு, இவர் போய்விட்டார்" என்றேன். உதடுகள் அசைவதுபோல் தோன்றின. சுவாசம் சிறிது நின்று நின்று போய்க்கொண்டிருந்தது. நான் என் மருந்துப் பெட்டியைக் கொணர்ந்தேன். ஆனால் அதைத் திறக்கவே முடியவில்லை. நான் அதைத் திறக்க முயன்றபடி, "சாராயம் கொண்டுவா, இருதயத்திற்கு மருந்து கொடு" என்று ஏவிக்கொண்டே இருந்தேன்.

கை கால்கள் ஜில்லிடத்தொடங்கிவிட்டன. கையிலோ மருந்து இல்லை. பண்டாரி மருந்து கொண்டுவரப் போயிருந்தார். ஸரோஜினி நாயுடு 'ஓ டி கொலோனு'ம் தேனும் கலந்து கொடுத்துவிட்டு, "இது சாராயத்தைப்போல் வேலை செய்யும்" என்றார். நான் சாராயம் கேட்டது மேலே பூசுவதற்காக. ஆனால் ஸரோஜினி நாயுடு இவ்வாறு கலந்து கொடுத்ததும் நான் அதை மஹாதேவ் பாயின் வாயில் ஊற்றிவிட்டேன். விழுங்குவதற்கு அவருக்கு இதுவரையில் சக்தியிருந்தது. விழுங்கினார். மிஸ்டர் கடேலி மருந்துப்பெட்டியின் பூட்டை உடைத்து அதைத் திறந்துவிட்டார். அதிலிருந்து 'கால்ஷியம் குளுகோநெட்' தான் கிடைத்தது. ஹிருதயத்தை வலுப்படுத்த உதவும் வேறு மருந்து எதுவும் இல்லை. நான் டில்லியிலிருந்து அவசர அவசரமாகக் கிளம்பி பம்பாயிலும் ஓட்டமும் நடையுமாகச் சுற்றியதால், என் பெட்டியில் அவசர ஆபத்துக்கு வேண்டிய மருந்துகளை சேகரித்து வைத்துக்கொள்ளவே முடியாமற் போயிற்று. நான் மஹாதேவ் பாயின் கையைத் தூக்கினேன். கை துவண்டு போய்க் கிடந்தது. நரம்பில் கால்ஸியம் குளுக்கோநெட்டை ஊசியால் ஏற்றினேன். இதற்குள் பண்டாரி ஒரு சாராயப் புட்டியை எடுத்துக்கொண்டு வந்தார். நான் "கார்டியக் ஸ்டிமுலண்ட்' எங்கே?" என்று கேட்கவே, அவர் மீண்டும் கீழே ஓடினார். இதற்கிடையில் நான் சாராயத்தை வாயில் ஊற்றினேன். ஆனால் விழுங்கும் சக்தி மிகவும் குறைந்து போயிருந்தது. ஊற்றியது வெகுநேரம் வாயிலேயே இருந்தது. பிறகு பாபூ, "நான், அந்த சமயத்தில் உன் கையைப் பிடித்து நிறுத்த விரும்பினேன். ஆனால் பேசாமலிருந்து விட்டேன். உன் ஸ்தானத்தில் வேறு எவரேனும் இருந்திருந்தால் நான் சாராயம் கொடுக்க அனுமதித்திருக்கவேமாட்டேன்" என்றார்.

மஹாதேவ் பாய்க்கு வாந்தி வரத் தொடங்கிற்று. ஆனால் அதை வெளியே கொணர்வதில் சிரமம் இருப்பதாகக் காணப்பட்டது. நான் தாடையைத் தாங்கிக் கொண்டு சுவாசக்குழாயில் வாந்தியின் அம்சம் எதுவும் புகுந்துவிடாதிருப்பதற்காக தலையை ஒரு பக்கமாய்த் திருப்பி வைத்தேன். பாபூவோ நான் கூப்பிட்டனுப்பிய 2,3 நிமிஷங்களுக்குள்ளேயே வந்துவிட்டார். அவர் மாற்றி மாற்றி மஹாதேவ்பாயின் கையைப் பிடித்துப் பார்ப்பதும் தலையைத் தொட்டுப் பார்ப்பதுமாயிருந்தார். அவர் அவருடைய கண்ணுக்கு நேராக உற்றுப்பார்த்துக் கொண்டு நின்றுகொண்டிருந்தார். "மஹாதேவ் என்னை ஒருமுறை கண்ணைத் திறந்து பார்த்துவிட்டால் எழுந்து நின்றுவிடுவாரென்பது என் நம்பிக்கை" என்றார்.

ஸரோஜினி நாயுடு என்னைக் கூவிய பொழுது பண்டாரியைப் பார்ப்பதற்காகக் கூப்பிடுகிறாரென்று பாபூ எண்ணிக்கொண்டார். அவரே என்னை அழைக்கவந்த பொழுதும் மஹாதேவ் பாயிக்கு ஏதோ உடம்பு என்று சொன்னது அவர் காதில் விழவில்லை. அவர் ஏதோ படித்துக்கொண்டிருந்தார். பண்டாரி வந்திருப்பதனாலேயே என்னை அழைக்கிறார்களென்று எண்ணினார். நான் அனுப்பிய ஆள் அவரைக் கூப்பிடப் போன பொழுதும் பண்டாரியைப் பார்ப்பதற்கே தாமும் அழைக்கப்படுவதாக எண்ணிக்கொண்டார். பிறகு மஹாதேவ் பாய்க்கு நோய் என்று கேட்டபிறகும், ஏதோ பெரிய ஆபத்தான நோயென்று எண்ணவில்லை. இதற்கு முன் அவருக்குச் சில சமயங்களில் வரும் மயக்கமே இப்பொழுதும் வந்திருக்கும், சிறிது நேரத்தில் குணமாகிவிடும் என்றே கருதினார்.

ஸரோஜினி நாயுடு பாபூவிடம் மஹாதேவ் பாய் அறையின் நடுவில் நின்றுகொண்டிருந்தார். பண்டாரியும் ஸரோஜினி நாயுடுவும் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்கள். மஹாதேவ் பாய் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். வேடிக்கையும் விநோதமுமாயிருந்தது.

எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டிருந்தார்கள். இந்தச் சிரிப்பின் தொனியே எங்களுக்கு வெளியிலும் கேட்டுக்கொண்டிருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் மஹாதேவ்பாய் பண்டாரியிடம், "எனக்காக ஆரோக்கிய சம்பந்தமான பத்திரிகைகள் வேண்டு"மென்று கேட்டார். பிறகு இருந்தாற்போல் "எனக்கு மயக்கமாக வருகிறது" என்றார். அதற்கு பண்டாரி "அஜீரணமாயிருக்கும். படுத்துக்கொள்ளுங்கள்" என்றார். மஹாதேவ்பாய் நடந்துசென்று 3, 4 கெஜ தூரத்தில் கிடந்த பெஞ்சியின்மீது படுத்துவிட்டார். பண்டாரி நாடியைப் பிடித்துப் பார்க்கவே அது மிகவும் வேகமாகவும் மெலிந்தும் காணப்பட்டது. அவர் ஸரோஜினி நாயுடுவிடம் என்னை அழைக்கும்படிச் சொல்லிவிட்டு போனில் ஸிவில் ஸர்ஜனைக் கூப்பிடுவதற்காக மேலே போனார். மஹாதேவ்பாய் பேசிக்கொண்டிருந்தபொழுது கம்பள வெய்ஸ்ட்கோட் அணிந்திருந்தார். கட்டிலில் படுக்கப்போனபொழுது அவர் அதைக் கழற்றியிருந்தார்போலும். நான் போன சமயத்தில் அது பாதி கழன்றிருந்தது.

வாந்தி எடுத்ததோடு அவர் கனைத்துக் கொண்டுமிருந்தார். அந்தக் கனைப்பு பயங்கரமானதாயிருந்தது. அது ஏதோ ஒரு குகையிலிருந்து வருவதுபோல் தோன்றிற்று. அதை பாபூவினாலும் சகிக்க முடியவில்லை, எங்களாலும் கேட்க முடியவில்லை. சுவாசம் நின்று நின்று ஓடிக் கொண்டிருந்தது. கை கால் இழுப்பு அதிகமில்லையாயினும் இடையிடையே ஒரு நடுக்கம் காணப் பட்டது. ஒரு சந்தர்ப்பத்தில் முகம் பக்ஷவாதம் வந்ததைப் போல் ஒரு பக்கம் விகாரமாகக் கோணிப் போய் விட்டது. இந்த நோய் காரணமாக இவருக்கு ஒருக்கால் பக்ஷவாதம் ஏற்பட்டு விடுமோ என்று நான் எண்ணினேன். ஆனால் மஹாதேவ்பாயைப் போன்ற புண்ணியாத்மாக்களுக்கு இந்த அவஸ்தை எப்படி ஏற்படும்? திடீரென்று உடலில் பலமான ஒரு குலுக்கு ஏற்பட்டது. தாடை இறுக்கிக் கொண்டதைப் பார்த்தால் தாடை எலும்பே முறிந்து விடும்போல் தோன்றிற்று. அப்பொழுது நான் தாடையைப் பிடித்துக் கொண்டிருந்தேன். பிறகு அது தளர்ந்து விட்டது. நெஞ்சுக் கடைதல் குறைந்தது. சுவாசம் மேலும் மெலிந்துவிட்டது. நான் பாபூவிடம், "பாபூ ஜம்னாலால்ஜியைப் போல் இவர் போய்க் கொண்டிருக்கிறார்" என்றேன். நான் "போய்க் கொண்டிருக்கிறார்" என்று சொன்ன பிறகு தான் பாபூ 'நிலைமை உண்மையில் படுமோசமாகி விட்டது, மஹாதேவ் பாயின் உயிர் போய்க் கொண்டிருக்கிறது' என்பதை உணர்ந்தார் போலும். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் தம் கண்ணைத் திறந்தது போலும் பேச முயலுவது போலும் தோன்றிற்று. நான் உடனே சந்தோஷத்துடன், "நல்ல வேளை, பிழைத்து விட்டார்!" என்றேன். ஆனால் அது வீண் பிரமையே. மீண்டும் கண்கள் மூடிக்கொண்டன. நின்று நின்று ஓடிக் கொண்டிருந்த மூச்சு மேலும் மெதுவாகி விட்டது. உடலில் நீலம் காணத் தொடங்கி விட்டது.

பாபூவோ அவருடைய கண்களை உற்று நோக்கியபடியே இருந்தார். மஹாதேவின் பார்வை தம் பார்வையில் கலக்குமாகில் மஹாதேவ் எழுந்து உட்கார்ந்து விடுவார் என்ற எண்ணத்தில் தம் முழு சக்தியையும் தம் பார்வையில் செலுத்திக் கொண்டிருந்தார். ஒரு முறை அவருடைய கண்கள் திறந்தன வென்றும், ஆனால் கண்களின் ஒளி மங்கிப் போயிருந்ததென்றும் சொன்னார். பார்க்கும் சக்தியே போய்விட்டது. அந் நிலையில் அவர் பேச முயலுவதாவது! நெஞ்சில் கடையும் சத்தந் தான் கேட்டுக் கொண்டிருந்தது.

இதையெல்லாம் எழுதுவதற்கு இவ்வளவு நேரம் ஆனபோதிலும், இவ்வளவும் மின்னல் வேகத்தில் நடந்து விட்டன. எனக்கோ எல்லாம் ஒரு கண்ணிமைப் பொழுதில் முடிந்து போனதாகத் தோன்றிற்று. நான் சாராயக் கரண்டியை அவர் வாயில் இட்டுக் கொண்டிருக்கும் பொழுது பண்டாரி மருந்துடன் வந்து சேர்ந்தார். நான் இஞ்செக்ஷன் போடப் போன பொழுது அவர் தடுத்து, "நரம்பிலும் ஒரு ஊசி போடுங்கள்" என்றார். ஆகவே ஒன்று சதையிலும் ஒன்று நரம்பிலுமாக இரண்டு ஊசி போட்டேன்.

மஹாதேவ் பாய் வியர்வையில் நனைந்து கொண்டிருந்தார். ஆரம்பம் முதலே அவருடைய முகமும் கையும் சலவைக் கல்லைப் போல வெளுத்துப் போயிருந்தன. அந்த வெள்ளைச் சலவைக் கல்லின் மீது வியர்வை முத்துக்கள் சிதறிக் கிடந்தன. ஊசி போட்டதால் சிறிதும் குணம் ஏற்பட

★ காந்தியும் மார்க்ஸும் ★

அடிப்படையில் வேறுபட்ட இரண்டு தத்துவங்கள்

ஆச்சாரிய வினோபா பாவே

(சென்ற இதழ் 145-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்த விவாதத்திற்கு வேறு சிலர் பதில் கூறுகிறார்கள்:— "நிரந்தரமான பண்புகள் அழிந்துபோகாதபடி சமுதாயத்தை மாற்றியமைக்கவேண்டு மென்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். சன்மார்க்கத்தின் மேலுள்ள நம்பிக்கை தளர்ந்துபோகும்படி விட்டுவிடக் கூடாதுதான். ஆனால் குறிப்பிட்ட ஒரு நிலையில் (நைமித்திகம்) வைத்துப் பார்க்கும்போது ஒவ்வொரு பொது விதிக்கும் (நித்திய-தர்மம்) விதிவிலக்குண்டு என்பதை மறந்துவிடலாகாது. உதாரணமாக, பிரார்த்தனை செய்வது உங்கள் தினசரி ஒழுக்கம் என்று வைத்துக்கொள்வோம். அதை தினசரி குறிப்பிட்ட நேரத்தில் தவறாமல் செய்துவருகிறீர்கள். ஒரு நாள் பிரார்த்தனை நேரத்தில் பக்கத்து வீடு தீப்பற்றி எரியுமானால், அப்பொழுது தீயை அணைக்க விரைந்து ஓடமாட்டீர்களா? தீயை அணைத்தபிறகே நீங்கள் மனச்சாந்தியுடன் பிரார்த்தனை செய்வீர்கள். இதுதான் "நித்திய நைமித்திக விவேகம்" (பொதுப்படையான கடமை எது, உடனடியான கடமை எதுவெனப் பகுத்தறிதல்). இந்தப் பகுத்தறிவு வாழ்க்கையின் சகல துறைகளிலும் அவசியமே. ஹிம்சையைத் தவிர வேறு வழியில்லை என்று கம்யூனிஸ்டுகள் கூறுவதையும் நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இந்தியா போன்ற ஜனநாயக தேசத்தில் நாம் விரும்பும் மாறுதலை பலாத்காரமின்றி பொதுத் தேர்தல்கள்மூலம் சித்திபெறச் செய்யலாம் என்று நாங்கள் நம்புகிறோம். நாம் விரும்பும் மாறுதலுக்கேற்பப் பொது மக்களின் அறிவும் அபிப்பிராயமும் வளர ஒரு சில வருஷங்கள் ஆயினும் பரவாயில்லை, காத்திருக்கலாம். நமது நோக்கம் நிறைவேறும்வரை பொறுமையுடன் சதா உழைத்துக் கொண்டிருப்பதே நம் கடமை. ஆனால் அதிகாரத்திலிருக்கும் கட்சியார் பொதுத் தேர்தல் காலத்தில் பாரபட்சமின்றி நடந்து கொள்ளாமல் தங்கள் பதவியையும் அதிகாரத்தையும் துஷ்பிரயோகம் செய்யும் போது அதைத் தவிர்க்க அந்தச் சமயத்திலும் பரிசுத்தமான அஹிம்சை வழியையே வலியுறுத்திக்கொண்டிருப்போமானால் அது நாம் விரும்புவதற்கு முற்றிலும் நேர் விரோதமான பலனையே தரும். ஆகவே இத்தகைய தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் (நைமித்திக தர்மம்) மிகுந்த மன வேதனையோடேனும் அஹிம்சையல்லாத வேறு வழிகளையும் கையாளுவது நியாயமற்றதென நாங்கள் கருதவில்லை. ஆபத்துக்குத் தோஷமில்லை (ஆபத் தர்மம்) என்ற அளவில் மன்னிக்கத்தக்க பிழை என்று வேண்டுமானால் அதைக் கொள்ளலாம். ஆனால் அதைத் தயவுசெய்து பாவம் அல்லது பெருங் குற்றம் (அதர்மம்) என்று கருதவேண்டாம். ஆபத்துக் காலங்களில் அபூர்வமாகக் கையாளப்படும் இச்செயல்களால் நிரந்தரமான

மஹாதேவ் தேசாயின் இறுதி நாட்கள் நான்கு

முன் பக்கத் தொடர்ச்சி

வில்லை. நாடி ஏற்கெனவே நின்று விட்டது. இப்பொழுது சுவாசமும் நின்று போய் விட்டது. ஸிவில் ஸர்ஜன் வருவதற்குள் பட்சி கூட்டை விட்டுப் பறந்து போய் விட்டது. ஆட்டம் ஓட்டமெல்லாம் அடங்கிப் போயின. ஸிவில் ஸர்ஜன், "ரத்த அமுக்கம் கடுமையாயிருந்ததோ?" என்று கேட்டதற்கு நான், "இல்லை" யென்றேன். அவர், "அப்படியானல் 'காரோனரி திராம்போஸிஸ்' ஸாயிருக்கும்" என்றார். "அவருக்குத் தலையில் நோவு தோன்றுவதுண்டா" என்றார். நான், "இல்லை. ஆனால் மயக்கம் வருவதுண்டு. இந்தத் தடவையும் காரோனரி திராம்போஸிஸின் முக்கிய அறிகுறியான நோவு எதுவும் ஏற்படவில்லை" என்றேன். "ஐயோ பாவம்" என்று சொல்லி விட்டு அவர் போய் விட்டார்.

முற்றிற்று.

★ ★ ★

மனிதப்பண்பு அழிந்துபோகுமென்று சொல்லிவிட முடியாது. நேர்மையான வழியினின்றும் சற்று விலகிவிட்டோமென்று வைத்துக் கொண்டாலும், பின்னால் அந்தத் தவறைச் சரிப்படுத்திக்கொள்ள முடியும். ஒரு இயந்திரத்தைச் செப்பனிடுவதற்காக அதன் திருகாணிகளைத் தளர்த்தி பின்னால் அவற்றை இறுக்கிவிடுகிறோமல்லவா! அதுபோலவே, அதிகார மாற்றமேற்பட்டு அடுத்த நிமிஷத்திலேயே நிரந்தரமான மனிதப்பண்புகள் அதிக வலுப்பெற்றுவிடும். இம்முறை ஆப்பை ஆழத்தில் செலுத்த அதைச் சற்று அசைத்துக் கொடுத்து அடிப்பதை ஒக்கும். தற்காலிகமாகக் கையாளப்படும் ஹிம்சை அஹிம்சையைக் காப்பாற்றுவதற்கே. அவ்வாறு காலமறிந்து செய்யாவிடின் ஒருவேளை நாம் அஹிம்சையினின்று வெகுதூரம் நழுவியிருக்கக்கூடும். ஒரு செடியானது இன்னும் நன்றாக வளரவேண்டுமென்று அதன் தழைகளை அரிந்து விடுகிறோமல்லவா! இங்கு செடியின் தழையை அரிவதற்கும் அதன் அடிமரத்தை வெட்டுவதற்கு முள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், இன ஆதிக்கம் முதலியன அஹிம்சைக்கு விரோதமானவை. பலாத்கார நடவடிக்கைகளில் முழு நம்பிக்கை கொண்டுள்ள கம்யூனிஸமும் அஹிம்சைக்கு விரோதமானதே. இதைக் கம்யூனிஸ்டுகள் அறியாமலிருக்கலாம். ஆனால் அவர்களுடைய பலாத்காரச் செயல்களாலுண்டான பலனைப் பார்க்கும் போது அவர்கள் அறிந்தே செய்கிறார்கள் என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே நாங்கள் கம்யூனிஸத்தை ஆதரிக்கவில்லை. அதே சமயத்தில் ஒழுக்கம், பண்பு என்பன வற்றின் பெயரால் தற்போதைய அல்லல்களையும் அடக்கு முறையையும் நீடித்துக் கொண்டிருக்க அனுமதிப்பதானது, குறிப்பிட்டதொரு பண்புக்கு அளவிற்கு மிஞ்சிய மரியாதை செலுத்துவதாகும். மேலும், அன்னியர் ஆக்கிரமிப்பையோ, உள் நாட்டுக் குழப்பத்தையோ அடக்க ஆயுதம் தாங்குவது ஹிம்சையாகாதெனக் கூறுகிறோம். அதை "தண்ட தர்மம்" (துஷ்ட நிக்ரஹம்) என்றழைக்கிறோம். ஆகவே இத்தகைய சில விதி விலக்குகளுடன் கூடிய அஹிம்சையை ஒப்புக் கொள்கிறோம்" என்று விவாதிக்கின்றனர்.

பரிசுத்த அஹிம்சா வாதிகளின் தத்துவமும் கம்யூனிஸ்டுகளின் தத்துவமும் ஒன்றுக்கொன்று நேர் விரோதமான இரண்டு அடிப்படைத் தத்துவங்களாகும். இவை தவிர, மேலே கண்ட வேறிரண்டு விவாதங்களும் இரண்டு தினுசான ஒழுக்கம், வழி முறைகளை அனுசரித்த கொள்கைகள். இவ்விரண்டினுள் முதலாவதை இந்த தேசத்தில் புத்தரும் காந்திஜியும் தீவிரமாகப் பரப்பினார்கள். மதாச்சாரியர்களில் ஒரு சிலரே இதை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இதை ஆதரிக்கும் சுருதி வாக்கியங்கள் மிகச் சிலவே. சுருதிக் கர்த்தாக்களில் பெரும்பான்மையோர் இரண்டாவது ஒழுக்கம், வழி முறையையே ஏற்றுக் கொண்டு எடுத்துக் கூறியிருக்கின்றனர். இந்திய தேசீயத்தில் பற்றுடைய பெரும்பாலான காங்கிரஸ்காரர்களும் காங்கிரஸிலுள்ள கோஷ்டிகளும் ஏறக்குறைய எல்லா சோஷியலிஸ்டுகளும் இந்த இரண்டாவது கூட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். காந்தீய வாதிகள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களிற் கூட அநேகர் இறுதியில் இந்தக் கூட்டத்திற்கு வந்து சேரக் கூடியவர்களே.

மேற் சொன்ன விளக்கமானது ஸ்ரீ கிஷோரிலால் அவர்கள் இங்கு சத்தியாக்கிரக தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட காந்திஜியின் கொள்கைகளுக்கும் பலாத்காரப் புரட்சியின் மூலம் சமுதாயச் சீர்திருத்தத்தை விழையும் கம்யூனிஸ்டுகளின் கொள்கைகளுக்கும் இடையிலுள்ள தாரதம்மியத்தைக் குறித்து மேற்கொண்டிருக்கும் விவாதத்திற்கு நம்மை இட்டுச் செல்கிறது.

(தொடரும்)

ஸ்ரீ கிஷோரிலால் மஷ்ருவாலா எழுதிய 'காந்தியும் மார்க்ஸிஸம்' என்ற ஆங்கில புத்தகத்திற்கு விநோபாஜி எழுதிய முன்னுரையின் ஒரு பாகம். இந்தப் புத்தகம் "ஸர்வோதய பிரசுராலய"த்தில் கிடைக்கும்; விலை ரூ. 1—8—0.

அஹிம்சையும் கருணையும்

காகா கலேல்கர்

(சீக்கிய குரு நானக்கின் தினத்தன்று ஹிந்தியில் பேசியது)

மோக்ஷம் என்ற சொல்லைப்போல் அஹிம்சை என்ற சொல் அடையமுடியாதது என்பது சிலர் கருத்து. இது இச்சொற்களின் குற்றமல்ல, இதுவே அவைகளின் குணம் என்பது என் எண்ணம். அஹிம்சை என்ற தத்துவமுள்ள வேறு சொல் வேண்டுமானல் அது அன்பு அல்லது தோழமை என்பதுதான். அன்பு என்ற சொல் இழுக்குக்கு உட்படுத்தப்படலாம். ஆனல் தோழமை என்பதில் இப்பயத்திற்கும் இடமில்லை. உண்மையில் பார்த்தால் அஹிம்சை, தோழமை, அன்பு அல்லது சிநேகம் என்ற சொற்களில் 'தனது' என்ற உணர்ச்சி ஏற்படுகிறது. நாம் நமது நன்மையையே விரும்புகிறோம், நமது குற்றங்களைக் குறைவாக எண்ணுகிறோம், நம் தவறுகளை உடனே மன்னித்துவிட்டு நாம் சீர்படும் சங்கற்பத்தில் நம்பிக்கை கொள்கிறோம். நம் உள்ளங்களில் நம்முடையது என்ற தொடர்பு உள்ள இடங்களிலெல்லாம் இப்படிப்பட்ட எண்ணங்கள் இயற்கையாக வெளியாகின்றன.

நம்முடையது, பிறருடையது என்ற வேற்றுமை இல்லாது, பிறர் நன்மையை விரும்புவதும், பிறர் நன்மைக்கும் சௌகரியத்திற்கும் தானே சிரமப்படுவதும், பிறர் குற்றங்களில் பொறுமை காட்டுவதுமே அஹிம்சை, தோழமை என்பதாம். தோழமை இருக்குமிடத்தில் பழிவாங்கும் உணர்ச்சி இருப்பதில்லை. பஞ்சாப் மாகாணம் அமிர்தசரசிலே ஜெனரல் டயர் நம் மக்களைக் கொலை செய்தபோது காந்திஜி சர்க்காரிடம் நியாயம் கோரினர்; ஆனல் ஜெனரல் டயருக்கு தண்டனை கொடுக்க விரும்பவில்லை என்றும் இத்துடன் சேர்த்துச் சொன்னர். காந்திஜி பின்பற்றிய இக்கொள்கையில் ஆச்சரியம் ஏதுமில்லை. ஆனல் சிறிது யோசித்தபின் நாட்டு மக்களனைவரும் இப் "பழிவாங்காமை" என்ற கொள்கையை ஒப்புக்கொண்டனர். நம் நாட்டுப் பண்பில் அஹிம்சை வேரூன்றியிருக்கிறது என்பது இதனல் தெரியவருகிறது. காந்திஜி போன்ற சிறந்த கர்மயோகிகளே மக்களின் உள்ளத்தில் நுழைந்து அங்கு படுத்து உறங்கும் அஹிம்சைத் தத்துவத்தைத் தட்டியெழுப்ப முடியும்.

இன்றைய நாள், மன்னிப்பதும் மன்னிப்புக்கோருவதும் என்பதற்கே. இவ்விரதத்தை, இம் முறையை, இப்படிப்பட்ட நாட்களை ஏற்படுத்தின மகா வீரர்களின் உள்ளங்களில் உண்மையான அஹிம்சை வாழ்ந்துவந்தது. அவர்கள் அமைதியுடன் தம் காரியத்தைத் தியாகம் செய்யவும் முடிந்தது. நாம் வாயினல் அஹிம்சையை ஆமோதிப்பதுடன், அநியாயம் செய்பவனுக்குத் தண்டனையும் ஏற்படச் செய்கிறோம். இம்மட்டுமா! பல தடவைகளில் பாவத்திற்குப் பழி வாங்க மகா பாவம் செய்யவும் தொடங்குகிறோம்.

உலக முழுதும் இந்த தோஷம் என்ற போதையில் சிக்கியிருக்கிறது. ஹிட்லர் தேசியம் என்ற கொள்கையில் யூதர்களை அழித்தான். ஸ்டாலின் தன் மக்களுக்கு உத்தரவு அளித்து ஜெர்மனியர்களிடம் விரோதத்தைக் கற்பித்தான். "ஜெர்மனியர்களைப் பற்றி போதிய வெறுப்பு ரஷ்ய மக்களிடம் ஏற்படாவிட்டால் ரஷ்யா ஜயிக்கமுடியாது" என்றுன் ஸ்டாலின்.

இன்று நாம் ரஷ்யர்களை வெறுக்கவில்லையென்றும், அந்த நாட்டையும் சீனவையும் சந்தேக நோக்குடன் பார்க்கவில்லையென்றும் அமெரிக்கா நம்மேல் கோபப்படுகிறது. பாகிஸ்தான் செய்துவரும் விஷமப் பிரசாரத்திற்கு நாம் எதிர்ப் பிரசாரம் செய்யவில்லையே என்று சிலர் நம்மேல் சீறுகிருர்கள். பகைமை பகைமையால் தீராது. பகைமையைத் தீர்ப்பது பகைமையற்ற தோழமையே.

"பாவியிடம் பழிவாங்க நாமே பாவியாகக் கூடாது" என்பதே ஹிந்து கலாசாரத்தின் அடிப்படை. தோழமை நோக்குடனே நாம் அனைவரையும் பார்ப்போம். தோழன், விரக்தன், பகைவன், பாவி, கொடியோன், நேர்மையற்றவன், கயவன், கொடும்பாவி, ஆஷாட

பூதி முதலிய அனைவரிடமும் தோழமை யுடனே நெருங்குவோம்.

இந்திய அரசாங்கம் பாகிஸ்தான், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், சீனு ஆகியவைகளிடம் இதே கொள்கையைக் கையாள்கிறது. அமெரிக்கா போன்ற பல நாடுகள் இதன் காரணமாக நம்மிடம் ஆத்திரப்பட்டாலும் நமது கொள்கையே சரியானது என்று அவை அறிந்துகொண்டிருக்கின்றன. பாகிஸ்தான் என்ன செய்தாலும் சரி, அதை அநியாயம் செய்ய விடமாட்டோம்; அத்துடன் நமது தோழமையையும் விடமாட்டோம்; சகோதரத்துவத்தை மறுக்கவும்மாட்டோம்.

இவை உலக அரசியல் விஷயங்கள். நமது சமூகத்திலும் பொறுமை மனப்பான்மை, தோழமை என்பவைகளை பலப்படுத்தவேண்டும். நம்மால் பிறருக்குத் தீங்கு எவ்வகையிலும் கூடாது. நமக்குத் தீங்கு செய்யப்பட்ட காரணமாயினும் நாம் பகைமை கொள்ளக்கூடாது. அநியாயத்தை எதிர்த்து நிற்போம், ஆனல் பழிவாங்கும் எண்ணமே வேண்டாம்.

கிறிஸ்தவ மத ஜகத்குருவான போப் பாண்டவர் பிரதி வருஷமும், திருநாளில், தோழமை பெருகவும் அமைதி நிலவவும் பிரார்த்தனை செய்கிருர். அவர் முயற்சி பலனளிக்கிறதென்று தெரியவில்லை. நமது ஜைனர்களும் பிரதி வருஷமும் அனைவரையும் மன்னித்து அனைவர்களிடம் மன்னிப்பும் கோருகிருர்கள். எனினும் இதர சமூகங்களைவிட ஜைன சமூகம் அதிகப் பொறுமையுள்ளது என்று அனுபவ வாயிலாகத் தெரியவில்லை. சாதுக்கள் சன்னியாசிகளிடம் இருக்கும் பொறுமை பகைமை வெறும் வார்த்தை சங்கற்பங்களாலோ ஜபதவங்களாலோ மறைவதில்லை. தர்ம வழி அவ்வளவு சுலபமில்லை. இதற்குச் சாதனை செய்யவேண்டும். இன்று நல்ல கருத்துக்களை வெளியிட்டோ, கேட்டோ, ஏதோ கொஞ்சம் செய்ய முடிந்தது என்று திருப்திப்படலாகாது. ‘இன்றுவரை செய்த பாவத்திற்கு வருந்திப் பரிகாரம் செய்துவிட்டோம். நாளைமுதல் புதுப்பாவம் செய்யக்கூடும்’ என்றும் சிலர் கருதுகிருர்கள்.

“இது பேச்சுக்குக் காலம் இல்லை, செயலில் இறங்கவேண்டும்” என்று சொல்லிச் சொல்லி சளைத்துவிட்டோம். விரதங்கள் திருநாட்கள் வந்தால் ஏதோ செய்வது, சொல்வது, இறந்த சங்கற்பமாவது ஆகட்டுமே என்று அனைவரும் கூடுகிருேம். கூட்டம் முடிந்ததும் நல்ல காரியம் ஒன்று செய்தோம் என்று கருதுகிருேம். இம்மாதிரி இதுவரை பல நாட்கள் கொண்டாடியும் பலன் என்ன என்று யோசிக்கவேண்டும். நம் உள்ளங்களைச் சோதிப்போமேயானல், திடமான சங்கற்பம் செய்வோமேயானல், இன்று பொறுமை தினம் கொண்டாடியதற்கு அர்த்தமுண்டு.

ஒரு விஷயத்தில் நாம் முன்னேறினேம் என்பது உண்மை. நாம் குறுகல் மனப்பான்மையிலிருந்து வெளி வந்தோம். நல்ல வார்த்தையைக் கேட்கவோ நல்ல வேலையைச் செய்யவோ, தேவை ஏற்பட்டால் நம் வாழ்வை மாற்றவோ நாம் இக்குறுகிய மனப்பான்மையில் கட்டுப்பட்டிருப்பதில்லை. ‘கிணற்றுத் தவளை’ என்ற முறையை விட்டுவிட்டோம். பிற மதத்தினரை நம்புகிருேம். அவர்களுடன் தொடர்புகொண்டு அவர்கள் விஷயங்களை கேட்கச் சித்தமாக இருக்கிருேம்.

நமது திருநாட்களில் பிறரை அழைப்பதுபோல், நாமும் அவர்களுடைய விரதங்கள் உற்சவங்களில் கலந்துகொள்ளவேண்டும். முகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள், பார்சிகள் முதலிய எல்லா மதத்தவர், எல்லா தேசத்து மக்களின் நற் காரியங்களிலும் பங்கெடுக்கவேண்டும். டில்லியைப்போன்ற தலைநகரங்களில் உலகின் பல தேசங்களின் பிரதிநிதிகள் இருக்கிருர்கள். நாம் அவர்கள் அனைவரையும் சந்திக்கக்கூடும், அவர்களுடன் தோழமை கொள்ளக்கூடும். இது பெரிய சாதனை ஆகும். ★ ★

“மங்கள் பிரபாத்”, நவ-1951

“கதர் மலர்” — நான்கு வருஷ பைண்டு தொகுதிகள்

“கதர் மலரி”ன் நான்கு வருஷத்திய தொகுதிகள் தனித்தனியாக பைண்டு செய்து தயாராக இருக்கின்றன.

ஒவ்வொரு வருஷத் தொகுதியும் விலை ரூ. 4—0—0; தபால் செலவு வேறு.

★ நான் கண்ட காந்தி ★

ஆர். ஆர். திவாகர், உதவி மந்திரி, மத்திய சர்க்கார்

அதிர்ஷ்டவசமாக, பாபூவின் வாழ்க்கையின் இறுதி நாட்களில் எனக்கு அவரைச் சந்திப்பதற்குப் பல சந்தர்ப்பங்கள் வாய்த்தன. இங்கே நான் மிகவும் முக்கியமான மூன்று சந்திப்புக்களைமட்டும் விவரிக்கப்போகிறேன்.

பம்பாயைச் சேர்ந்த ஸ்ரீ டி. தேண்டுல்கர் என்பவர் காந்திஜியின் வாழ்க்கையைப்பற்றி அழகிய நம்பகமான புஸ்தகம் ஒன்று எழுத விரும்பி, அதுபற்றி காந்திஜியைக் கலந்து கொள்ள விரும்பினர். 1948ம் வருஷம் ஜனவரி 22ம் தேதி 2 மணிக்கு, குறிப்பிட்ட நேரத்தில், நாங்கள் இருவரும் பிர்லா மாளிகையை அடைந்தோம். காந்திஜி உபவாசத்தை நிறுத்தி இன்னும் 5 நாள் பூர்த்தியாகவில்லை. அவர் எப்பொழுதும்போல் தம் ஸ்தானத்தில் பலவீனமான நிலையில் உட்கார்ந்திருந்தார். நாங்கள் அப்பொழுது அவருக்குச் சிரமம் கொடுக்க நேர்ந்ததற்காக மன்னிப்பு வேண்டினேம். அவர் மிகவும் இனிய முறையில் நடந்துகொண்டார். ஸ்ரீ தேண்டுல்கர் எழுதவிருந்த வாழ்க்கை வரலாற்றில் மிகுந்த சிரத்தை காட்டினர். ஸ்ரீ தேண்டுல்கர் காந்திஜி எழுதியுள்ள 'ஹிந்த் ஸ்வராஜ்' என்ற புஸ்தகம் எழுதப்பட்ட தேதியைக் கேட்டுத் தெரிந்துகொண்டதோடு பாபூவின் புஸ்தகங்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக் கையாளுவதற்கு அனுமதி கோரினர். காந்திஜி அனுமதியளித்தார். ஸ்ரீ தேண்டுல்கர் தாம் ஸ்ரீ மகாதேவ் பாயின் 'டயரி'யையும் (தினக் குறிப்பு) உபயோகித்துக்கொள்ளலாமா என்று கேட்டதற்கு பாபூ தாம் சந்தோஷமாக அனுமதியளிப்பதாகவும், ஆனல் ஸ்ரீ நரஹரி பாயிடமே அந்த டயரிகள் இருப்பதால் இறுதியில் பொறுப்பு அவருடையதே என்றும் தெரிவித்தார்.

அதே சமயத்தில் ஸ்ரீ பியாரேலால் வந்து அருகில் அமர்ந்தார். பியாரேலால் வந்ததனல் ஏதோ திடீரென்று நினைவுக்கு வந்தது போல்,ஒருவொருக்கொருவர் சண்டைபோட்டுக்கொண்டு மடிந்துபோன யாதவர்கள், அவர்களுக்கும் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் இருந்த சம்பந்தம் ஆகியவற்றை விளக்கும் கதையை என்னைக் கூறும்படிச் சொன்னர். நான் எனக்கு நினைவிருந்ததைக்கொண்டு "யாதவர்கள் மிகவும் கர்விகளாகவும் அகம்பாவிகளாகவும் ஆகிவிட்டார்கள். தாம் வெளியேறுவதற்குமுன் அவர்களை அழிக்காது விட்டால் அவர்கள் உலகத்தையே நாசம் செய்துவிடுவார்களென்று ஸ்ரீ கிருஷ்ணர் அஞ்சினர். அவர்களுடைய குல குருவான கர்க்க முனிவர் அவர்கள் அனைவரும் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு அழிந்துபோக வேண்டுமென்று சாபம் கொடுத்திருந்தார். சாபம் நிறைவேறிற்று. அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணர் உலகத்திலிருந்து மறைய வேண்டிய சமயம் வந்தது. அவர் ஒரு மர நிழலில் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். ஒரு வேடனுக்கு அங்கு மானென்று இருப்பது போல் தோன்றவே அவன் அவருடைய உள்ளங்காலில் பாணத்தை எய்துவிட்டான். அதனல் அவர் மரணம் எய்தினர்'' என்று சொன்னேன்.

பாபூ கதையை கவனமாகக் கேட்டபின், "ஓகோ, அப்படியா நடந்தது!" என்ருர். தம் ஆயுள் காலத்தில் காங்கிரஸ்காரர்கள் ஒருவருக்கொருவர் சண்டை பிடித்துக்கொள்வதைக் குறித்து அவர் யோசித்துக்கொண்டிருந்ததாக எண்ணினேன்.

பாபூவை நான் அடுத்த முறை சந்தித்தது ஜனவரி 24ம் தேதியாகும். அப்பொழுது கர்னடக மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் தம் கூட்டாளிகளுடன் பாஷாவாரி மாகாணப் பிரிவினை செய்வதுபற்றி பாபூவைச் சந்திக்கவிருந்தார். நாங்கள், "ஒரு மாகாணத்திற்கும், இன்னெரு மாகாணத்திற்கும் வித்தியாசம் பாராட்டக்கூடாது. கூடிய விரைவில் எல்லா மாகாணங்களையுமே பாஷாவாரியாகப் பிரித்துவிடவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டோம்.

காந்திஜி, "எல்லைகளைப்பற்றியவரையில் அக்கம்பக்கத்து மாகாணங்களின் பிரதிநிதிகள் கலந்து பேசி சௌஜன்யமான முடிவுக்கு வந்தாகவேண்டுமென்றும் இதைப்

பொறுத்தே மாகாணப் பிரிவினைகள் நடப்பது இருக்கிற" தென்றும் அழுத்தமாகச் சொன்னார். இதைக் குறித்து அவர் வெகு காலத்திற்கு முன்பே "ஹரிஜனில்" எழுதியதுண்டு.

"இந்த ஆலோசனை தர்ம ராஜ்யத்திற்கு, ராம ராஜ்யத்திற் கல்லவா பொருந்தும்? சௌஜன்யமான உடன்பாடு எற்பட முடியாமல் போகும்பொழுது மத்தியஸ்தருடைய தீர்ப்புக்கு வருவதற்கு அனுமதியளிக்கவேண்டும்" என்றேன். அவர் அசைந்துகொடுக்கவேயில்லை. உள்ளத்தை ஊடுருவிப் பார்க்கும் சொற்களில் அவர், "திவாகர், இது நடக்காது. நான் உன்னிடம் சொல்கிறேன்" என்று உரக்க அறிவித்துவிட்டு, "மத்தியஸ்தர்களுடைய, பஞ்சாயத்தார்களுடைய தீர்ப்பும் நிர்ப்பந்தமானதென்றே கருதப்படும். எந்தக் கட்சியும் அதை மனப்பூர்வமாக எற்காது. நாம் உண்மையாகவும், சமாதானமாகவும் வாழ்வதென்று முடிவுசெய்துள்ளோமென்றால் விரோதங்களை, மோதல்களைக் கண்டிப்பாகத் தவிர்த்தாக வேண்டும்" என்றார்.

பாபூவை மூன்றும் முறை, அதாவது கடைசியாக நான் தரிசித்தது 1948-ஜனவரி 28ம் தேதியாகும். அப்பொழுது நாங்கள் காங்கிரஸின் புதிய அமைப்பைப்பற்றி ஆலோசித்தோம்.

1945 அக்டோபர் முதலே காந்திஜி என்னை காங்கிரஸின் அமைப்பு சம்பந்தமான உபகமிட்டியில் சேர்த்துக்கொண்டேவந்தார். எனெனில் 1945 ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நான் சிறையிலிருந்து வெளிவந்தவுடன் காந்திஜியுடன் இது விஷயமாக வாத விவாதங்கள் நடத்துவதில் மிகுந்த சிரத்தை காட்டினேன்.

1948ல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிடம் அறிக்கையை சமர்ப்பித்ததற்குமுன் இந்த உப கமிட்டி மூன்று முறை திருத்தி அமைக்கப்பட்டது. இந்த ஒவ்வொரு சமயத்திலும் எனக்கு அதில் வேலை செய்வதற்கு வாய்ப்பு எற்பட்டது. நாங்கள் சிபாரிசு செய்திருந்த அமைப்பு எற்றுக்கொள்ளப்பட்டு இப்பொழுது அமுலில் இருந்துவருகிறது. அது நாங்கள் தயாரித்த கடைசி அமைப்பாகும். அதைத் தயாரித்தது நானே. 1948-ஜனவரி-28ம் தேதி, காந்திஜி கொலையுண்டதற்கு 2 நாட்களுக்கு முன்பு, இதைக் குறித்தே நான் காந்திஜியுடன் ஆலோசனை நடத்தினேன்.

127786.

காந்திஜி எப்பொழுதும்போல் புது டில்லியிலுள்ள பிர்லா மாளிகையின் மூலையிலுள்ள அறையில் பனியை ஒத்த தூய வெண்மையான கதர் ஆடையுடன் அமர்ந்திருந்தார். அவர் எதிரிலேயே ஒரு சிறிய மேஜை இருந்தது. அவர் உலர்ந்த பழங்கள், பச்சைக் கீரை, கறிகள், ஆட்டுப்பால் ஆகியவை அடங்கிய சிற்றுண்டியை அருந்திக்கொண்டிருந்தார். அவர் என்னுடன் நடந்த பேச்சில் முழு கவனமும் செலுத்தியிருந்தமையால், எங்கள் பேச்சு முடிந்துவிட்டபிறகும் அவர் சிற்றுண்டியை முடித்தாகவில்லை. ஒரு சமயம் ஸ்ரீ சங்கர்லால்தேவ் அவருக்கு இதை நினைவுறுத்தவும் செய்தார். காந்திஜி சிரித்துவிட்டு சீமைத் தக்காளி, பச்சைக் கீரை ஆகியவற்றின் கதம்பத்தைச் சாப்பிட்டுக்கொண்டே, "பார்த்தீர்களா, நான் மாட்டைப்போல் பச்சைக் காய் கறிகளைத் தின்கிறேன்!" என்றார்.

எங்கள் கமிட்டியின் அங்கத்தினரான ஸ்ரீ டண்டன்ஜி எங்கள் மந்திராலோசனைகளில் மற்றவர்களைவிட அதிகமாகக் கலந்துகொண்டார். டாக்டர் ராஜேந்திர பிரசாதோ, நேரிடையாகக் கலந்துகொள்ளாமல் பார்வையாளரைப்போ லிருந்தார். ஸ்ரீ தேவும், ஸ்ரீ ஜுகல் கிஷோரும் நானும் காந்திஜியுடன் இதுபற்றி முன்னமேயே கலந்து பேசியிருந்தமையால் எங்களுக்கு அவருடைய கருத்துக்கள் தெரிந்திருந்தன. டாக்டர் பட்டாபியும், ஸ்ரீ எஸ். கே. பாடிலும் பேசியது மிகவும் குறைவே. காந்திஜியின் மூளை எங்கள் மூளையிலிருந்து விலகி வேறுவகையில் வேலை செய்துகொண்டிருந்ததென்பது தெளிவு. அரசியலை வேருகப் பிரித்துவிட்டு சேவை உணர்ச்சியுடன் நிர்மாண வேலைகளில் ஈடுபடுவதிலேயே அவருக்குக் குறி. நாங்கள் எல்லோருமே, அதிகாரம் ஏற்றது முதல், காங்கிரஸில் புகுந்துள்ள மாசுகளையும் லஞ்சப் பேயையும் அகற்ற வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தோம். ஆனல் ஒரு அரசியல் ஸ்தாபனமாகவே அது இருந்து வருவதை விரும்பினேம். நான் ஒரு சமயத்தில் "காங்கிரஸ் நாற்சந்தியில் நிற்கிறது. அது, இன்று அரசியலிலேயே இருந்துவரவேண்டும்;

அல்லது, முழு மனதுடன் நிர்மாண வேலைகளில் இறங்கிவிடவேண்டும்" என்றேன். இதற்கு அவர், "காங்கிரஸ் நிர்மாண வேலைகளைக் கைவிடவோ அலட்சியம் செய்யவோ தொடங்குமானால் அது தற்கொலை புரிந்து கொண்டதற்குச் சமமாகும்" என்று கண்டிக்கும் முறையில் கூறினர்.

பல மணி நேரம் கலந்தாலோசித்த பிறகு நகல் திட்டமொன்றை அவரே தயாரித்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. நான் அப்பொழுது, 1946-ல் முதன் முதலில் காங்கிரஸ் அமைப்பு உப கமிட்டியுடன் சோத்பூர் ஆசிரமத்தில் கண்டு பேசியபொழுது அவர் கூறியவற்றையே பெரும்பாலும் இப்பொழுதும் அவர் கூறுவதாகக் குறிப்பிட்டேன். அப்பொழுது அவர் என்னிடம் தந்திருந்த நகல் திட்டத்தை அனுப்பிவைப்பதாகவும் சொன்னேன். அவர் அதை வரவேற்ருர்.

நல்லவேளையாக அந்த நகல் திட்டம் என் பழைய தஸ்தாவேஜுகளிடையே பத்திரமாயிருந்தது. ஹிந்தியிலிருந்த மூலப் பிரதியையும் அதன் மொழிபெயர்ப்பையும் அன்று மத்தியானத்திலேயே அவரிடம் அனுப்பிவைத்தேன். அவருக்கு அது உதவியாயிருந்திருக்கும். ஏனெனில் 'சேவகன்' அல்லது 'லோக சேவகனி' டம் என்னென்ன குணங்கள் இருக்கவேண்டுமென்று அதில் கூறப்பட்டிருந்ததோ அவைகளை தாம் இறப்பதற்கு நான்குமணி நேரத்திற்கு முன்பு நாட்டிற்கு விடுத்த இறுதிச்செய்திபோன்ற அந்த நகல் திட்டத்தில் ஒரு எழுத்தைக்கூட மாற்ருமல் அப்படியே தந்திருக்கிருர்.

இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு அரசியல் ஸ்தாபனம் என்று இருந்ததை இனி அறவே மாற்றிவிட வேண்டுமென்பது அவருடைய திட்டமான அபிப்பிராயம். சேவையையே நோக்கமாகக் கொண்டு வேலை செய்யக் கூடியதும், தன் சேவகர்களை நிர்மாண வேலைகளை நடத்த வேண்டி கிராமந்தோறும் அனுப்பிவைக்கக் கூடியதுமான ஒரு ஸ்தாபனத்தைப்பற்றி அவர் எண்ணிக்கொண்டேயிருந்தார். அரசியல் கட்சிகளைப்பற்றியவரையில் அவை தம் இஷ்டம்போல் இடங்களை மாற்றிக்கொள்ளுமென்று அவர் எண்ணியிருக்கக்கூடும். அவர் சம்பூரண கிராம சேவைக்குப் பிரதான்யம் அளித்ததைப் பார்க்கும்பொழுது அவர் தமது நியாயமான நடத்தையின் மூலமாக அரசியலையும் தேர்தல் போக்கையும் சரியான பாதையில் செலுத்துவதற்குத் தகுதி வாய்ந்த ஊழியர்களை ஏற்கவும், தோற்றுவிக்கவும் விரும்பினரென்பது தெளிவு.

★ ○ ★

★ உடலுழைப்பு ★

மேஜை நாற்காலிகள் போட்டுக் கொண்டு புத்தகங்களை வைத்துப் படித்தால்தான் ஞானமேற்படும், அறிவு வளரும் என்ற கருத்து அறியாமையை, அஞ்ஞானத்தைக் காட்டுவதாகும். நாம் இந்த அறியாமையிலிருந்து வெளியேறியாகவேண்டும். வாழ்க்கையில் படிப்பிற்கு இடம் நிச்சயமாயிருக்கிறது. ஆனல் அது அதற்குரிய இடத்தில் இருந்தால்தான் அழகுபெறும். உடலுழைப்பைக் கெடுத்து அதுமட்டும் செய்து வரப்படுமானல் அதை எதிர்த்துக் கிளம்புவது கடமையாகிவிடுகிறது. உடலுழைப்புக்காக நாளின் அதிக நேரத்தையும் படிப்பு முதலியவைகளுக்குக் குறைந்த நேரத்தையும் செலவழிக்க வேண்டும். இந்தக் காலத்தில் இந்நாட்டில் பணக்காரர்கள் அல்லது உயர்ந்த வகுப்பினரென்று கருதப்படுவோர் உடலுழைப்பை அவமதிப்பதால் உடலுழைப்பிற்கு உயர்ந்த ஸ்தானமளித்தல் அவசியமாகும். அறிவை நன்கு இயங்கச் செய்வதற்கும் உடலுழைப்பில் அல்லது உபயோகமான ஏதேனுமொரு கைத்தொழிலில் உடலை இயங்கச் செய்தல் அவசியம்.

காந்திஜி

'ஆசிரம வாழ்க்கை' என்ற புத்தகத்திலிருந்து

(ஸர்வோதய பிரசுரம்: விலை 1—4—0)

★ ஆத்ம விழிப்பால்தான் துன்பம் தீரும் ★

ஆச்சாரிய விநோபா பாவே

கால் நடையாகச் செல்ல வேண்டுமென்று நான் எண்ணிய பொழுது, "ஒரு நாள் வேலைக்காக நீங்கள் ஒரு மாதத்தைச் செலவிடுகிறீர்கள். இதன் மத்தியில் உங்களின் வேலைத் திட்டம் என்னவாக இருக்கும்?" என்று சகோதரர் ஒருவர் கேட்டார். "ஹரியின் பெயரைச் சொல்லுவதும், ஹரியின் பெயரைச் சொல்ல மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதும் எனது வேலைத் திட்டமாக இருக்கும்" என்றேன். உங்களுக்குப் பயன் படக்கூடியது என்னிடத்தில் ராம நாமம் உச்சரிப்பதைத் தவிர வேறொரு சக்தி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை, ஆகையால்தான் நான் இந்த பதிலைச் சொன்னேன்.

* * *

மதங்கள் அநேகம், வழிபாடுகள் அநேகம்

இன்று நம் தேசத்தின் முன் மிகப் பெரிய பிரசினைகள் இருக்கின்றன. இது ஆச்சரியத்திற்குரிய விஷய மல்ல. நம்முடைய தேசம் மிகப் பெரியது. நமது தேசத்திற்குச் சுதந்திரம் வந்து இப்பொழுது எத்தனை வருஷமாகிறது? திடீரென்று பொறுப்பு வந்ததால், நமது தேசம் என்ற படகானது ஆழமான தண்ணீரில் மிதக்கிறது. இப் பிரசினைகளைத் தீர்ப்பதற்குச் சுலபமான வழி ராம நாமம் ஒன்றைத் தவிர, மனித முயற்சியில் இருப்பதாக நான் கருத வில்லை.

"ஹரியின் பெயர்" என்பதன் கருத்து என்ன? ஹரி நாமத்தை உச்சரிப்பவர்கள் வேறு எதனுடைய பெயரையும் உச்சரிக்க மாட்டார்கள். நம்முடைய மகான்களெல்லாம், "சகோதரர்களே, பரமேசுவரனின் வழிபாடும் பணத்தின் வழிபாடும் ஒன்றாக நடக்காது" என்று நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். மனதில் ஆண்டவனுக்கு இடம் கொடுத்தால், வேறு எதற்கும் அதில் இடம் இருக்க முடியாது. நம்மிடத்தில் அநேக விதமான வேறுபாடுகள் இருக்கின்றன. இவைகள் நமது பாதையைத் தடுத்து வைத்திருக்கின்றன. இந்த வேறுபாடுகளெல்லாம் அழிந்து நம்முடைய பாதை சுத்தமாகி விட்டால் தேசம் ஒன்றாகி விடும். நம்முடைய தேசத்தில் அநேக மதங்கள் இருக்கின்றன என்பது வருந்துவதற் குரிய விஷயமல்ல, அது நமது பாக்கியந் தான். அநேக மதங்களின் கூட்டு வழிபாடு நடைபெறும் இடத்தில் மதங்களின் இந்த வெவ்வேறு தன்மையானது தேசம் மலர்ச்சியடைவதற்கு உதவியாகத் தான் இருக்கிறது. இந்தியா மலர்ச்சியடைவதற்கு இங்குள்ள வெவ்வேறு மதங்களும் போதுமான உதவியளித்திருக்கின்றன. வெவ்வேறு மதங்களின் மூலமாக ஒரே ஆண்டவனுடைய பெயரை நாம் உச்சரித்தோமானால் ஆயிரக்கணக்கான வித்தியாசங்கள் மறைந்து விடும்.

* * *

ஹரி நாமத்தில் வித்தியாசத்தை அழிக்கக் கூடிய சக்தி

நாம் ஒருவர் மற்றவர்களின் பாஷையைக் கற்க வேண்டும். நமது வெவ்வேறு இலக்கியங்களில் அநேக விசேஷங்கள் நிறைந்திருக்கின்றன. ஆனால் இங்கோ பாஷைகளின் பேரிலும் துவேஷம் ஆரம்பித்திருக்கிறது. எந்த இலக்கியமும் துவேஷத்தின் பேரில் நிலைக்காது. இம்மாதிரியே, மாகாண வேறுபாடு, பிரதேச வேறுபாடு, கட்சி வேறுபாடு முதலியவைகளும் நம்மில் இருக்கின்றன. இந்தியாவில், துன்பமோ எல்லாப் பக்கங்களிலும் இருக்கிறது. ஊழியத்தில் ஈடுபட வேண்டியது தான் நமது தேவை. கட்சி வேறுபாடு முதலியவைகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு ஏதாவது ஒரு உபாயம் இருக்கிறதென்றால் அது பகவானுடைய நாமம் தான். நாம் அனைவரும் ஆண்டவனால் சிருஷ்டிக்கப் பட்டவர்கள் என்பதை நான் ஜனங்களுக்குக் கூறுவேன். ஆண்டவன் அனைவருக்கும் தந்தை, நாம் அனைவரும் அவருடைய புத்திரர்கள். நாம் ஒருவர்க்கொருவர் சண்டையிடுவோமானால்

அவருக்கு மிகவும் வருத்தமாக இருக்கும். எல்லோரும் அமிர்தத்தினுடைய புத்திரர்கள். சரீரத்தை ஏன் பார்க்கிறாய்? கடைசியில் அனைவரும் சாம்பலில் தான் கலக்கவேண்டும். சாம்பலான பிறகு, பிராமணனுடைய சாம்பல் எது, ஹரிஜனனுடைய சாம்பல் எது, மற்றவர்களின் சாம்பல் எது என்று அடையாளம் கண்டு பிடிக்கப்பட மாட்டாது. ஆத்மா ஒன்று என்பதை கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நமக்கு அண்டையிலுள்ளவர்களுக்கும் எளியவர்களுக்கும் ஊழியம் செய்வோம், பரஸ்பரம் ஒருவர் மற்றவரை நேசிப்போம் என்பதற்காகவே நாம் சரீர ரூபமாக வந்திருக்கிறோம். இதில் தான் மனித சரீரத்திற்குச் சாபல்யமிருக்கிறது. இது தான் ஹரி நாமம் என்பதன் பொருளாகும்.

ஹரிநாமத்தை உச்சரிப்பவர்கள், ஊழியத்தில் ஈடுபடவேண்டும். தண்ணீர் சமுத்திரத்தின் பக்கம் செல்லுவதற்காகக் கிளம்புகிறது; ஆனால் வழியில் அதனால் எவ்வளவு ஊழியம் செய்யமுடியுமோ அந்த அளவு செய்துகொண்டே செல்கிறது. சமுத்திரம் வரையில் போய்ச் சேருவதில் வெற்றியடைய முடிந்தால் சமுத்திரத்திற்கு போய்ச் சேருகிறது, இல்லையென்றால் வழியிலேயே முடிந்துவிடுகிறது. அம்மாதிரியே, நம்மிடம் இருக்கும் பலத்தைக்கொண்டு துன்பப்படுபவர்களுக்கும் எளியவர்களுக்கும் சேவை செய்ய முயற்சிக்கவேண்டும்.

* * *

இரண்டு கைகளையும் உபயோகப்படுத்த வேண்டும்

இந்தியாவில் எது குறைவாக இருக்கிறது? நிலமிருக்கிறது; எத்தனையோ நதிகள் இருக்கின்றன. இருந்தபோதிலும் நாம் பிச்சை வாங்குகிறோம். உண்ணுவதற்கு உணவும் உடுப்பதற்கு உடையும் இல்லாமலிருக்கிறது. பரமேசுவரன் நமக்கு இரண்டு கைகளைக் கொடுத்திருக்கிறார், அவைகளைக் கொண்டு வேலை செய்வதில் என்ன ஆபத்து இருக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. பகவான் மனிதனுக்கு இரண்டு கைகளைக் கொடுத்திருக்கின்றார், அவைகளைக் கொண்டு அவன் கர்ம யோகத்தைச் சாதிக்கக்கூடும் என்பது தான் மனிதனுடைய சிறப்பு. சுவர்க்கத்தில் தேவர்கள் சுகத்தையே அனுபவிக்கிறார்களென்றால், பூலோகத்தில் மிருகங்கள் துன்பத்தையே அனுபவிக்கின்றன. சுகம் மட்டும் அனுபவிக்கக்கூடிய இடத்தில் யோகத்தைச் சாதிப்பதெப்படி? மனித வர்க்கத்தால் கர்ம யோகத்தைச் சாதிக்க முடியும். ஆகையால் தான், தேவவர்க்கம் மிருக வர்க்கம் முதலியவைகளைக் காட்டிலும் மனித வர்க்கம் சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஆண்டவன் நமக்கு இரண்டு கைகளைக் கொடுத்திருக்கிறான். இதுதான் அவருடைய பெரிய கொடை. அவைகளை உபயோகப் படுத்தும்பொழுது தான் நம்முடைய துன்பம் அழியும்.

* * *

சுயராஜ்யம் என்பதற்கு சரியான அர்த்தம் என்ன?

சுயராஜ்யம் வந்துவிட்டது என்று ஜனங்கள் கூறுகிறார்கள். சுயராஜ்யம் என்பது ஏதாவது பார்சல் மூலமாகவா வந்தது? அது நமக்குச் சொந்தமானது; நம்முடைய சம்பாத்தியமாகும். சுயராஜ்யம் வந்திருக்கிறது என்பதன் பொருள் வெளிச்சம் ஏற்பட்டிருக்கிறது என்பதுதான். இப்பொழுது வேலை செய்வதற்கு வசதி ஏற்பட்டிருக்கிறது. நாம் வேலை செய்யாமல் இருந்தால் வெளிச்சத்தால் என்ன பயன் கிடைக்கும்? சுயராஜ்யம் இல்லாத போது பொறுப்பை அதிகமாக உணர்ந்து வந்தோம். ஆனால் இப்பொழுதோ, எல்லாவற்றையும் சர்க்கார் தான் செய்ய வேண்டுமென்று அனைவரும் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். சர்க்கார் உங்களிடமிருந்து தனியானதாக இருக்கிறதா என்று நான் கேட்கிறேன். நீங்கள் யாரை விரும்புகிறீர்களோ, அவர்களுக்கு வோட்டுக் கொடுத்துத் தேர்ந்தெடுக்கிறீர்கள். நீங்கள் பலமுள்ளவர்களானால் தான் உங்களின் சர்க்காரும் பலமுள்ளதாகும். நீங்கள் பலவீனர்களாக இருந்தால் உங்கள் சர்க்காரும் பலவீனமுள்ளதாகத் தான் இருக்கும்.

"இது வரையிலும் நாங்கள் அதிகமான வேலை செய்திருக்கிறோம், இப்பொழுது எங்களை ஓய்வெடுக்க விடுங்கள்" என்று ஜனங்கள் கூறுகிறார்கள். ஓய்வு எப்படி? பௌர்ணமி வந்து விட்டதா என்ன?

அமெரிக்காவின் பாசக்கயிறு — ஜே. ஸி. குமரப்பாவின் எச்சரிக்கை

சுமார் ஒரு மாதத்திற்கு முன் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஒரு உடன்படிக்கை கையெழுத்தாகி யிருக்கிறது. அதன் படி இந்தியாவுக்கு அபிவிருத்திக் காரியங்களுக்கென்று ஐந்து கோடி டாலர் கிடைப்பது சாத்தியமாகும். அமெரிக்கா, உலகின் மற்ற எல்லாப் பாகங்களிலும் தன் பிடியை வலுப்படுத்திக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷார் அரசியல் ஏகாதிபத்தியத்தில் வல்லவர்கள் என்றால், அமெரிக்கர் பொருளாதாரத் துறையில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இது உலகப் பிரச்னைகளைப் பற்றி நாம் இனிப் பேசவியலாதபடிச் செய்து விடுமோ? "கிராம-நகர அபிவிருத்தி" முதலான எந்த விதமான மாயையிலும் சிக்காமல் நாம் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

இந்த ஐந்து கோடி டாலர் உதவியோடு திருப்தியடைவதாகக் காணோம்; இந்தியாவின் "முன்னேற்றத்தை" துரிதப் படுத்துவதற்கு இன்னும் ஒரு 100 கோடி டாலர் உதவியும் அளிக்க வேண்டும் என்கிறார் அமெரிக்கத் தூதரான செஸ்டர் பௌலஸ். அமெரிக்க "நிபுணர்"களும் வந்து நம் நாட்டில் இறங்க ஆரம்பித்து விட்டார்கள்.

இதனாலெல்லாம் அபாயமே விளையும். அமெரிக்கரின் செல்வாக்கால் வர்த்தக முறையும் யந்திரக் கலப்பைகளும் பரவும். நம் விவசாயத்தை யந்திரங்களையும் பெட்ரோலையும் நம்பி நடத்துவது, நம்மை அமெரிக்கருக்கு அடமானம் வைப்பதற்குச் சமமானதே. இவர்கள் நமக்குக் கட்டளையிடுவதை நாம் ஆட்சேபிக்க நேர்ந்தால், நமக்குப் "பாடங் கற்பிப்பதற்காக" எண்ணெய் சப்ளை செய்வதை நிறுத்திக் கொள்வார்கள்; பின்பு நாம் பட்டினி கிடக்கத்தான் வேண்டும். கடந்த யுத்தத்திற்கு முன்பு, சென்னை மாகாணத்தில், பணக்காரர்களான சில விவசாயிகள் குருடாயில் பம்புகளை நிறுவிக் கொண்டனர். யுத்த காலத்தின் போது அவர்களுக்குத் தேவையான எண்ணெய் கிடைக்க வில்லை; ஆதலால் பம்புகள் வேலையற்றுப் போகவும், அவர்களின் பழய பொருளாதார நிலையும் சீரழிந்து விட்டது; இந்தக் கஷ்டத்தால் சிலர் அழிந்தே போனார்கள்.

நம் நாட்டில் கிடைக்காததும் உற்பத்தி செய்ய இயலாததுமான பொருள்களை நம்பி நம் பொருளாதார அமைப்பை ஸ்தாபிதம் செய்தால், அது தற்கொலை செய்து கொள்வ

ஆத்ம விழிப்பால்தான் துன்பம் தீரும்

(முன்பக்கத் தொடர்ச்சி)

இப்பொழுது தான் அமாவாசை முடிந்திருக்கிறது, இனி சந்திரன் மெதுவாக வளருவான். "இது வரையிலும் எங்களுக்கு காங்கிரஸ்காரர்களின் மீது நம்பிக்கை இருந்தது, இப்பொழுது நாங்கள் சர்வோதயக்காரர்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம்" என்று சில ஜனங்கள் கூறுகிறார்கள். இது எவ்வளவு பெரிய பிரமை! சாப்பிட்டு விட்டால், தானே சர்வோதயமாகி விடுவதற்கு "சர்வோதய சமாஜம்" ஒரு அமிர்தப் பொட்டலம் அல்ல. 'நம்முடைய வாழ்க்கைக்காக நாம் பிறருடைய ஊழியத்தை ஏற்றுக்கொள்ளமாட்டோம், முடிந்த அளவு பிறருக்கு ஊழியம் செய்வோம்' என்று நாம் விரதம் எடுத்துக்கொள்ள வேண்டும். இம்மாதிரி செய்பவர்கள்தான் "சர்வோதய சமாஜ" ஊழியர்களாவர். சர்வோதய சமாஜம் என்பது எல்லோருடையதாகும். அது எந்த விதமான சாட்சியத்தையும் கோருகிறதில்லை. நான் சர்வோதய சமாஜத்தின் கொள்கைகளை ஒப்புக்கொள்ளுகிறேன் என்று சொல்லக்கூடியவர்கள் சர்வோதய சமாஜ ஊழியர்களாவர்.

மனிதர்கள் அனைவரும் ஊழியர்களாகட்டும்

சகோதரர்களே, நீங்கள் எல்லா வித்தியாசங்களையும் மறந்து விடுங்கள்; இது தான் நான் உங்களுக்குக் கூறுவது. சர்வோதயக்காரர்கள், சர்வோதய மல்லாதவர்கள் என்ற எல்லா வித்தியாசங்களையும் அழித்து விட்டு, நல்ல மனிதன், மனிதர்களுக்கு ஊழியம் செய்பவன் என்ற ஒரே மனப்பான்மையுடன் இருங்கள். ★ ★ ★

தற்குச் சமமாகும். ஜப்பானின் அனுபவம் இத் துறையில் நமக்குப் படிப்பினையாக அமையும். ஜப்பானியர்கள் சரணடைந்ததற்கு, அணுக் குண்டால் உண்டாக்கின பயம் காரணம் அல்ல; அவர்களுக்குத் தேவையான பெட்ரோல் கிடைக்கவில்லை. இதனால் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவது அசாத்தியமாகி விட்டது. ஹிரோஷிமாச் சம்பவம் கௌரவமானதொரு சாக்கு. நாம் முன்னேறுவது சிறிதளவேயிருந்தாலும் பரவாயில்லை; அது நம்மைக் கொண்டே நடைபெற வேண்டும். அவசரப் படுவதால் பயனில்லை, காரியம் அழிந்து விடும். வெளி நாடுகளிலிருந்து கிடைக்கும் இத்தகைய பெரும் உதவியால், நாம் சுதந்திரத்தை இழந்து விடுவோம். அது நம் கழுத்தைச் சுருக்கியுள்ள பாசக் கயிறாகி, புதிதாய்க் கிடைத்துள்ள நம் சுதந்திரத்திற்கு ஆபத்தையே தரும். ★ ● ★

"கிராம உத்யோக் பத்ரிகா," பிப்ரவரி, '52

★ சர்க்கா சங்கத்தின் தீர்மானங்கள் ★

சர்க்கா சங்கத்தின் டிரஸ்டிகளின் கூட்டம் சேவாகிராமத்தில் ஜனவரி 20, 21, 22 தேதிகளில் நடந்தது. அதில் நிறைவேறிய தீர்மானங்களில் சிலவற்றின் சாரத்தைக் கீழே கொடுக்கிறோம்:

1. சர்க்கா சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி அவர்களின் 5 வருஷ பதவிக் காலம் முடிவு பெறுவதால், அவர் ராஜினாமாச் செய்தார். ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவருக்குப் பதிலாக ஸ்ரீ ஏ. வி. சஹஸ்ரபுத்தே அவர்கள் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் முன்னமே மஹாராஷ்டிர சர்க்கா சங்கக் கிளையின் காரியதரிசியாகப் பல வருஷங்கள் அனுபவம் பெற்றவர். சென்ற 10 வருஷங்களாக பம்பாய் சர்க்காருக்கு கதர்–குடிசைத் தொழில் அபிவிருத்தி போர்டில் ஆலோசகராகவும், கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துவதில் வேலை செய்தும் வந்தார். சமீபத்தில் ஜப்பானுக்குச் சென்று குடிசைத் தொழில் அபிவிருத்தியைப் பார்த்து வந்தார்.

2. ஸ்ரீ த்வாரகநாத் லேலே சங்கத்தின் உதவிக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

3. வருஷா வருஷம் மூன்று டிரஸ்டிகள் ஒரு வருஷத்திற்காக எடுத்துக்கொள்வதுண்டு. இவ்வருஷத்திற்காக இந்த மூன்று ஸ்தானங்களுக்கு ஸ்ரீ சித்தராஜ் தட்டா (ராஜஸ்தான்), ஸ்ரீ த்வஜ ப்ரசாத் சாஹு (பீஹார்), ஸ்ரீ ரா. குருசாமி (தமிழ் நாடு) ஆகிய மூவரும் டிரஸ்டிகள் போர்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

4. புதிய பட்ஜெட் கமிட்டியில் கீழ்க் கண்டவர்கள் அங்கத்தினராக இருப்பர்: 1. ஸ்ரீ தீரேந்திர மஜூம்தார், 2. ஸ்ரீ ஏ. வி. சஹஸ்ரபுத்தே, 3. ஸ்ரீ த்வாரகநாத் லேலே, 4. ஸ்ரீ ஆர். எஸ். தோத்ரே, 5. ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி.

பொதுவாக பட்ஜெட் கமிட்டி பிரதி ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் மாதங்களிலும், அவசியமான வேறு சமயங்களிலும் கூடும்.

5. இதுவரை சங்கத்தின்கீழ் பல பயிற்சி முகாம்கள் நடத்திவந்த ஸ்ரீ கனு காந்தி சௌராஷ்டரத்தில் சேவை செய்வதற்காக சங்கத்திலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார். ராஜினாமாவை ஏற்று, சங்கம் அவருடைய சேவையைப் பாராட்டிற்று.

6. சேவாகிராமம் காதி வித்தியாலயத்தின் நிர்வாகியாக இருந்த ஸ்ரீ நந்தலால் பட்டேல், வித்தியாலயப் பொறுப்பிலிருந்து விலகி, இனி நூற்பு–நெசவுக் கருவிகள் ஆராய்ச்சி வேலையில் மட்டும் ஈடுபட்டு வேலை செய்து வருவார்.

7. கருவி ஆராய்ச்சிக் கமிட்டியில் கீழ்க் கண்டவர்கள் அங்கத்தினராக இருப்பர்: 1. ஸ்ரீ ஏ. வி. சஹஸ்ரபுத்தே, 2. ஸ்ரீ ரா. வர்க்கேடி, 3. ஸ்ரீ நந்தலால் பட்டேல், 4. ஸ்ரீ மோஹன்தாஸ் பரீக், 5. ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி, 6. ஸ்ரீ மாதவலால் பட்டேல், 7. ஸ்ரீ விஷ்ணுபாய் வ்யாஸ்.

8. சர்வ சேவா சங்கம் நடத்தும் ஹிந்தி "ஸர்வோதய" பத்திரிகைக்கு சந்தாப் பணத்திற்குப் பதிலாக நூலாகவும் சர்க்கா சங்கத்தின் கிளைகளின் மூலம் வசூல் செய்யத் தீர்மானித்தது.

★ ★ ★

★ காந்திஜி உலகிற்கு அளித்த புதிய வழி ★

ஆச்சாரிய வினோபா பாவே

(சர்வோதய தினத்தன்று உத்தர் பிரதேசத்தில் எடாவாவில் செய்த பிரசங்கம்)

காந்திஜி தம் பூதவுடலை நீத்து, மனித சமூகத்திற்கு இன்னும் மகத்தான சேவை செய்வதற்காகக் கடவுளுடன் கலந்து இன்றுடன் நான்கு வருடங்களாகின்றன. மனித குலத்திற்கு இடையறாது சேவை செய்வது தான் அவருக்கிருந்த மிகப்பெரிய அபிலாஷை; "நமக்கு இன்னும் மகத்தான சேவை செய்வதற்காக" அவர் அருபியும் அகண்டமுமான பொருளுடன் கலந்துவிட்டார் என்று நான் சொல்வதற்குக் காரணம் அது தான். அன்றாடம் அவர் செய்யும் பிரார்த்தனையில் கீழ்க்கண்ட சுலோகம் ஒன்று அடங்கியிருக்கும்: 'மண்ணரசும் வேண்டேன், விண்ணொடு வேண்டேன் மோட்சம்; துக்கத்தீயில் வாடும் மக்களின் துயரைப் போக்குவதையே விரும்புவேன்.'

காந்திஜியின் இதயத்தில் இந்த விருப்பந் தான் ஓங்கி நின்றது; தம் வாழ்நாள் முழுதும் ஓய்வு ஒழிச்சலின்றி இதற்காகவே அவர் பாடுபட்டார். நம் கண் முன்பே அவருடைய அற்புதமான சாதனைகளைக் கண்டிருக்கிறோம். அவருக்கு முன்பும் அவர்போன்ற எண்ணற்ற மகான்கள், கடவுளின் அருளால், நம் நாட்டில் உதித்தார்கள். இங்கு எனக்கு புத்தர் பிரானின் ஞாபகம் வருகிறது. அவரும், எல்லா உயிர்களின் துன்பங்களுக்கும் முடிவு காணக்கூடிய ஒரு சரியான மார்க்கத்தைப் பற்றிய சிந்தனையிலேயே தம் வாழ்நாள் முழுதும் செலவிட்டார். அம்மார்க்கத்தைத் தேடி, அன்பு நெறியால், எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுவதால், மனிதனுக்கு ஜீவன் முக்தியை — உயிருள்ள போதே எய்தும் முக்தி நிலையை—க் காட்டினார். எல்லா மகான்களும் அதே அன்பு நெறியைத் தான் போதித்துள்ளனர். "கருணையே மதத்தின் அடிப்படை, கர்வம் எல்லாப் பாவங்களுக்கும் காரணம்" என்றார் துளசிதாசரும். நம் நடத்தை கருணையின் வழிச் செல்வதாய் இருக்க வேண்டும்; ஆனால் அதே சமயத்தில் நாம் கருணை ததும்பியவர் என்று கர்வங் கொ..ள லாகாது. கருணையுடன் கர்வமும் சேருமானால் அதுவே பாவத்திற்குக் காரணமாகி விடும். நம்மையறியாமல் நமக்கு நாமே எவ்வளவு கருணையும் அன்பும் காட்டுகிறோமோ, அவ்வளவு மற்றையோரிடமும் காட்ட வேண்டும். நாம் செய்யும் வரம்பு மீறிய காரியங்கள் எத்தனையோவற்றை மன்னித்துவிடுகிறோம். தவறான வழிகளிலிருந்து விலக மீண்டும் மீண்டும் சந்தர்ப்பங்களை அளிக்கிறோம். தனது வாழ்க்கையைப் பரிசீலனை செய்யும் எவருக்கும் இது புலனாகும். மற்றவர்களை நம்மில் ஒரு அங்கமாக, நம் ஆத்மாவிலேயே ஒரு பகுதியாகப் பாவித்துக் கருணை காட்டுவோமாக. நாம் ஒரு சுடரின் பல பொறிகளே என்பதும், மற்றவர்களுடன் புழங்கும்போது கருணையும் மன்னிப்பும் காட்டவேண்டும் என்பதும் நம் மகான்களின் வாக்கு. காந்திஜியும் இதையே தான் போதித்தார். புத்தர் பிரானின் காலந் தொடங்கி, அல்லது அதற்கு முந்திய வேத காலத்திய ரிஷிகளிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணர் வரையுள்ள, மகான்கள் உலகிற்குப் போதித்ததைத்தான் அவரும் எடுத்துரைத்தார். புதியதொரு கோட்பாட்டை அவர் போதிக்கவில்லை, போதித்ததாக உரிமை பாராட்டிக் கொள்ளவும் இல்லை; முன்னோர்களின் அனுபவத்தையும் உபதேசத்தையும் ஆதாரமாய்க் கொண்டு தாம் செயலில் இறங்க முயற்சித்ததொன்றே தான் செய்த தெல்லாம் என்று சொன்னார். ஆனால் அவருடைய ஜீவிய வேலையின் சிறப்பான அம்சம் என்னவென்றால், கருணை, மன்னிக்குந் தன்மை, சமாதானம், உண்மை, அன்பு, தீய குணத்திலிருந்து விடுதலை முதலிய நல்லியல்புகளை தனி மனித வாழ்க்கையில் அனுஷ்டிக்குமாறு சொல்லாமல் அவைகளை தேசத்திலும் அரசியலிலுமுள்ள பெரும் பிரசினைகளைத் தீர்க்க சமூக-தேசிய அளவில் பிரயோகித்தார். சத்தியம் - அஹிம்சை என்னும் இரு ஆயுதங்களைக் கொண்டு நமது தியாகத்தின் மூலம் மற்றவர்களின் மனமாற்றத்தை ஏற்படுத்தி தேச சுதந்திரத்தின் பிரசினையைத்

தீர்க்க புதிய மார்க்கத்தைக் காண்பித்தார். நாம் அவருடைய போதனையைச் சரியாகவும் பூரணமாகவும் அனுஷ்டிக்கவில்லை யென்றாலும், அதற்குச் சிறிது பலன் கிடைத்தது; உலக நிலை ஒரு விதமாய் உருவாகி, நாம் கடந்த அறுபது வருஷங்களாகப் போராடிக் கொண்டிருந்த சுதந்திரப் பிரசினை தீர்ந்துவிட்டது. இது நம் கண்முன்பு நிகழ்ந்த அதிசயம். சமூக அரசியல் பிரசினைகளைத் தீர்ப்பதற்கு ஆத்ம சக்தியைப் பயன் படுத்துவதற்கான வழியைக் காண்பித்த பெருமை காந்திஜிக்கே உரியது.

ஆத்மாவின் சக்தி, ஒரு ஸ்தூல சரீரத்தில் மட்டும் கட்டுப்பட்டதல்ல; இந்தப் பிரபஞ்ச முழுமையுமே அது பரவியுள்ளது. ஆதலால், மனிதனின் தனியான அல்லது பிரத்தியேக வாழ்வில்தான் ஆத்மாவினால் செயலாற்ற முடியும் என்பது தவறு. சர்வ வியாபகமாயிருப்பதால், அது மிகச் சிறிய மண்டலத்திலும், மிகப் பெரிய மண்டலத்திலும் வேலை செய்ய வல்லது. வாள் கத்தி முதலான ஆயுதங்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட தூரத்திற்குத்தான் அவை உதவும். துப்பாக்கி முதலான ஆயுதங்களை குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பாலிருந்துதான் பிரயோகிக்க முடியும். ஆனால் ஆத்மாவுக்கு இந்த வரையறைகளெல்லாம் இல்லை. ஒரு தனி மனிதனின் இதயத்தில் அது வேலை செய்வதுபோல் எல்லா உயிர்களின் இதயத்திலும் அது வேலை செய்யும். ஆனால், சரித்திரத்திலோ ஆத்மாவின் சக்தி தனி மனித வாழ்வில் ஆற்றிய செயல்களைத்தான் நாம் காண்கிறோம். மகான்கள் ஆத்மாவின் சக்தியால், அன்பினால், ஒரு பாவியை மகானாகவும் பகைவனை நேசனாகவும் மாற்றியதைப் பற்றிப் படித்திருக்கிறோம். இத்தகைய சம்பவங்கள் மற்ற நாடுகளிலும் இல்லாமலில்லை. ஆனால் ஒரு கூட்டத்திற்கோ அல்லது ஜன சமூக அளவிலோ ஆத்ம சக்தியைப் பயன் படுத்தியது ஒரு புதுமையான சோதனை. இந்தக் காலமும் அதற்கு ஏற்றதாயிருந்தது. இந்த யுகத்தின் தேவையும் அதுதான். இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆட்சி ஜனங்களை நிராயுதபாணியாக்கி, அதன்மூலம் சரித்திரத்தில் எந்தச் சக்கரவர்த்தியும் முயற்சிக்காத அளவுக்குத் தன் சூழ்ச்சியைக் காட்டியுள்ளது. அது அவ்வாறு செய்ய முடிந்ததற்கு விஞ்ஞானத்தின் உதவிதான் காரணம். மொகலாயர்களின் காலத்தில், நாட்டில் ஒரு சட்டம் நிறைவேற வேண்டுமானால் அதற்குள் சில வருஷங்கள் சென்றுவிடும். ஒரு உத்தரவு ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளையும் அடைவதற்கு நீண்ட காலம் ஆகும். ஆனால் இக் காலத்திலோ, லண்டனில் ஒன்றைப் பிரகடனம் செய்தால் அவ்வாறு செய்த சில மணி நேரத்திற்குள் நம் இந்தியாவின் மூலை முடுக்கிலெல்லாம் அது பரவிவிடுகிறது.

காந்திஜி சரித்திரத்தின் ஒரு தேவை

இருபதிலிருந்து முப்பது கோடி வரையுள்ள (அக்காலத்திய) ஜனத்தொகையும், புராதன நாகரிகத்தையும், கலாசார தர்ம அபிவிருத்தியில் மகத்தான சாதனைகளைக் காட்டும் சரித்திரத்தையும் கொண்ட நம் நாடு தன் ஆயுதங்களை இழந்துவிடவும், சாதாரண மனிதனுக்குத் தெரிந்திராத வேறொரு ஆயுதத்தை உருவாக்குவதன் மூலந்தான் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடிந்தது. இந்தியாவைப் போன்ற ஒரு பெரிய நாடு என்றென்றும் அடிமையாகவே இருந்துவர இயலாது. எனவே, காந்திஜியின் தோற்றம் சரித்திரத்தின் ஒரு தேவையாக இருந்தது. அவர் தோன்றியிராவிட்டால், வேறொருவர் அந்தக் காரியத்தைச் செய்திருப்பார். இந்த யுகமும் இந்தியாவின் சரித்திரமும் அஹிம்சையை தேச வியாபகமான அளவில் பரிசோதனை செய்து பார்ப்பதற்கு அனுகூலமாய் அமைந்தன. அக்காலத்தில் அஹிம்சை ஆயுதத்தைப் பரந்த அளவில் பிரயோகிப்பதைப்பற்றிக் கருதுவதற்கும் இல்லாமலிருந்தது. விஞ்ஞான முன்னேற்றம் இல்லாததால் அரசர்களின் அதிகாரமுங்கூட காலம், இடம், தீவிரம் ஆகியவற்றில் ஒரு வரையறைக்குள் நின்றது. மனித சமுதாய அளவில் அஹிம்சா சக்தியை நிரூபணம் செய்யும் வாய்ப்பு காந்திஜிக்குத்தான் கிட்டியது. ஏனென்றால் உலகில் இந்தியா விடுக்கும் செய்தி அதுவாக இருந்தது. இந்த நாடு அதற்கு ஏற்றதொரு நிலைக்களமாக அமைந்தது. நம் சரித்திர சம்பிரதாயங்கள் புராதனமானவை; ஆத்மிக சம்பத்து இடையறாது தொடர்ந்து வருகின்றமையால், ஜனங்களின் இதயம் அஹிம்சையை எளிதாக ஏற்றுக்கொண்டது. சைவ உணவு கொள்ளுபவர்கள் பெரும் அளவில் இந்தியாவில்தான் உள்ளனர். இங்கு

மாமிசம் சாப்பிடுவோர்கூட சைவ உணவே வாழ்க்கையில் சிறந்த வழியென்று நம்புகின்றனர்.

மேற்கத்திய சமதர்ம நெறி—சோஷலிசம்—இன்னும் குழந்தைப் பருவத்தில்தான் உள்ளது. இந்தியாவிலுள்ள சமதர்ம நெறி, தனக்கென்று தனித்தன்மை வாய்ந்தது; மிருகங்களிடத்துங்கூட அது காட்டப்படுகிறது. இந்திய மக்கள் பசுவைத் தங்கள் குடும்பத்தினரில் ஒன்றாகவே பாவிக்கின்றனர். இவ்வாறாக, இந்தியாவின் சூழ்நிலை காந்திஜி அவதரிப்பதற்கு மிக்க அனுகூலமாயிருந்தது. காந்திஜி இல்லாவிட்டால், இந்திய மண்ணில், அஹிம்சையின் சக்தியை நிரூபிக்க வேறொருவர் வந்து தோன்றியிருப்பார்.

இந்தியாவின்மூலம் உலக முழுமையையும் அஹிம்சையில் பயிற்றுவிடலாம் என்று காந்திஜி சொல்வது வழக்கம். அமெரிக்காவுக்கு ஒருமுறை விஜயம் செய்ய அழைத்தனர்; நம் தேசத்தில் அஹிம்சையின் சோதனை நிறைவேறி, இந்திய சமூக வாழ்க்கையில் அது பலித்த பிறகுதான் அங்கு வருவது சாத்தியமென்று சொல்லி, அவர் நிராகரித்துவிட்டார். அதுவரை உலகுக்கு எந்தச் செய்தியும் விடுப்பதற்குத் தான் அருகரல்ல என்றும் அவர் சொல்லிவந்தார். அவ்வாறு அவர் சொன்னது உண்மையே; இந்தியாவைப்பற்றி அவர் மிகவும் உயர்வான நம்பிக்கைகளைக் கொண்டிருந்தார்.

நம் நாட்டின்மேல் அவருக்கிருந்த பக்திதான் எவ்வளவு! எவ்வளவு அதிகமாய் அதை அவர் நேசித்தார்! அவரது வேலை பூர்த்தி பெற்றபடியால் இமயமலைக்குச் சென்று கடவுளைப்பற்றிய தியானத்தில் வாழ்வை ஈடுபடுத்தவேண்டும் என்று ஒரு அன்பர் கூறியபோது, "என் தேச மக்கள் இமயமலைக்குச் சென்றால் நானும் அங்கு அவர்களுக்குச் சேவை செய்வதற்காகச் செல்வேன்" என்று பதிலளித்தார். மக்களின் சேவையே அவருக்கு இமாலயமும், தியானமும் என்றிருந்தது. இமயமலைக்கு அவர் செல்லவேண்டிய அவசியம் என்ன? அவர் எங்கெங்கு இருந்தாரோ அங்கெல்லாம் இமாலயமும் சிவாலயமுந் தானே! கீதை என்னும் தாயிடம் வாஞ்சையுள்ள புத்திரராக அவர் இருந்தார்; பற்றற்ற வாழ்க்கை வாழ்வதற்கு இடையறாது பாடுபட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு இமாலயம் என்றால், கல் குவியலின் தொடர்கள் அல்ல; ஆனால் அது அவருக்கு புராதன ரிஷிகள் அங்கு கடைப்பிடித்த நியமங்களைக் குறிக்கும்.

நம்மிடமுள்ள முக்கிய சக்திகளை உணரும்படி அவர் செய்தார், கோழைத்தனத்திலிருந்து நம்மை உயர்த்தி வீரத்தை ஊட்டினார். வாசற்படி தாண்டியறியாத பெண்கள்கூட, வெளிவந்து, போராட்டத்தில் இறங்கி, ஆயுதந் தரித்த சிப்பாய்களை எதிர்த்து நின்றார்கள். தாக்க வருபவனைச் சமாளிப்பதற்காக ஆயுதம் தரித்திருக்கும் ஒருவனைக்காட்டிலும் அவ்வாறு செய்வதற்குத் தன் ஆத்ம சக்தியையே நம்பியிருக்கும் ஒருவன் தீரம் மிக்கவன் என்று அவர் சொல்வது வழக்கம். ஆயுதம் தரித்தவன் இறக்கவும் சித்தமாயிருக்கிறான், அந்த அளவுக்கு அவன் தீரமானவன்தான்; ஆனால் தன்னைக் காத்துக்கொண்டு, ஆயுதங்களின் உதவியால் தன் எதிரியைக் கொல்ல விரும்பும் அளவில் அவன் கோழையே. கொல்லாமல் இறப்பதற்குச் சித்தமாயிருப்பவன்தான் தீரன். இந்த அற்புதத்தை அவர் நிகழ்த்தினார்; ஏனென்றால் ஜனங்களின் உள்ளார்ந்த சக்தியை அவர் உணர்ந்தார். அஹிம்சையின் சக்தியை இந்தியா நிரூபிக்கும் என்பது அவரது திடமான நம்பிக்கை. இந்த நம்பிக்கைக்கு, நம் கண்ணெதிரில் நிகழ்ந்தபடி, அவரது வாழ்க்கையே நிரூபணமாகியது; இதனால், நம் நாட்டில் அஹிம்சையின் சக்தியைத் தெளிவு படுத்தலாம் என்ற நம்பிக்கை மேலும் உறுதியாகிறது.

மகாத்மாக்களின் வாழ்க்கை

மகாத்மாக்களின் வாழ்க்கை நம் ஆத்மாவின் பிரதிபிம்பத்தைக் காட்டும் கண்ணாடி. சிங்கக் குட்டியொன்று ஆட்டு மந்தையில் சேர்ந்து வளரவும், தன் இயல்பை மறந்து திரிந்தது; மற்றொரு சிங்கத்தைக் கண்ட பிறகுதான் தன் சுய இயல்பை அது உணர்ந்ததாம். அதேபோல, நாம் எல்லோரும் மகான்களின் வாழ்க்கையில் நம்மை நாமே உணரும் சிங்கங்கள். காந்திஜியின் வாழ்க்கை நம்மில் பொதிந்துள்ள ஜீவ சக்திகளை நாம் கண்டுகொள்வதற்கு வழிகாட்ட வல்லது.

பூமிதான யக்ஞம் தோற்றத்தில் சிறிதாக இருந்தாலும் அதில் புரட்சியின் வித்துக்கள் பொதிந்துள்ளன. பொருளாதாரப் புரட்சி

சுயராஜ்யத்திற்குப் பின்பு, அதற்கு முன் இருந்தது போலவே இந்தியாவின் தேவையாக இருக்கிறது. பொருளாதாரப் புரட்சியின் முக்கியத்துவம் சுயராஜ்யத்தினதை விடக் குறைந்ததல்ல. நான் எதற்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறேன்? என் தளர்ந்த கால்களால் காந்திஜி காட்டிய பாதையில் நடக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். அது நமது சம்பிரதாயங்களிலிருந்து தோன்றிய, நம் தேசத்திற்கே தனியான ஒரு வழி. நாம் இதை உணர்ந்து நம்மிடமுள்ள சிங்கத்தின் —ஆத்மாவின்—மேல் பிரதிபலிப்போமானால் நாமும் சிங்கங்களாக மாறலாம். காந்திஜிக்குத்தான் அது உரித்தான வழி என்று நாம் சொல்லக் கூடாது. அது நம்முடையதுந்தான். மகான்களின் வாழ்க்கை நம்முடையதிலிருந்து வேறுபட்டது என்று கருதுவோமானால் அது தற்கொலைக்குச் சமமானது. மகான்களின் வாழ்க்கையில் நாம் நமது ஆத்மாவின் பிரதிபிம்பத்தையே காண்கிறோம். நமது ஆத்மாவும் காந்திஜியைப் போன்று அவ்வளவு பெரும் சக்தி கொண்டது என்பதை நாம் உணரவேண்டும். இந்த நம்பிக்கையுடன் அடிமேல் அடியாக அந்தப் பாதையில் செல்வோமானால், சத்தியத்தை உணர்ந்து, நமது பிரசினைகளுக்கு முடிவு காணலாம்.

நிலப் பிரசினை

நிலப் பிரசினையை எடுத்துக்கொண்டு, அதற்கு அமைதியான பரிகாரத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன். குறிப்பிட்டதொரு உத்தியைக் கையாண்டு, நம்பிக்கையுடன் சோதித்துப் பார்க்கிறேன். ஜனங்கள் நான் சொல்லும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறார்களென்றும் தெரிகிறது. நிலம் கடவுளின் கொடையென்றும் அவருடைய குழந்தைகளான அனைவருக்கும் பயன்படவேண்டுமென்றும் உணர்கிறார்கள். நிலமில்லாதவர்கள் நிலம் கோரினால், தாகமடைந்திருப்பவனுக்குத் தண்ணீர் கொடுப்பதுபோல், அவர்களுக்கு நிலம் கொடுப்பது நம் கடமை. அதே போல, உழுவதற்கு நிலம் வேண்டுமென்று ஒருவர் கேட்டால் அவருக்கு நிலம் கொடுப்பது நம் கடமை. ஜனங்கள் நான் சொல்வதை உடனே கடைப்பிடிப்பது கஷ்டமாக இருந்தாலும், உணர்ந்து ஏற்கிறார்கள்; கஷ்டமென்று உணர்வதற்குக் காரணம், நிலத்திடம் உள்ள அவர்களுடைய பாசத்தை விடமுடியவில்லை. ஆனாலும், இதை உணர ஆரம்பித்திருக்கிறார்கள் என்பது பற்றித் திருப்தியடைகிறேன். இதுவரை எனக்கு சுமார் 62 ஆயிரம் ஏக்கர் நிலம் கிடைத்திருக்கிறது. இதையெல்லாம் அன்பைக்கொண்டே பெற்றேன். இதனால் நான் கையாளும் முறை வெற்றி பெறும் என்ற நம்பிக்கை ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. நிலப் பிரசினையைத் தீர்ப்பதற்காகப் புதியதொரு சோதனை இந்தியாவில் நடைபெறுகிறதென்று பிற நாட்டுப் பத்திரிகைகளும் எழுதுகின்றன. இப்போதுள்ள உலக நிலையில் அது ஒரு நூதனமான வழியென்று சொல்லி, வியப்புடன் பார்க்கிறார்கள். ஆனால் நம் சரித்திரமும் சம்பிரதாயமும் அறிந்தவர்களுக்கு அது நூதனமாகத் தோன்றாது. நியாயமான, சுலபமான வழி இதுதான் என்று உணர்வார்கள். மனித சமூகத்தின் நலனை உறுதிப்படுத்தி, சமூகத்தை துரிதமாக மாற்றியமைக்கும் வழி அது. ஹிம்சையைத் தழுவாமல் சமூகப் புரட்சியைச் சாதிக்கும் வழி அது. இந்த வழியில் எனக்கு நம்பிக்கையுண்டு; அதைக் கொண்டே வேலை செய்யவும் விரும்புகிறேன். நீங்களனைவரும் காந்திஜியின் வாழ்க்கையைக் கண்டிருக்கிறீர்கள்; இந்திய கலாசாரப் பண்பின் பிம்பம் உங்கள் இதயங்களில் தெரிகிறது. எல்லோரும் என்னுடன் இந்த வழியில் சக பிரயாணிகளாயிருந்து, இப்புனித வேலையில் உங்களால் முடிந்த அளவு கொடுப்பீர்களென்றும், இந்தியாவின் மிகச் சிக்கலான பிரசினைகளைத் தீர்ப்பதில் பூரண ஒத்துழைப்பையும் தந்து, இங்கு புதியதொரு சக்தியைத் தோற்றுவிப்பீர்கள் என்றும் நம்புகிறேன்.

"ஹரிஜன்", 1—3—'52

இத்தாலியில் பிரான்சிஸ் முனிவரின் சமாதியில் சர்வோதயப் பிரார்த்தனை

இத்தாலியில் அஸ்ஸிஸி என்னும் இடத்தில் பூஜ்ய பிரான்சிஸ் முனிவரின் சமாதியுள்ளது. பிரான்சிஸ் முனிவர் பன்னிரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த பிரசித்தமான கிறிஸ்துவப் பெரியார். கள்வர்களுக்கும், பட்சிகளுக்கும், ஓநாய்க்குங்கூட அவர் அன்புமூலம் செய்த உபதேச வார்த்தைகளும், அன்பை அடிப்படையாகக்கொண்ட அவரது வாழ்க்கையும் கல்லையும் கரையச் செய்யும். குஷ்டரோகிகளிடம் அவர் காட்டிய அன்பு அளவிடமுடியாதது. நம் தேசத்து காந்திமகானைப் போலவே பிரான்சிஸின் வாழ்க்கை அன்புமயமானது.

காந்திஜி மறைந்த சர்வோதய தினத்தன்று, இவ்வருஷம் ஜனவரி-ௐ 30-வ, மேல் நாட்டு சமாதானப் பிரியர்களில் சிலர் பிரான்சிஸ் முனிவரின் சமாதிக்குச் சென்று மாலை 5-மணிக்குக் கூடினார்கள். அப்பொழுது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கல்விப் பகுதி கூட்டத்திற்குச் சென்றிருந்த, ஹிந்துஸ்தானி தாலிமி சங்க உதவிக் காரியதரிசி, ஸ்ரீமதி ஆஷாதேவி அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு காந்திஜியைப்பற்றி முதலில் பேசினார். பின்பு அங்கு கூடியிருந்த அன்பர்கள் பிரான்சிஸ், காந்திஜி இரண்டு மகான்களின் பெயர்களையும் ஸ்மரித்துக்கொண்டு, உலகில் அன்பும் அஹிம்சையும் வளர்ந்து ஒரே உலகமாக ஒற்றுமையுடனும் அமைதியுடனும் இயங்கவேண்டும் என்று பிரார்த்தனை செய்தனர்.

அவர்கள் எல்லோரும் அந்தப் புனித சமாதியில் புனித சர்வோதய தினத்தன்று செய்த பிரார்த்தனையின் சாரம்:

"உலகத்தில் பொருளாதார, அரசியல், கலாசார ஐக்கியம் ஏற்படவேண்டும். இறுதிப் பயன் இதை எந்த வழியில் அடைகிறோமோ அதைப் பொறுத்திருக்கும். ஹிம்சைமூலம் அடைந்தால் முடிவும் ஹிம்சையாகவே இருக்கும்என்பதை சரித்திரத்தில் காண்கிறோம். ஆனால் அஹிம்சை முறையினால் இந்த லட்சியத்தை அடைந்தால் ஜன சமுதாயத்தில் உண்மையான அமைதியையும், மக்களின் சுதந்திரத்தையும், புதிய சமூகத்தைக் சிருஷ்டிக்கக்கூடிய புதிய ஜீவனையும் நாம் அடையலாம்.

இங்கு புதைந்துகிடக்கும் அவருடைய உடலை மறந்து, அவரது ஆத்மாவிலிருந்து வீசும் ஒளியையும் அன்பையும் நாம் ஏற்கவேண்டும். பக்த பிரான்சிஸ் தன் வாழ்க்கையில் கண்ட ஆத்மீக அன்பின் பிரபாவத்தை நாம் ஞாபக மூட்டிக்கொள்ளவேண்டும்.

சென்ற நூற்றுண்டுகளில் மேல் நாட்டு நாகரிகத்தால் ஏற்பட்ட நமது குறைகளும், கொடுமையும், இறுமாப்பும் அளவில்லாதன. இதைக்கொண்டு நாம் இப்பொழுது கோரும் உலகத்தின் ஆத்மீக ஐக்கியத்தை அடைய முடியாது என்பது உறுதி.

உலகத்தின் கீழ்-மேல் நாடுகளை ஒன்றுக இணைக்கவல்லது, அஹிம்சை மார்க்கத்தையும் அதன் தத்துவத்தையும் தவிர வேறு இல்லை. ஆசியாவும் மேல் நாடுகளும் இது வரை கொலை, களவு, அநீதி முதலானவற்றைக் கையாண்டதனுல் உண்டான பயனை நினைக்கவும் மனம் கூசுகிறது. இந்த நிலையில் பக்த பிரான்சிஸ் அவருடைய காலத்தில் ஹிம்சையை அன்பினுல் எதிர்த்து நின்றது போல, இப்பொழுது அஹிம்சா முறையைப் பின் பற்றுவதுதான் சிறந்த தெய்விக வழி. உண்மையான இன்பத்தையும் பூரண விடுதலையையும் கொடுக்கக்கூடிய அளவு கடந்த அன்பையும் சகிப்புத் தன்மையையும் பக்த பிரான்சிஸ் வெளிப்படுத்திவந்தார்.

மேல்நாட்டு நாகரிகம், சாஸ்திர-விஞ்ஞான முன்னேற்றம் எல்லாம் ஒரு எல்லையை அடைந்துவிட்டன. அவைகளில் ஒரு புதிய ஆத்மீக அம்சத்தைப் புகுத்தாவிட்டால் ஜன சமூகத்தின் விடுதலைக்கும் இன்பத்திற்கும் அவை பயன்படாதுபோகும். இதுவரை ஹிம்சை முறையால் ஏழை எளியோரை பலவான்கள் அடக்கியாண்டு வந்தனர். அத்துடன், அதிகார இறுமாப்பால் தங்களையும் அழித்துக்கொண்டனர். அதிகாரத்தினுலும்

★ பத்திரிகை உலகில் காந்திஜியின் "ஹரிஜன்" ★

மகாத்மா காந்திஜி நடத்திவந்த மூன்று ஹரிஜன் வாரப் பத்திரிகைகளை 1952 மார்ச்சு முதல் நிறுத்திவிடுவதாக நவஜீவன் டிரஸ்டிகள் செய்த தீர்மானம் பத்திரிகைகளில் வெளி வந்தது. இதைப் பார்த்து ஆயிரக்கணக்கானவர்கள் அதிர்ச்சியும் துயரமும் அடைந்தார்கள். இவைகளை எப்படியாவது நடத்த வேண்டும் என்று சிலர் கங்கணம் கட்டிக் கொண்டு நன்கொடை கொடுப்பதாகச் சொன்னார்கள். பலர் தாங்கள் அதிக சந்தாதார் சேர்த்துத் தருவதாக வாக்களித்தனர். பத்திரிகை உலகத்திலும் காந்தி பக்தர்களிடமும் இந்தப் பரபரப்பு ஏற்பட்டது ஆச்சரியமல்ல.

இந்த தேசத்தை விடுவித்து சத்தியத்தின் மூலம் அமைதியையும் மக்களின் ராஜ்யத்தையும் ஸ்தாபிக்கவே காந்திஜியின் குரலில் "யங் இந்தியா", "ஹரிஜன்" பத்திரிகைகள் தோன்றின. தேசம் உய்யும் அளவுக்கு சத்தியம் நிலைக்கும்வரை காந்திஜி ஆரம்பித்த பத்திரிகை அழியாமல் பிரகாசிக்கவேண்டும்.

காந்திஜியின் பத்திரிகைகளை நிறுத்த வேண்டிய அவசியம் என்ன? பத்திரிகை நடத்துவதைப்பற்றி காந்திஜியின் சித்தாந்தமாவது: 1. பத்திரிகையில் விளம்பரம் போடக்கூடாது; விளம்பர வருமானத்தைக் கொண்டு பத்திரிகை நடத்தக்கூடாது. 2. பத்திரிகையை வாசகர்களின் சந்தாவைக் கொண்டே நடத்தவேண்டும். 3. வாசகர்களின் போதிய ஆதரவு இல்லாமல் நஷ்டம் ஏற்பட்டால் பத்திரிகையை நிறுத்திவிட வேண்டும். காந்திஜி இருந்தபொழுது மூன்று ஹரிஜன் பத்திரிகைகளுக்கும் ஏராளமான சந்தாதார்கள் இருந்தனர். மூன்று ஹரிஜன் பத்திரிகைகளுக்கும் 1946-ல் 52,000 சந்தாதார்கள். பின்னர் 1947ல் 34,000; காந்திஜி இறந்தபொழுதோ 25,000. இடையில் கொஞ்ச காலம் நின்றுவிட்டது. ஆதலால் மேலும் 8,000 சந்தாதார்கள் குறைந்துவிட்டனர். 1952-ல் சந்தா எண்ணிக்கை மொத்தம் 9,000-க்கு வந்துவிட்டது. இதில் ஆங்கில ஹரிஜனுக்கு 2,840, குஜராத்திக்கு 3,890, ஹிந்திக்கு 2,270 தான். போதுமான சந்தாதார்கள் இல்லாததால் மொத்தமாக வருஷத்திற்கு ரூ. 40,000 நஷ்டம் ஏற்பட்டது. நவஜீவன் டிரஸ்டை ஏற்படுத்தியபொழுது, நஷ்டம் ஏற்பட்டால் கட்டாயமாகப் பத்திரிகைகளை மூடவேண்டுமென்று காந்திஜி கண்டிப்பாய் எழுதியுள்ளார். இந்த நிலைமையில் நவஜீவன் டிரஸ்டு வேறு என்ன செய்யக்கூடும்? நிறுத்திவிடத் தீர்மானித்தது ஆச்சரியமில்லை.

காந்திஜி பிறந்த குஜராத்திலேயே என் சந்தாதார் தொகை இவ்வளவு குறைந்துவிட்டதென்று தெரியவில்லை. அகில இந்தியாவில்—அதிகமாக, ஹிந்தி பேசும் மாகாணங்களில்—என் ஹிந்திப் பத்திரிகைக்கு ஆதரவு கொடுக்கவில்லை யென்பதும் தெரியவில்லை. எப்பொழுதும் ஆங்கில ஹரிஜனுக்கு தென்னாட்டில் அதிகமாக ஆதரவு இருந்திருக்கும் என்று எண்ணுவது மிகையல்ல. ஆதலால், ஆங்கில ஹரிஜனை ஆதரிக்கும் கடமையும் பொறுப்பும் தென்னாட்டினருக்கு அதிகம் என்று நினைக்கிறோம்.

தமிழ்நாட்டில் சில வருஷமாக சில காதி வஸ்திராலயங்கள் மூலம் ஹரிஜனுக்கு சந்தா சேர்க்க முயன்றோம். சந்தாத் தொகை

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஹிம்சையினாலும் பீடிக்கப்பட்டு சிக்குண்டுள்ள இப்பொழுதைய உலக நிலைமை இப்படியே என்றென்றும் இருக்கமுடியாது. சரித்திரத்தில் பதிந்து கிடக்கும் பிரான்சிஸ் முனிவரையும் காந்திஜியையும் போன்ற மனித மாணிக்கங்களை நாம் தியானத்தில் கொண்டு, உலகத்திலுள்ள கீழ்-மேல் நாடுகள் சாட்சியாக, இதுவரையில் வழி தவறிக் கெட்டுப் போன சமுதாயம் மீண்டும் அஹிம்சையையும் அன்பையும் ஏற்று உலகத்தை உய்விக்கும் புரட்சிப் பணியில் ஈடுபட நம்மை அர்ப்பணம் செய்துகொள்வோம்.

அன்புமயமான உலக சகோதரத்துவமும் நிரந்தர அமைதியும் ஏற்படுவதற்காகப் பாடுபடும் கிழக்கு-மேற்கு நாட்டு மக்கள் எங்களது இந்தப் பிரார்த்தனையிலும் பணியிலும் ஈடுபடுவார்களாக." ★ ★

கொடுக்கச் சிரமம் உள்ளவர்களுக்கு தனிப் பிரதிகள் கொடுக்கவும் சில வஸ்திராலயங்கள் மூலம் முயற்சி நடந்தது. இதனாலும் பயன் இல்லை என்று சொல்ல வருந்துகிறோம். "ஹரிஜன்," ஹிந்தி "ஸர்வோதயம்," "கிராம உத்யோக் பத்ரிகா" போன்ற காந்திய-சர்வோதயக் குரல் ஓசை இந்நாட்டில் மங்கி விட்டால் விமோசனமே இராது என்று கருதி, இந்தப் பத்திரிகைகளெல்லாம் படிக்காவிட்டாலும் இவைகளின் சுருக்கமாவது (Digest) கதம்ப ரூபத்தில் சிறிய மலிவான மாதப் பத்திரிகையாக வாலிபர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று எண்ணி சமீபத்தில் "கதர் உலகம்" ("The Khadi World") என்னும் ஆங்கிலப் பத்திரிகையை ஆரம்பித்தோம். கதர் உலகம் மூலம் அதன் தாய்ப் பத்திரிகைகளுக்கு புதிய சந்தாதாரும் படிப்பவர்களும் அதிகமாவார்கள் என்று எதிர்பார்த்தோம்.

இங்கு, காந்திஜியின் தத்துவ விளக்கம் சம்பந்தமாக காந்திஜி கூறியது ஞாபகம் வருகிறது. காந்திஜியின் வாழ்க்கைசித்தாந்தம், அவருடைய திருஷ்டி முதலியவைகளை ஒரு உருவாக எழுதவேண்டுமென்று காந்திஜியை சில நண்பர்கள் 1947-ல் கேட்டுக்கொண்டனர். காந்திஜிக்குச் சமயம் இல்லாவிட்டாலும், ஸ்ரீ காகா கலேல்கர், ஸ்ரீ கிஷோரிலால் மஷ்ருவாலா, விநோபாஜி இவர்களில் யாராவது ஒருவரைக்கொண்டு எழுதச்செய்ய வேண்டுமென்று காந்திஜியை மேலும் கேட்டனர். அதற்கு காந்திஜி எழுதிய பதில் விசேஷமானது. மேலே குறிப்பிட்ட மூன்று பேரும் தகுதியுள்ளவர்கள் என்று ஒப்புக்கொண்டார். ஆனால், காகா கலேல்கர் ஓயாத நாடோடி; அவர் ஓரிடத்தில் உட்கார்ந்து இந்த வேலையைச் செய்யமுடியாது. ஸ்ரீ கிஷோரிலாலோ நோயுற்ற உடலைச் சுமையாகத் தாங்கிக்கொண்டே சக்திக்கு அதிகமாக வேலை செய்து வருகிறார்; அவராலும் இது முடியாது. விநோபாஜியோ ஆராய்ச்சியாளர்; இந்த வேலையில் அவருக்கு மனம் இராது. இவ்வாறு கூறி, காந்திஜி இந்த யோசனை சாத்தியமில்லை என்று சொல்லி விட்டார்.

ஆனால் காந்திஜிக்குப் பிறகு அதிர்ஷ்டவசமாக ஸ்ரீ கிஷோரிலால் மஷ்ருவாலா மூன்று ஹரிஜன் பத்திரிகைகளையும் ஏற்று நடத்தி, மகாத்மாவின் அடிச்சுவடுகளில், அவருடைய லட்சியத்தைக் கடைப்பிடித்து, காந்திஜியின் குரல் மங்காமல் காத்து வருகிறார். விநோபாஜியும் ஹிந்தி "ஸர்வோதய"த்திற்கு ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்தி வருவது நமது பெரும் பாக்கியமே. இருளடைந்த இந்த தேசத்தில், பத்திரிகை உலகில் இந்த இரு தீபங்களும் அணைந்து விடாமல் பார்த்துக்கொள்வது காந்திய பக்தர்களின் கடமையாகும்.

நல்ல வேளையாக ஹரிஜன் பத்திரிகைகளை மேலும் ஆறுமாதகாலம் தொடர்ந்து நடத்துவதாக நவஜீவன் டிரஸ்டு மீண்டும் முடிவு செய்துள்ளது. இதற்குள்ளாக தேவையான சந்தாதாரைவிட ஏராளமான சந்தாதார் சேருவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஒருவேளை நவஜீவன் டிரஸ்டு ஆங்கில ஹரிஜனை நடத்த முடியாவிட்டால் இதை சர்வ சேவா சங்கம் ஏற்றுக்கொண்டு நடத்த முன் வந்துள்ளது. யார் நடத்தினாலும் நஷ்டம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது வாசகர்களின் கடமையாகும்.

மாணவர்களுக்கு மான்யம்

மேலும், சர்வ சேவா சங்கம் புதிதாக சந்தாதாராகச் சேரும் மாணவர்களுக்கும் நிர்மாண ஊழியர்களுக்கும் ஹரிஜனின் வருஷச் சந்தாவில் பாதியை ஈடுசெய்ய முன் வந்துள்ளது. மாணவர் அல்லது நிர்மாண ஊழியர் புதிதாகச் சந்தாதாராகச் சேர்ந்தால் ஹரிஜனுக்கு வருஷச் சந்தா ரூ. 6க்குப் பதிலாக ரூ. 3 மட்டும் கட்டினால் போதுமானது. பாக்கி சந்தா ரூ. 3ஐ சர்வ சேவா சங்கம் நவஜீவன் டிரஸ்டுக்கு மான்யமாகக் கொடுக்கும். இதேபோல் ஹிந்தி ஹரிஜன் பத்திரிகைக்கும் மான்யம் கொடுக்கப்படும். இம்மாதிரி, இரண்டிலும் சேர்ந்து புதிய 1500 சந்தாதார்களுக்கு ரூ. 4500 வரை மான்யம் கொடுக்க சர்வ சேவா சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழ் நாட்டில் மாணவர்களும் நிர்மாண ஊழியர்களும் புதிதாக சந்தாதாராகச் சேரும்படி வேண்டிக்கொள்கிறோம்.

"கதர் மலர்" வாசகர்கள் இதில் விசேஷ ஊக்கம் எடுத்துக்கொண்டு பத்திரிகை உலகில் இந்த ஆங்கில, ஹிந்தி "ஹரிஜன்" தீபங்கள் அணையாமல் பார்த்துக்கொள்ள முன் வருவார்கள் என்று உறுதியாக நம்புகிறோம். ★

★ சர்வோதய மேளா-யாத்திரை ★

மாகாணங்களில்

சேவாகிராமம் கதாயி மண்டல் விபாக்கின் சஞ்சாலக் ஸ்ரீ என். ஆர். சோவனி விடுத்துள்ள அறிக்கையின் சாரம்:—

சென்ற வருஷம் மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, கேரளா முதலிய இடங்களில் சர்வோதய யாத்திரை செய்து பல கிராமங்களில் தொண்டர் கோஷ்டிகள் சர்வோதய லட்சியத்தைப்பற்றிப் பிரசாரம் செய்தார்கள். இவ்வருஷமும் எல்லா மாகாண விபாகங்களிலும் சர்வோதய மேளா - யாத்திரைகள் நடத்தவேண்டிய அவசியத்தைப்பற்றி சர்க்கா சங்க அக்கிராசனர் ஒரு அறிக்கை விடுத்தார். அதனல் சர்க்கா சங்கக் கிளைகள் உள்ள இடங்களில் எல்லாம், புதிய உற்சாகமும் ஊக்கமும் காட்டி, பல யாத்திரைக் கோஷ்டிகள் கிராமங்களில் பிரசாரம் செய்தார்கள். சர்க்கா சங்கத் தொண்டர்கள், கதாயி மண்டல் அங்கத்தினர்கள், நிர்மாண ஊழியர்கள் எல்லோரும் யாத்திரையில் பங்கு எடுத்துக்கொண்டார்கள்.

இதுவரையிலும் மாகாண விபாகங்களிலிருந்து கிடைத்த கடிதங்களிலிருந்து சுமார் 250 சர்வோதய யாத்திரைக் கோஷ்டிகள் பங்கு எடுத்துக்கொண்டிருக்கலாம் என்று தெரிகிறது. மாகாணவாரியாக யாத்திரை செய்த சர்வோதய கோஷ்டிகளின் எண்ணிக்கை விவரம், இது வரை கிடைத்துள்ள அறிக்கைப்படி, பின்வருமாறு:

		கோஷ்டிகளின் எண்
ஆந்திர மாகாணம்		
கிருஷ்ணு	விபாக்	4
கர்னுடக மாகாணம்		
கலாட்கி	விபாக்	2
கல்ஹால்	,,	1
ஹுப்ளி	,,	2
குர்ல்ஹோசர்	,,	1
சவதத்தி	,,	1
ரான்	,,	4
தென் கர்னுடகம்	,,	4
தார்வார்	,,	1
மொத்தம்		16
தமிழ்நாடு		
சென்னை	விபாக்	1
திருப்பூர்	,,	9
திருச்சி-தஞ்சை	,,	15
மதுரை	,,	4
திருநெல்வேலி	,,	4
மொத்தம்		33
கேரளம்—3 விபாகங்களிலும்		35
ராஜஸ்தான்		11
பீஹார்		26
ஹைதராபாத்		1
சிவராம்பள்ளி		1
சௌராஷ்டிரம்		1
குஜராத்		20
நாகவிதர்ப்பம்		2
சேவாகிராமம்		1
காதி சதன், நரசிங்கபூர், பீஹார்		1
வங்காளம் (சுமார்)		50
ஆக மொத்தம் கோஷ்டிகள்		202

பொதுத் தேர்தல் நடந்துகொண்டிருந்ததால் சர்வோதய யாத்திரையில் பொதுஜனங்களிடையே அவ்வளவு உற்சாகம் இராது என்று எண்ணினேம். ஆனல் இதற்கு மாருக யாத்திரைக் கோஷ்டிகள் போன இடங்களில் எல்லாம், ஆண் பெண் குழந்தைகள் எல்லோரும் உற்சாகத்துடன் பொதுப் பிரார்த்தனை, துப்புரவு வேலை, நூற்பு யக்ஞம், பிரசங்கம் முதலியவைகளில் ஏராளமாகக் கலந்து கொண்டார்கள்; சர்வோதய மேளாவிற்கு நூல் காணிக்கை கொடுத்தார்கள். மேலும், பூமிதான யக்ஞத்திற்கு, வினேபாஜியின் வேண்டுகோளுக்கு இணங்க, சிலர் பூமிதானமும் வழங்கினர்கள்.

காலத்தின் வெள்ளம் வெகு வேகமாக வந்துகொண்டிருப்பதை மக்கள் உணர்ந்து வருகிருர்கள் என்பது தெளிவு. நகரத்தின் பணக்கார யந்திர நாகரிகம் கலக்கமடைந்திருக்கிறது. கிராம மக்களிடம் புதிய சக்தி பெருகிக்கொண்டு வருகிறது என்பது வெளிப்படை. அடுத்த வருஷ சர்வோதய யாத்திரையில் அதிகமான கோஷ்டிகள் பங்கு எடுத்துக்கொண்டு, பூமிதான பொருளாதாரத் திட்டமும் சுயதேவைப் பூர்த்தியும் ஒவ்வொரு குடிசையிலும் வேரூன்றும்படிச் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

* *

தமிழ்நாட்டில்

தமிழ் நாட்டில் எல்லா விபாகங்களிலும் 30 ஊழியர் கோஷ்டிகள் சர்வோதய பட்சத்தில் யாத்திரை செய்தார்கள்; 413 கிராமங்களில் பிரசாரம் செய்தார்கள்.

கிராமங்களில் சுயதேவைப் பூர்த்தி, மில் பொருள் பகிஷ்காரம், பூமிதான யக்ஞம் முதலிய விஷயங்களைப்பற்றிப் பிரசாரம் நடந்தது. அத்துடன், ராட்டை கதிர் முதலியவை பழுது பார்ப்பதிலும், மூங்கில் ராட்டை செய்யக் கற்றுக் கொடுப்பதிலும் ஊழியர்கள் சேவை புரிந்தார்கள். குழிக் கக்கூஸ் பலவிடங்களில் போட்டுக் காட்டினார்கள். நூற்பு யக்ஞம், பொதுத் துப்புரவு, பிரார்த்தனை, சர்ச்சை முதலியவை அன்றாட வேலைத்திட்டமாக இருந்தது.

தேர்தல் மும்முரத்திலும், அறுவடைக் காலத்திலும், மற்றக் கஷ்டங்கள் இருந்த போதிலும் தொண்டர்கள் போன கிராமங்களில் எல்லாம் கிராமவாசிகள் உற்சாகத்துடன் வரவேற்றனர். உணவு – ஆடை சம்பந்தமாய் மில் பொருள்களை பகிஷ்காரம் செய்வதாகச் சுமார் 200 பேர் சங்கற்பம் செய்தார்கள். இந்த யாத்திரையினால் கிராம மக்களுடன் நல்ல தொடர்பு ஏற்பட்டது, ஊழியர்களுக்கும் நமது வேலைக்கும் கிடைத்த பெருத்த லாபமாகும்.

திருப்பூர் விபாக்

திருப்பூர் விபாக்கில் 12 கோஷ்டிகள் 157 கிராமங்களுக்குப் போனார்கள். பல இடங்களில் நூற்பு யக்ஞத்தில் 2141 பேரும், பிரார்த்தனையில் 16341 பேரும், துப்புரவில் 470 பேரும் கலந்துகொண்டார்கள். 230 ராட்டைகளும், 522 கதிர்களும் தொண்டர்கள் பழுது பார்த்துக் கொடுத்தனர். நூல் காணிக்கையாக 609 சிட்டம் கிடைத்தது. 17 கக்கூஸ்களும் 34 உரக்குழிகளும் தயார் செய்தனர். 134 பேர் மில் பகிஷ்காரப் பிரதிக்ஞை செய்தார்கள்.

கோபி தாலுகா சூகலூர் வட்டாரத்தில் 13 கிராமங்களிலும், இந்தியன்பாளையம் வட்டாரத்தில் 12 கிராமங்களிலும், காட்டுப்பாளையம் வட்டாரத்தில் 12 கிராமங்களிலும், சத்தியமங்கலத்தில் 13 கிராமங்களிலும், புளியம்பட்டி சரகத்தில் 12 கிராமங்களிலும் ஆக 62 கிராமங்களில், சர்வோதய பட்சத்தில் பொதுத் துப்புரவு, நூற்பு வேள்வி, பிரார்த்தனை முதலிய திட்டத்தை நடத்தினார்கள். இதில் ஸ்ரீ கே. பி. வி. கிரி, ஸ்ரீ ஜி. எஸ். லக்ஷ்மணன், ஸ்ரீ பி. ஜி. கருத்திருமன் எம். எல் ஏ., முதலிய பல அன்பர்களும், இந்தியன்பாளையம் சர்க்கா சங்க ஊழியர்கள் 20 பேரும் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டார்கள்.

சென்னை விபாக்

சென்னை விபாக்கில் 2 கோஷ்டிகள் 28 கிராமங்களுக்கு விஜயம் செய்தார்கள். நூல் காணிக்கை 29 சிட்டம் வசூல் செய்யப்பட்டது. யாத்திரீகர்கள் 9 ராட்டைகளைப் பழுது பார்த்துக் கொடுத்தார்கள்.

திருநெல்வேலி விபாக்

சங்கரன்கோவில் கிளையிலிருந்து ஒரு கோஷ்டியும், சிப்பிப்பாறையிலிருந்து ஒரு கோஷ்டியும், விளாத்திகுளத்திலிருந்து ஒரு கோஷ்டியும், திசையன்விளையிலிருந்து ஒரு கோஷ்டியும், ஆக நான்கு கோஷ்டிகள் கன்னியாகுமரியை நோக்கி யாத்திரை செய்தார்கள்.

சிப்பிப்பாறை கதாயி மண்டல் காரியதரிசி ஸ்ரீ அய்யாத்துரை, ஸ்ரீ சிவசுப்ரமணிய பாண்டியன், ஸ்ரீ பழவூர் சுப்ரமணிய பிள்ளை, ஸ்ரீ வி. என். சீனிவாசன் முதலியவர்களும் இதர கதாயி மண்டல் அங்கத்தினர்களும், ஆக 23 பேர் நான்கு கோஷ்டிகளிலும் கலந்துகொண்டார்கள்.

மற்ற கோஷ்டிகளைப்போலவே, தினம் காலை 5-மணியிலிருந்து இரவு நெடுநேரம் வரையிலும் துப்புரவு, நூற்பு யக்ஞம், பிரார்த்தனை, பிரசாரம் முதலிய திட்டங்களை அனுஷ்டித்தார்கள். யாத்திரை வழியில் விளாத்திகுளம் வட்டாரத்திலுள்ளவர்கள் தங்கள் சுயதேவைக்கு கைமணையில் பருத்தி அரைத்து நூற்கத் தீர்மானித்திருக்கிறார்கள். கன்னியாகுமரி யாத்திரையில் கலந்துகொள்ள முடியாதவர்களான சில தொண்டர்களும், கதாயி மண்டல் அங்கத்தினர்களும் மாலையிலும் இரவிலும் தங்கள் ஸ்தலத்தில் சுற்றுப்புறமுள்ள கிராமங்களில் இந்த வேலைத் திட்டத்தை நடத்தினார்கள். பிப்ரவரி 12ந்தேதி கன்னியாகுமரியில் விபாக்கின் 37 தொண்டர்கள் கலந்துகொண்டார்கள். கன்னியாகுமரியில் ஸ்ரீ எஸ். சிவன் பிள்ளை

தலைமையில் மேளா நடந்தது. அந்த வட்டார சர்க்கா சங்கத் தொண்டர்களும், கஸ்தூரிபா நிதியின்கீழ் பயிற்சிபெறும் பெண்களும், ஆக சுமார் 250 பேர் கலந்துகொண்டார்கள். அன்று கல்லுப்பட்டி ஸ்ரீ ரா. குருசாமி (சர்க்கா சங்க டிரஸ்டி) அவர்களின் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது.

திருநெல்வேலி விபாக்கில் இந்த 4 கோஷ்டிகளும் சுமார் 230 மைல் நடந்து 53 கிராமங்களுக்கு விஜயம் செய்தார்கள். பல கிராமங்களிலும், நூற்பு யக்ஞத்தில் கலந்துகொண்டவர்கள் 1753 பேர்; பிரார்த்தனையில் கலந்து கொண்டவர்கள் 12,665 பேர். ராட்டை 376-ம், கைமணை 40-ம், கதிர்கள் 34-ம் யாத்திரீகர்களால் பழுதுபார்த்துக் கொடுக்கப் பட்டன. யாத்திரையில் கிடைத்த நூல் காணிக்கை 355 சிட்டம். 6 கக்கூசுகளும், 33 உரக்குழிகளும் தொண்டர்கள் போட்டுக் கொடுத்தார்கள். மில் பொருள் பகிஷ்கார சங்கற்பம் செய்து கொண்டவர்கள் சுமார் 20 பேர்.

வட ஆர்க்காடு ஜில்லா

வட ஆர்க்காடு ஜில்லாவில் சர்வோதய பட்சத்தில் காதி பிரசாரகர் பி. வி. ராமச்சந்திர அய்யர் தலைமையில் 9 பேர் அடங்கிய ஒரு கோஷ்டி 70 மைல் நடந்து 21 கிராமங்களில் சர்வோதயப் பிரசாரம் செய்தார்கள்.

இந்த யாத்திரையில் பிர்க்கா அபிவிருத்தி அதிகாரி ஸ்ரீ எஸ். கிருஷ்ணமூர்த்தியும், அவருடைய கிராம அபிவிருத்தி அதிகாரிகள் நால்வரும், காதி ஆபீசர் ஒருவரும், புகளூர் ஹரிஜன சேவா சங்கம் ஸ்ரீ எஸ். எஸ். நாகேஸ்வரன் அவர்களும் கலந்துகொண்டனர்.

யாத்திரை ஸ்தலங்களில் முக்கிய ஏற்பாடுகளை பிர்க்கா அபிவிருத்தி அதிகாரி ஸ்ரீ எஸ். கிருஷ்ணமூர்த்தியும், அவருடைய சகாக்களும் செய்தனர். நூல் காணிக்கையாக 67 சிட்டம் கிடைத்தது. யாத்திரையில் நடந்த பொதுக்கூட்டங்களில் மொத்தம் சுமார் 1000 பேரும், நூற்பு யக்ஞத்தில் 168 பேரும், பிரார்த்தனையில் 434 பேரும் கலந்துகொண்டார்கள்.

திருச்சி - தஞ்சை விபாக்

அஸ்தி கரைத்த ஸ்ரீரங்கம் அம்மா மண்டபத் துறையில் 12–2–'52ல் சர்வோதய மேளா நடந்தது. தஞ்சை, திருச்சி ஜில்லாக்களின் சர்க்கா சங்க ஊழியர்களும், கதாயி மண்டல் அங்கத்தினர்களும், நிர்மாண ஊழியர்களுமாக 40 பேர் எட்டு யாத்திரை கோஷ்டிகளாக தஞ்சை - திருச்சி ஜில்லாக்களில் கிராமந்தோறும் சர்வோதய லட்சியம், சுயதேவைப் பூர்த்தி, வினோபாஜியின் பூமிதான யக்ஞம், மில் பொருள் பகிஷ்காரம், உரக்குழி தயாரிப்பு முதலிய விஷயங்களைப் பற்றிப் பிரசாரம் செய்துகொண்டு, 12–2–'52 காலை ஸ்ரீரங்கம் அம்மாமண்டபத்திற்கு மேளாவுக்கு வந்து சேர்ந்தனர். அங்கு காலை 7-30 முதல் 8-30 மணி வரையில் சமூக நூற்பு யக்ஞமும் சர்வமதப் பிரார்த்தனையும் நடைபெற்றது. நூற்பு வேள்வியில் பெண்கள் உள்பட சுமார் 150 பேர் கலந்துகொண்டனர் நூல் காணிக்கையும் செலுத்தப்பட்டது.

பின்னர் யாத்திரை கோஷ்டியினர் தாங்கள் செய்துவந்த யாத்திரையின் அனுபவங்களைப்பற்றிச் சர்ச்சை செய்தனர்.

இந்த மேளாவையொட்டி திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் சமூக நூற்பு வேள்வியிலும், சர்வமதப் பிரார்த்தனையிலும் மேற்கண்ட யாத்திரை கோஷ்டியினரும் திருச்சி வாசிகளும், குறிப்பாக பெண்களும், கலந்துகொண்டனர். நூற்பு யக்ஞத்தில் சுமார் 150 பேர் கலந்துகொண்டனர். இங்கும் மேளாவுக்கு நூல் காணிக்கை செலுத்தப்பட்டது. பொதுவாக, இந்த மேளாவில் திருச்சி வாசிகளும் ஏனையோரும் மிக்க உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது என்று திருச்சி - தஞ்சை விபாக் சஞ்சாலக் ஸ்ரீ மருதநாயகம் அறிவிக்கிறார்.

புதுச்சேரியில் மேளா

வேட்டவலம் கதாயி மண்டல் காரியதரிசி, ஸ்ரீ ரத்தினசாமி கண்டர் எழுதுவது:- ஆலூர், வேட்டைவலம் முதலிய கிராமங்களில் ஸ்ரீ ஏ. ராமச்சந்திர ரெட்டியார் தலைமையில் பிப்ரவரி 10-ௗ சர்வோதய முகாம் நடந்தது. பிப்ரவரி-மீ 12-ௗ புதுச்சேரியில் அன்னார் தலைமையில், காந்திஜியின் அஸ்தி கரைத்த சமுத்திரக் கரையில், நூற்பு யக்ஞம், பிரார்த்தனை, நூற்புவேள்வியுடன் சர்வோதய மேளா நடந்தது.

★ ★ ★

சர்வோதய யாத்திரையும் கிராம வேலையும்

சர்க்கா சங்கம், திருப்பூர் விபாக்கின் சஞ்சாலக் 5–3–'52ல் விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:—

சமீபத்தில் சர்வோதய யாத்திரைகள் மூலம் சங்கக் கிளையைச் சேர்ந்த அநேக கிராமங்களில் பிரசாரமும், கிராம வேலைகளும் நடை பெற்றுள்ளன. அவ்வமயம் அந்த கிராமங்களில் நம்பால் எழுந்துள்ள ஆதரவையும், சர்வோதய லட்சியத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய நம்பிக்கையையும் ஸ்திரப்படுத்திக் கொள்வது அவசியம்.

இது, நேரில் அடிக்கடி அக்கிராமங்களுக்குச் சென்றாலன்றி சாத்திய மில்லை. ஆகையால் உடனடியாக, இம்மாதக் கடைசிக்குள், சர்வோதய யாத்திரை முகாம்கள் நடந்த கிராமங்களுக்கு மீண்டும் தொண்டர்கள் விஜயம் செய்து, பிரசார வேலைகளுடன், அந்த கிராமங்களில் (1) கதாயி மண்டல்கள், (2) நூற்போர் மண்டல்கள், (3) மில் பகிஷ்காரக் கமிட்டிகள், (4) சர்வோதயக் குழுக்கள் — இவற்றில் ஏதாகிலும் ஒன்று அமைக்க வேண்டும். கதாயி மண்டல்கள் அமைப்பது அவசியமாகும்.

(2) நூற்போர் மண்டல் என்பது, சர்க்கா சங்க வேலைத் திட்டத்திலும், சுய தேவைப் பூர்த்தி, சர்வோதய லட்சியங்களிலும் நம்பிக்கையிருக்கும் 5 நூற்பவர்கள் இருந்தால் போதும்; அவர்களுக்கு மற்ற கதாயி மண்டல் விதிகளின்படி யோக்கிய தாம்சங்கள் இல்லாமலிருந்தாலும், இம் மண்டல் திட்டப்படி வேலை செய்து வரலாம்.

(3) மில் பகிஷ்காரக் கமிட்டி:- உணவு உடை இருவகையிலும் குவியல் முறையில் அமைந்து உற்பத்தி செய்யப்படும் வஸ்துக்களை எக்காரணங் கொண்டும் நம்பியிருக்கக் கூடாது என்ற உறுதிபடைத்த 3 அல்லது 5 பேர் கொண்ட மண்டல்களாக அமைத்து மாதாந்திரக் கூட்டங்கள், நூற்பு, பிரார்த்தனை, கிராமத் துப்புரவு, கூட்டுறவுக் கிராமக் கைத்தொழில் வளர்ச்சி முதலிய வேலைகள் செய்ய வேண்டும்.

(4) சர்வோதயக் கமிட்டிகள் என்பவை, காந்தியடிகளின் 21 நிர்மாண வேலைகளில் எதிலாவது நம்பிக்கை வைத்துள்ள அன்பர்கள் சேர்ந்த கமிட்டிகளாகும். கதர், கிராமக் கைத்தொழில், மதுவிலக்கு, ஜாதிமத சமரசம், தொழிலாளர் நலம், பசுப் பாதுகாப்பு, சுரண்டலற்ற வாழ்க்கை, குஷ்ட நிவாரணம், ஹிந்தி பிரசாரம், ஹரிஜன அபிவிருத்தி முதலிய எதில் நம்பிக்கையிருந்தாலும், அந்த வேலையின் வளர்ச்சிக்காகச் சிறிது நேரமாகிலும் மாதந்தோறும் செலவிடுவதற்குத் தயாராயிருக்கும் எவரும் இதில் அங்கம் வகிக்கலாம்.

கதாயி மண்டல் அமைப்பதாயின் காரியாலய விதிகளுக்குட்பட்டு ஏற்படுத்த வேண்டும். மற்ற மூன்று வகை ஸ்தாபனங்களும் காலக்கிரமத்தில் கதாயி மண்டல்களாக அமைவதற்காகவே முயற்சி செய்து வரும்படியும், அடிக்கடி பார்வையிட்டும், உற்சாகமூட்டியும் வரவேண்டும். கிளைகள் அவ்வக் கிராமங்களில் இம்மாதிரி கமிட்டிகள் அமைத்து அதில் சேரும் நண்பர்களின் பெயர்களின் விவரம் தெரிவிக்குமாறு கோரப்படுகிறது.

தலைவர், காரியதரிசி முதலிய பதவிகளால் ஏற்படும் பிளவுகள் வேலையைப் பாதிக்கிறபடியால், நமது அறிக்கைகள் தபால்கள் முதலியன அனுப்பும் பொருட்டு ஒருவரை அவர்களே தேர்ந்தெடுத்து தெரிவிப்பது நலம். எல்லா அங்கத்தினர்களும் ஒன்றாகச் சேர்ந்து வேலை நடக்க இம்முறை பயன்படும். ★ ★

"ஹிந்தி பத்ரிகா"

தமிழ் நாடு ஹிந்தி பிரசார சபாவின் ஹிந்தி – தமிழ் மாதப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 3 — தனிப் பிரதி (தபால் செலவுடன்) 0—5—9

விவரங்களுக்கு எழுதவும்:

தமிழ் நாடு ஹிந்தி பிரசார சபா, தென்னூர், திருச்சிராப்பள்ளி.

குறிப்பும் செய்தியும்

சர்வோதய சம்மேளனம்

இந்த வருஷம் சர்வோதய சம்மேளனம் காசிக்கருகில் சேவாபுரி என்ற இடத்தில் ஏப்ரல் 13, 14, 15 தேதிகளில் நடைபெறும். அந்தச் சமயம் ஆச்சாரிய வினோபாஜி விஜயம் செய்வார். முந்திய சம்மேளனம்போல் தனிப்பட்ட நிர்மாண ஸ்தாபன மகாநாடோ, ஸ்தாபனங்களில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டமோ, சர்வ சேவா சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டமோ நடக்காது. பூமிதான யக்ஞத்தை தேசீய இயக்கமாகச் செய்து இப்பொழுதுள்ள அவசரமான தேசீயப் பிரசினைகளைத் தீர்க்க திட்டம் வகுப்பதிலேயே சம்மேளனத்தின் முழு கவனமும் நேரமும் செலவிடப்படும் என்று தெரிகிறது.

வினோபாஜிக்கு உத்தரப் பிரதேசத்தில் அவர் கோரிய 5 லட்சம் ஏக்கர் நிலம் பூமி தானமாகக் கிடைக்கக் கூடும். இதைப் பின்பற்றி மற்ற மாகாணங்களிலும் உடனே ஒரு திட்டம் வகுத்துக் கொண்டு, பூமிதான யக்ஞத்தை ஆரம்பித்து நிறைவேற்ற தலைவர்களும் ஊழியர்களும் முன்வர வேண்டும் என்பது வினோபாஜியின் கோரிக்கை. ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் சர்வோதய ஊழியர்கள் ஏராளமாக சேவாபுரிக்குப் போய் பூமிதான யக்ஞத் திட்டதில் பங்கு கொள்ள தக்க சமயம் வாய்த்துள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து அதிகமானவர்கள் போவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஸ்ரீ ஓ. பி. ராமசாமி ரெட்டியார், சர்தார் வேதரத்னம், ஸ்ரீ கே. கே. சுப்பண்ண கவுண்டர் போன்றவர்கள் பூமிதான யக்ஞத்தில் தலைமைப்பொறுப்பு எடுத்துகொண்டு தமிழ்நாட்டில் நிலப் பிரசினையைத் தீர்த்து சமூக அமைதியையும் சௌஜன்யத்தையும் உண்டாக்க முன்வருவார்கள் என்று வாலிபர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

சர்வோதய சமாஜத்தில் தங்கள் பெயரை தமிழ்நாட்டில் சர்தார் வேதரத்னம் அவர்களிடம் பதிந்து கொண்டவர்களுக்கு சேவாபுரி சம்மேளனத்திற்கு அழைப்புப் பத்திரம் வரும். போகவர ரயில் யாத்திரையிலும் முன் வருஷம்போல் அரை சார்ஜ் சலுகை ரயில்வே போர்டு அளிக்கும் என்று தெரிகிறது. இதற்காக சேவாகிராமத்திலிருந்து வரும் அழைப்புடன் ரயில்வே சலுகைக்கு ஒரு அத்தாட்சிப் பத்திரமும் அனுப்பப்படும்.

இலங்கையில் உள்ள சர்வோதய ஊழியர்கள் தங்கள் பெயரை 'இலங்கை காந்திய சேவா சங்கம், காரியதரிசி, ஸ்ரீ வேலாயுதம் பிள்ளை, நீர்வேலி, யாழ்ப்பாணம்' என்ற விலாசத்தில் பதிந்து கொள்ள வேண்டும்.

அகில இந்திய நிர்மாண ஊழியர்களின் 'டைரக்டரி' — அல்லது 'யார் யாவர்' (who is who) என்ற விவரம் அடங்கிய புத்தகம்— இது வரையில் தயாரிக்கப்படவில்லை. தனிப்பட்ட ஸ்தாபனங்களைப்பற்றியும், அகில இந்தியாவிற்கும் 'டைரக்டரி' இல்லை. இவை இரண்டையும் தயாரிக்கப் பல முயற்சிகள் செய்தும், இதுவரை பலனளிக்கவில்லை. இந்த வருஷம் இவைகளை தயாரிக்க தீவிர முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இதற்காக ஒரு கேள்வித்தாள் (Questionaire) பாரம் தயாரிக்கப்பட்டு ஸர்வோதய சம்மேளன அழைப்புப் பத்திரத்துடன் ஒவ்வொரு ஸர்வோதய ஊழியருக்கும் அனுப்பப்படும். அந்த பாரம் ஹிந்தி, ஆங்கிலம் இரண்டு பாஷைகளிலும் இருக்கும். அந்த பாரத்தைப் பூர்த்தி செய்து அனுப்பினால் அடுத்த 1953-ம் வருஷ சம்மேளனத்திற்குள்ளாக டைரக்டரி தயாரித்து, அச்சிட்டு, விநியோகிக்கக்கூடும். ஸர்வோதய ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைத்தால் இந்த டைரக்டரியை எளிதில் தயார் செய்யலாம்.

வினோபாஜியின் பூமிதான யக்ஞம்

ஆச்சாரிய வினோபாஜி இதுவரை பூமிதான யாத்திரை செய்த இடங்களில் மட்டும் கிடைத்த நிலத்தின் விவரம் பின்வருமாறு:

127786

(அட்டை 3-ம் பக்கம் பார்க்க)

Edited and Published by N. Ramaswami
For Sarvodaya Prachuralayam, All India Spinners' Association, Veerapandy, Tirupur.
Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.

தெலுங்கானா 15,000 ஏக்கர்கள்; மத்திய பாரதம் 7,000; ராஜஸ்தான் 1,000; விந்தியப் பிரதேசம் 1,000; டெல்லி 1,000; உத்தரப் பிரதேசம் 39,554; ஆக மொத்தம் ஏக்கர்கள் 64,554.

'கீதா ப்ரவசனம்'

ஆச்சாரிய வினோபா பாவே 1932-ல் தூலியா சிறையில் இருந்த பொழுது, தினமும் பகவத் கீதையைப் பற்றித் தன்னுடன் இருந்த அரசியல் நண்பர்களுக்கு மராட்டியில் 18 தினங்கள் பேசினார். அதன் தொகுப்பு 'கீதா ப்ரவசனம்' என்று புத்தக ரூபமாக வெளிவந்தது: பின்னர், அதன் ஹிந்தி, தெலுங்கு பெயர்ப்புகள் வெளியாயின. சமீபத்தில் ஸ்ரீ சத்தியனும் ஸ்ரீ எஸ். வி. கிருஷ்ண வாரியரும் செய்த மலையாள மொழிபெயர்ப்பும் பிரசுரமாகியுள்ளது. மலையாள மொழிபெயர்ப்பு மிகச் சரளமாகவும் பாமரரும் புரிந்துகொள்ளும்படியும் அமைந்திருக்கிறது.

இதைத் தமிழில் மொழிபெயர்த்து "கதர் மலரி"ல் சிறு சிறு பாகமாக 1950 ஆகஸ்டு-மீ முதல் சென்ற 1951 நவம்பர் வரை பிரசுரித்தோம். இம்மாதிரி சிறு பாகமாக மாதச் சஞ்சிகையில் பிரசுரிப்பதால் இதைப் பூர்த்தி செய்யப் பல வருஷங்களாகும். மேலும், இம்மாதிரி மகத்துவம் மிக்க விஷயத்தை பின்னம் பின்னமாகப் பிரசுரிப்பதும் உசிதமல்ல. ஆதலால் இதைப் புத்தக ரூபமாக சீக்கிரத்தில் பிரசுரிப்பது அவசியம் என்று உணர்கிறோம்.

ஆச்சாரிய வினோபாஜீ அவர்களும் தமிழ் மொழி பெயர்ப்பும் சீக்கிரம் வெளி வர வேண்டும் என்று விரும்புவதாக அறிகிறோம். அவரது திருஷ்டி சில காலமாகத் தென்னாட்டை நோக்கி இருப்பது இயற்கை. உத்தரப் பிரதேச யாத்திரை முடிந்ததும் தென்னாட்டிற்கு வருவார் என்று எதிர்பார்க்கலாம்.

"கீதைக்கும் எனக்கும் உள்ள சம்பந்தம் புத்தி—தர்க்கத்தை மீறியதாகும். என் உடல் தாயின் பாலினால் எவ்வளவு வளர்ந்திருக்கிறதோ அதை விட அதிகமாக என் உள்ளம், அறிவு ஆகிய இரண்டும் கீதைப் பாலினால் புஷ்டி அடைந்திருக்கின்றன."

மேலே உள்ள வார்த்தைகளுடன் 20 வருஷத்திற்கு முன் தூலியா ஜெயிலில் கீதா ப்ரவசனத்தை ஆரம்பித்தார். அவர் கீதையில் ஊறி உறைந்துபோனவர். கீதையைத் தனது ஜீவ வாழ்க்கையாக மாற்றி விட்டார். அவர் சொல்வதும் செய்வதும் கீதையை அடிப்படையாகக் கொண்டது. தனது பூமிதான யக்ஞ யாத்திரையின் சித்தாந்தம் முழுதும் கீதையில் அடங்கியிருப்பதாகக் கூறுகிறார். யாத்திரையில் அவரைக் காண வரும் பக்தர்களுக்கு தனது கீதா ப்ரவசனத்தை தினமும் பாடம், தியானம், மனனம் செய்யச் சொல்கிறார். கீதா ப்ரவசனம் வாங்குகிறவர்களுக்கு இம்மாதிரி தனது ஆசீர்வாதத்துடன் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறார். ஆகவே, தென்னாட்டுக்கு அவர் வரும் முன், பூமிதான யக்ஞத்திற்குத் தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்த, 'கீதா ப்ரவசனம்' மக்களிடையே மலிவான விலையில் கிடைக்கச் செய்வது பெரிய திருப்பணியாகும்.

சமீபகாலமாக சர்க்கா சங்கம் கதர் சாஸ்திர - தத்துவத்திற்கு நேரான தொடர்பில்லாத விஷயங்களைப் பற்றி பிரசுரம் வெளியிடக் கூடாதென்ற கொள்கையை அனுஷ்டித்து வருகிறது. இது நியாயமே. ஆகையால் சர்வோதய பிரசுராலயம் இதை வெளியிடுவது சாத்திய மில்லை. இதற்காக போதுமான பண உதவி செய்ய யாராவது அன்பர்கள் முன் வந்தால் சர்வோதய பிரசுராலயத்தார் மொழிபெயர்த்து அச்சிட்டு விற்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக் கூடும். இத் திருப்பணிக்கு முன் வரும் அன்பர்கள் தாங்கள் எந்த அளவு உதவி செய்யக் கூடுமென்று தெரிவித்தால் பின்னர் சங்கம் யோசித்து முடிவு செய்யக்கூடும்.

கதாயி மண்டலும் "கதர் மலரு"ம்

கதாயி மண்டல்களுக்காக கதர் மலருக்கு ஒரு ரூபாய் மான்யம் போக பாக்கி ரூ. 2 வருஷச் சந்தாவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த குறைந்த சந்தாவைச்செலுத்திய பல கதாயி மண்டல்களுக்கு பத்திரிகை அனுப்பி வருகிறோம். மற்ற கதாயி மண்டல்களிடமிருந்தும் சந்தாவை எதிர்பார்த்து அவர்களுக்கும் ஜனவரி 15-உ வரை கதர் மலர் பிரதி அனுப்பி வந்தோம். கதர் மலரில் ஏற்படும் நஷ்டத்தைக் குறைக்கவேண்டி சந்தா செலுத்தாத மண்டல்களுக்கு பிரதிகள் அனுப்புவது நிறுத்தப்பட்டிருக்கிறது. விபாகங்களின் அங்கீகாரம் பெற்ற எல்லா கதாயி மண்டல்களும் 1952 முதல் சந்தாத் தொகையை அந்தந்த விபாக் காரியாலயத்தின்மூலம் உடனே அனுப்பக் கோரப்படுகிறது. பழைய பிரதிகள் தேவையானால் ஒவ்வொரு பிரதிக்கும் 3 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். ★ ★

J M7K.m2;N48K 1952.5-6

காந்தீய - கதர் - ஸர்வோதய இலக்கியம்

காந்திஜி எழுதிய நூல்கள்

	ரூ. அ.
ஸர்வோதயம்	0—6
ஆசிரம வாழ்க்கை	1—4
ராமநாமம்	0-12
ராட்டை - தத்துவ விளக்கம்	1—4
சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம்	0—4
நீதி தர்மம்	0—4
ஆசிரம பஜனாவளி (தொகுப்பு)	0—6

A collection of Gandhiji's writings:

The Ideology of the Charkha	0—14

கதர் தத்துவ நூல்கள்

சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும்	1—0
கதர் தத்துவமும் சேவையும்	0-12
சர்க்கா சங்க வேலைத்திட்டம்	0—8
சர்க்கா சங்க வரலாறு	1—0
சேவாகிராம முகாம்	1—0
காந்தீய நவநீதம்	2—0
கதாயி மண்டல்	0—2
தமிழ்நாட்டு விபாகங்கள்	0—2

சமக்ர கிராம சேவா நூல்கள்

மலஜல சுத்தி	0—8
சுயம்பூரண கிராமம்	0—5
துப்புரவு விஞ்ஞானம்	0—8

காந்தீய - ஸர்வோதய கருத்துப் பிரசாரத்திற்கும் புரட்சிக்கும்

* கதர் மலர் *

வாசகர்களுக்கு வேண்டுகோள்

வாசகர்கள் ஒவ்வொருவரும் சந்தாதாராகச் சேரக்கூடிய தங்கள் நண்பர்களின் பெயரும் விலாசமும் விவரமாக எழுதக் கோருகிறோம்.

பூமிதான யக்ஞத் தலைவர் விநோபாஜியின் பிரசங்கங்கள்

	ரூ. அ.
காந்திஜியின் குரல்	0—6
ஸர்வோதய யாத்திரையும், பூமிதான யக்ஞமும்	0—2
அறிவுரைகள்	0-12
பிரார்த்தனைப் பிரசங்கம்	0—8

கதர்-ஸர்வோதயப் புரட்சி நூல்கள்

ஸ்ரீ தீரேந்திர மஜும்தார் எழுதியவை

ராட்டைப் புரட்சி	0—6
ஸ்வராஜ்யமும் சர்க்காவும்	0—8
சுயராஜ்யத்தின் உண்மைப் போர் பாகம் I	0—3
" " பாகம் II	0—3
இதென்ன சுயராஜ்யம்?	0—3
Revolutionary Charkha	0—6
Demand of the Times	0—12

கதர் சாஸ்திரமும் கணிதமும்

நூற்புக் கலையின் நுணுக்கங்கள்	1—0
தக்ளியால் நூற்பதெப்படி?	0—8
பட்டை போட சுலபவழி	0—4
பருத்திப் பிரசினை	0—6
நரம்பு செய்தல்	0—8
கதர் உபகரணங்கள்	1—0
கைராட்டையின் சரித்திரம்	1—8
கிஸான்-பெட்டி-ஈரிழை ராட்டை	1—0
நூற்புக் கணிதம் பாகம் I	0—6
" " II	0—8
" " III	0-14
" " IV	1—0

THE KHADI WORLD

A Monthly Digest for Khadi - Sarvodaya Ideology.
Started in July, 1951.
Annual Subs: Rs. 3 Price: As. 4

ஸர்வோதய பிரசுராலயம், A. I. S. A., வீரபாண்டி, திருப்பூர்

கமலா பிரஸ், திருப்பூர்

1417

கலா மலர்

மலர்-5 - இதழ்-6

மார்ச் - 1952

C

JL
M7Km2, N48K
N52.5.6.
127786.

754

754
1·52

கதர் மலர்

மலர் 5

(444)

இதழ் 6

அகில பாரத சர்க்கா சங்கம் வெளியிடும் மாதப் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 MAR 1952
MADRAS



மார்ச்

1952

★

வருட சந்தா ரூ. 3

விலை அணா 4

போட்டோ:— கனு காந்தி — காந்தி சித்திராலயம், ராஜ்கோட்

ஸர்வோதய பிரசுராலயம் (A. I. S. A.) வீரபாண்டி, திருப்பூர்

கதர் மலர்

மார்ச் 1952 தொடர் நெ. 54

பொருளடக்கம்

கதர் இயக்கத்தில் புதிய யுகம்:
— மகாத்மா காந்தி
வினோபாஜியின் பூமிதான யக்ஞம்:
— ஜெகந்நாதன், மூந்தடா
மஹாதேவ் தேசாயின் இறுதி நாட்கள் நான்கு:
— சுசீலா நையார்
காந்தியும் மார்க்ஸும்:
— ஆச்சாரிய வினோபாஜி
அஹிம்சையும் கருணையும்:
— காகா கலேல்கர்
நான் கண்ட காந்தி:
— திவாகர்
ஆத்ம விழிப்பால்தான் துன்பம் தீரும்:
— வினோபா பாவே
அமெரிக்காவின் பாசக்கயிறு:
— குமரப்பா
சர்க்கா சங்கத்தின் தீர்மானக்கள்:
காந்திஜி உலகிற்கு அளித்த புதிய வழி:
— வினோபா பாவே
இத்தாலியில் சர்வோதயப் பிரார்த்தனை:
பத்திரிகை உலகில் "ஹரிஜன்"
சர்வோதய மேளா—யாத்திரை:
மாகாணங்களில்
தமிழ் நாட்டில்
சர்வோதய யாத்திரையும் கிராம வேலையும்
குறிப்பும் செய்தியும்:
சர்வோதய சம்மேளனம்
பூமிதான யக்ஞம்
'கீதா ப்ரவசனம்'
கதாயி மண்டலும் "கதர் மலரு"ம்

ஜபத்தின் சிறப்பு

மகாத்மா காந்தி

"ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பது என் காதை உறுத்துகிறது. இது கணிதத்தில் பற்றும் அறிவு வாதத்தில் ஈடுபாடும்கொண்ட என் மனோபாவத்திலுள்ள குறையினால் இருக்கலாம். ஆனால் எந்தக் காரணத்தினாலோ, எனக்கு ஜபம் என்றாலே பிடிப்பதில்லை. உதாரணமாக, பாக்கினுடைய அற்புதமான இசையும், 'தந்தையே அவர்களை மன்னியுங்கள், அவர்கள் தாம் செய்வது என்னவென்று அறியார்' என்ற வரி திரும்பத் திரும்பப் பாடப்படுகையில் எனக்குப் பிடிப்பதில்லை."

"ஆனால் கணிதத்திலும் மடங்கு தசமம் உண்டே" என்று காந்திஜி சிரித்துக் கொண்டே சொன்னார்.

"ஆனால் ஒவ்வொரு எண்ணும் ஒரு புதிய பொருளைக் குறிப்பதாக அல்லவா இருக்கிறது" என்றார் கணித பண்டிதர்.

"அவ்வாறே ஒவ்வொரு தடவையும் திரும்பச் சொல்லுதல் அல்லது ஜபித்தலுக்குப் புதிய புதிய பொருளுண்டு. ஒவ்வொரு தடவை திரும்பச் சொல்லும் பொழுதும் நாம் கடவுளை ஒவ்வொரு அடியாக அணுகிக் கொண்டிருக்கிறோம், இது ஒரு நிதர்சனமான விஷயம். நீங்கள் இங்கே பேச்சளவோடு நிற்கும் ஒருவனுடன் பேசிக்கொண்டிருக்க வில்லை; தான் சொல்வதைத் தன் வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் அனுபவித்து வந்திருப்பவன் ஒருவனுடனேயே நீங்கள் உரையாடிக் கொண்டிருக்கிறீர்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லி வைக்கிறேன். ஆகவே என் நாடி அல்லது உயிர் ஓடுவது நின்று விட்டாலும் நின்றுவிடுமே தவிர இந்த இடையறாத ஜபம் மட்டும் நில்லாது. அது ஆன்மாவுக்கு மிகவும் தேவையானதொன்று."

"எனக்கு இது நன்றாய்ப் புரிகிறது. ஆனால் சாதாரி மனிதனுக்கு இது பொருளற்ற வெறும் வார்த்தையாகி விடுகிறதே."

"ஒப்புக்கொள்கிறேன். ஆனால் மிகச் சிறந்த வஸ்துவும் தவறாக உபயோகிக்கப் படலாம். மோசடி செய்வதற்கு மிகுந்த இடம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் மோசடியும் நற்குணத்தின் பெருமைக்கே ருஜு. பத்தாயிரம் மோசக்காரர்கள் இருக்கிறார்களென்றால் கோடிக்கணக்கான கள்ளங் கபடமற்ற ஆன்மாக்கள் இதிலிருந்து மனவமைதி பெறுகிறார்களென்பதைக் காண்பீர்கள். கட்டடத்திற்கு சாரத்தைப் போல இது மிகவும் இன்றியமையாதது."

"ஆனால்" பியரி ஸெரிஸோல் மேலும் சொன்னதாவது: "உங்கள் உவமையையே மேலும் தொடர்ந்து கொண்டு செல்லுவோமானால் கட்டடம் கட்டியான பிறகு சாரத்தை அகற்றி விடவேண்டும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள் அல்லவா?"

"ஆம் இந்த உடல் அகற்றப்படும்பொழுது அதுவும் அகற்றப்படும்."

"ஏன்?"

"ஏனெனில்" தர்க்கத்தை மிகவும் ஊன்றி கவனித்து வந்த வில்கின்ஸன், "நாம் சதா சர்வகாலமும் கட்டடம் எழுப்பிக்கொண்டே யிருப்பதினாலேயே" என்றார்.

"ஏனெனில் நாம் சதாசர்வகாலமும் பூரணத்துவத்தைக் கருதிப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். கடவுள் ஒருவரே பரிபூரணர். மனிதன் என்றும் அபூரணனே" என்றார் காந்திஜி.

('ராமநாமம்')

கதர் மலர்

மலர் 5 | கர-ஹு பங்குனி-மீ * மார்ச் 1952 | இதழ் 6

★ கதர் இயக்கத்தில் புதிய யுகம் ★

மகாத்மா காந்தி

கதர் உணர்ச்சி

கதர் உணர்ச்சி யென்பதற்கு கதர் அணிவதிலுள்ள கருத்து நமக்குத் தெரிந்திருக்கவேண்டுமென்று அர்த்தம். நாம் ஒவ்வொரு நாள் காலையிலும் வெளியே போவதற்காக அணியும்பொருட்டு கதராடையைக் கையிலெடுக்கும்பொழுது நாம் அதை தரித்திரநாராயணனின் பெயரால், பட்டினி கிடந்து வருந்தும் கோடிக்கணக்கான இந்திய மக்களுக்காக அணிகிறோம் என்பதை நினைத்துக்கொள்ளவேண்டும். நமக்குக் கதர் உணர்ச்சி இருக்குமானால் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் எளிமை புலனாகவேண்டும். கதர் உணர்ச்சி என்பதற்கு எல்லையில்லாத பொறுமையென்பது பொருள். கதர் உற்பத்தியில் பரிச்சயமுள்ளவர்களுக்கு நூற்பவர்களும் நெசவாளரும் தம் தொழிலை எவ்வளவு பொறுமையுடன் செய்யவேண்டியிருக்கிறதென்று தெரியும். அதே வகையில் நாம் சுயராஜ்ய சூத்திரத்தை முறுக்குகையில் பொறுமையுடன் இருந்துவரவேண்டும். கதர் உணர்ச்சி என்பதற்கு அதே வகையில் அமைந்துள்ள அளவிலடங்காத நம்பிக்கை யென்பதும் பொருளாகும். தன் ராட்டையில் உழைத்து நூற்றுக்கொண்டிருப்பவன் தான் நூற்கும் நூல் அளவில் சிறியதாயினும் மற்ற எல்லோரும் நூற்கும் நூலுடன் சேரும்பொழுது அது இந்தியாவிலுள்ள எல்லோருக்கும் உடுத்தப் போதுமானது என்ற எல்லையில்லா நம்பிக்கை கொண்டிருப்பதைப்போல, நாமும் சத்தியமும் அஹிம்சையும் இறுதியில் எல்லாத் தடைகளையும் வென்று வெற்றி பெறுமென்ற எல்லையற்ற நம்பிக்கை கொண்டிருக்கவேண்டும். கதர் உணர்ச்சி என்பதற்கு உலகத்திலுள்ள எல்லா மனிதர்களிடமும் சகோதர பாவம் கொள்ளுதல் என்பது பொருள். அப்படியானால் நமது சகோதர மக்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய எல்லாவற்றையும் அறவே துறந்து விடுதல் என்று ஆயிற்று. கதர் உணர்ச்சியில் இந்த எல்லா சக்திகளும் அடங்கியிருந்தபோதிலும் அதில் ஒரு நிபந்தனையும் உண்டு. அதாவது, அதை ஆதரிப்பவர்களுடைய தவமும் அதில் சேர்ந்திருக்கவேண்டும். தம் வாழ்க்கையையே கதருக்கென அர்ப்பணம் செய்துவிட்டவர்கள் இடையறாது வாழ்க்கைத் தூய்மையை வற்புறுத்தாது இருந்துவிடுவார்களானால் நம் நாட்டு மக்கள் 'கதரை எம் கிட்டத்திலேயே கொண்டுவராதே' என்று சொல்வது நிச்சயம் என்ற விஷயத்தை நான் ஒவ்வொரு நிமிஷமும் நன்கு உணர்ந்து வருகிறேன். கதர் மற்ற வியாபாரப் பண்டங்களோடு சம நிலையில் இருந்துகொண்டு அவை கூறும் வகைகளிலெல்லாம் போட்டியிட முடியாது என்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் கதர் தனிச் சிறப்பு வாய்ந்தது. அதன் முன் இந்தியாவில் உள்ள வேறு எந்தப் பொருளினாலும் நிற்கமுடியாது என்பதையும் நான் உறுதியாய் அறிவேன். (22—10—'27)

* * *

கதர் நிஷ்டை

காங்கிரஸுக்கு வெளியே கதரைக் குறை கூறிக்கொண்டு தம் கையால் அதைத் தொடுவதுமில்லை யென்று இருந்துவரும் பிரபலஸ்தர் பலர் உண்டு என்பதைக் கதர்

ஊழியர்கள் அறியவேண்டும். காங்கிரஸுக்கு உள்ளேயே கதரில் நம்பிக்கையில்லாமல் அதை எப்பொழுதும் கேலிசெய்துகொண்டு காங்கிரஸிலிருந்து அதை நீக்கியாகும் வரையில் கட்டுப்பாட்டுக்கு அஞ்சி உடுத்தி வருவோர் உண்டு என்பதையும் அவர்கள் அறிய வேண்டும். இந்தத் தடைகள் குறுக்கிட்டும் கதர் முன்னேறியிருக்கிறது. இம்மாதிரியான எதிர்ப்பை சமாளிக்கவேண்டியிராவிட்டால் அது இன்னும் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனல் மேலும் பரிசீலனை செய்ததில் தாம் இனி கதருக்கு எதிராகக் கிளம்பவேண்டியது அவசியமென்று கதர் ஊழியருக்குத் தோன்றுமானல் அவர் செய்யவேண்டியது என்ன?

16 வருஷம் கதரில் அனுபவம் பெற்று அது சாதிக்கக்கூடியது என்னென்ன வென்பதை உணர்ந்தவர்களும் அசையாதநம்பிக்கையுள்ளவர்களுமான அன்பர்கள் போதிய தொகையில் இருக்கிறார்களென்றும் அவர்களுடைய நம்பிக்கை அது வேலை செய்துவரும் முறைகளைப்பற்றிய அறிவை ஆதாரமாகக் கொண்டிருப்பதென்றும் நான் நம்புகிறேன். அவருடைய நம்பிக்கை பிறர் சொல்வதைக் கேட்டுத் தலையாட்டுவதாயிருக்குமானல் நான் இறந்ததும் கதரும் மறைந்துபோகும். என் மரணத்திற்குப் பிறகு ராட்டைகளெல்லாம் முறித்துப்போடப்பட, அவை என் உடலை வைத்துக் கொளுத்துவதற்குப் போதுமானதாயிருக்கும் என்று ஒரு பிரபல பத்திரிகாசிரியர் ஜோசியம் சொன்னது உண்மையாகி விடும் என்பதில் சந்தேகமில்லை.

அவர்கள் தம் நம்பிக்கையை மீண்டும் சோதித்துப் பார்த்துக்கொள்ளட்டும். அவ்வாறு பார்க்கையில் அவர்களுக்குக் கதரின் பொருளாதார மகத்துவத்தைப் பற்றி ஏதேனும் சந்தேகம் தோன்றுமானல் அவர்கள் தம் மனப்போக்கை மாற்றிக்கொள்ளட்டும் என்று நான் ஆலோசனை கூறுகிறேன்.

6—6—'36

அஹிம்சா சமூகத்தில் நூற்பு

அஹிம்சையின் மூலமாகத்தான் இந்தியாவை விடுவிக்கவும், பெற்ற விடுதலையைப் பாதுகாக்கவும் முடியுமென்று நம்புகிறவர்கள் அஹிம்சையை எல்லா மக்களும் அனுஷ்டிக்க வேண்டுமென்றால் அதற்கு மக்கள் அனைவரும் நாட்டின் நலனுக்குதவும் ஏதேனும் ஒரு தொழிலில் தத்துவ உணர்ச்சியுடன் ஈடுபட்டாகவேண்டு மென்பதைக் கட்டாயம் அறிவார்கள். குறிப்பிடத்தக்க முதலீடு எதுவும் இல்லாமலே எல்லோரும் சுலபமாகச் செய்யக்கூடியதும், செய்வோருக்கு மன அமைதியை அளிப்பதுமான அந்த வேலை யாது? இதற்கு சந்தேகத்திற் கிடமில்லாத பதில், நூற்பும் அதற்கு முந்திய கிரியைகளும் என்பதே.

சர்வ சாதாரணமாக யுத்தங்களில் ஈடுபடும் ஐரோப்பிய நாடுகளில் வயது வந்த ஆண்களெல்லாம் குறிப்பிட்ட வருஷங்கள் யுத்தசேவை செய்வதற்காக பலவந்தமாய்த் திரட்டப்படுகிறார்கள். போருக்கான ஆயத்தங்கள் எதுவும் செய்யாமல் தற்காப்பையும் தம் அன்றாட வாழ்க்கையையும் ஒழுங்கு பெற அமைத்துக் கொள்ள விரும்பும் ஒரு நாட்டார் ஏதேனும் ஒரு தேசீயப் பொருள் உற்பத்தி முயற்சியில் கட்டாயமாய்ச் சேர்க்கப்படவேண்டும். ஒரு நாட்டின் ஜீவாதாரத் தேவைகள் குவியல் முறையில் உற்பத்தி செய்யப்படுமானல் ஒரு முதலாளி தன் சொத்துக்களைப் பாதுகாப்பதைப் போல அந்த நாடும் அவைகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியமென்பதை உணரும். அஹிம்சையின் அடிப்படையில் எந்த நாட்டின் கலாசாரம் அமைந்திருக்கிறதோ அது ஒவ்வொரு வீடும் கூடிய வரையில் சுயதேவைப் பூர்த்தி செய்து சுயம் பூர்ணமாய் இருப்பது அவசியமென்பதை உணரும்.

4—12—'39

காந்திஜியின் 'ராட்டை–தத்துவ விளக்கம்' என்ற புத்தகத்திலிருந்து ★ ★

நகரங்களே நிரந்தரமான ஆபத்து

இந்தியா அதன் ஏழு லக்ஷம் கிராமங்களிலேயே இருந்துவருகிறது. கைவிரல்களைக் கொண்டு எண்ணிவிடக் கூடிய [illegible] 6 நவீன நகரங்கள் இருக்கின்றனவே, அவை இயற்கைக்கு மாருக இதன்மேல் முளைத்தெழுந்திருப்பதோடு, தற்சமயம் கிராமங்களின் ரத்தத்தை உறிஞ்சும் பாவச் செயலில் ஈடுபட்டிருக்கின்றன. [illegible]தரென்பது, இவ்வாறு நடப்பதைத் திருத்தவும் மாற்றியமைக்கவும், நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையே இப்பொழுது உள்ளதைவிடச் சிறந்த உறவை ஏற்படுத்தவும் செய்யப்படும் முயற்சியாகும். மமதை கொண்ட நகரங்கள் கிராமங்களின் வாழ்வுக்கும் சுதந்திரத்திற்கும் நிரந்தரமான ஆபத்துக்களாய் இருக்கின்றன.

—மகாத்மா காந்தி

★ வினோபாஜியின் பூமிதான யக்ஞம் ★

அன்பின் அற்புத சக்தி

"கம்யூனிஸ்டுகள் சில இடங்களில் தேர்தலில் வெற்றிபெற்றிருப்பதால் சிலர் பீதியடைகிறார்கள். எதற்காக இந்த பயம்? ஏழைகளின் துக்கத்தைப் போக்க சேவை செய்யப்போவதில்லை என்று நீங்கள் தீர்மானித்துவிட்டால் பயப்படவேண்டியதுதான்!" இவ்வாறு வினோபாஜி பருக்காபாத்தில் சுமார் பதினாயிரம்பேர் கூடியிருந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசும்போது சொன்னார். வானம் இருண்டு மழை பெய்துகொண்டிருந்ததால், கூட்டம் நடப்பது எவ்வாறு என்ற சிந்தனை. ஆயினும், பிற்பகல் 3-மணிக்கு வானம் நிர்மலமாகியது; மக்களுக்கு ஒரே உற்சாகம். சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம் வினோபாஜியின் பிரசங்கத்தை மிகவும் அமைதியுடன் கேட்டனர். மேலும் அவர், "கம்யூனிஸ்டுகளின் பலாத்காரச் செயல்கள் நடந்துகொண்டிருப்பினும் நான் தெலுங்கானாவில் பயமின்றி கிராமம் கிராமமாகச் சுற்றினேன். அவர்களும் என்னிடம் அன்பாக இல்லாமல் வேறு என்ன செய்யமுடியும்? நான் போன இடங்களிலெல்லாம், காலையிலிருந்து மாலை வரை ராம பஜனை நடந்தது. இரண்டு மாதங்களும் ராம நாமத்தையே கேட்டுக்கொண்டிருந்தேன். கம்யூனிஸ்டுகளைத் தேர்ந்தெடுத்த அம் மக்களின் மனோ நிலையைத்தான் உங்களுக்குச் சொல்கிறேன். நான் தெலுங்கானாவில் அப்பொழுதே சொன்னேன்: கம்யூனிஸ்டுகள் வருவார்கள் போவார்கள்; ஆனால் நம் நாட்டில் ராமநாமம் என்றென்றும் இருந்துகொண்டிருக்கும். அவரை நினைத்து சேவையில் ஈடுபடுபவர்களுக்கு கம்யூனிஸ்டுகளிடமோ அல்லது வேறு யாரிடமோ ஒரு பயமும் இல்லை."

தரித்திரநாராயணனின் பங்கு

"ஏழைகளின் பிரதிநிதியாக தரித்திர நாராயணனுக்கு ஆறில் ஒரு பங்கு கொடுப்பது நியாயமானது. எல்லாவற்றையும் ஏழைகளுக்கென்று அர்ப்பணித்துக் கொடுத்துவிடுவது மகா தியாகமாகும். இந்த பாக்கியம் பக்தி சோதனையாலும், பகவத் கிருபையாலும் சிலருக்குக் கிடைக்கிறது. இவ்வளவு தியாகம் செய்யாவிட்டாலும் எல்லோரும் ஆறில் ஒருபங்கு கொடுக்கவேண்டியது மனித தர்மம்" என்பதை அறிவித்து வினோபாஜி, மேலும், "நிலம் இல்லாதவர்களுக்கென்று ஆறில் ஒருபங்கு கொடுங்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்கிறேன். சாஸ்திரங்களில் அரசனுக்கு ஆறில் ஒருபங்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது அரசன் யார் என்று உங்களிடம் கேட்கிறேன். நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் உற்பத்தியாளர்தான் நம் ராஜா. மழை பெய்துவிட்டால் மாத்திரம் உணவு உற்பத்தியாகிவிடாது; புல்தான் வளரும். ஆனால் உழைக்கும் நம் ராஜாவின் நெற்றி வியர்வை ஒரு பக்கம், ஆண்டவன் அருளால் மழை ஒருபக்கம், இரண்டும் சேர்ந்துதான் உணவு உற்பத்தியாகிறது. இந்த நம் நாட்டு, உழைத்து உற்பத்திசெய்யும் அரசனுக்கு ஆறில் ஒருபங்கு கொடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

புரட்சிவாதி யார்?

மேலும் அவர், "சிலர் தங்களை புரட்சிக்காரர்கள் என்று எண்ணிக்கொண்டு, நான் பத்தாம்பசலிக்காரன், புரட்சி வேகத்தைத் தடுக்கிறேன் என்றும்; வேறு சிலர் நான் சூரியன், காற்று, தண்ணீர் இவைகளைப் போன்று பூமியும் எல்லோருக்கும் பொதுவானது என்று சொல்வதால் கம்யூனிசத்திற்கு வழி வகுக்கிறேனென்றும்; மற்றும் சிலர், கம்யூனிஸ்டுகளாவது பணத்திற்கு மதிப்புக்கொடுக்கிறார்கள், ஆனால் நான் பணத்தையே நிராகரிப்பதால் கம்யூனிஸ்டுகளைக் காட்டிலும் பயங்கரமானவன் என்றும் சொல்கிறார்கள். ஆனால் நான் யார் என்று யாருக்குத் தெரியும்? உங்கள் அனைவரிடமும் அளவுகடந்த பிரேமை கொண்டிருக்கும் அன்பன் நான். கண்ணாடியில் என் சொரூபத்தைப் பார்ப்பதுபோல் உங்களுடைய ஆத்மசொரூபத்தில் என்னையே பார்க்கிறேன். உங்களிடம் என்னுடைய பங்கைக் கேட்கிறேன். கேட்பதினால் நிலம் வாங்கி நிலப் பிரசினையைத் தீர்க்கும்படியாக அன்பிற்கு அவ்வளவு சக்தியுண்டா என்று கேட்கிறீர்கள்.

க்ஷயரோகம் பிடித்த மனிதனுக்கு வலிமையின் பெருமை எப்படித் தெரியும்? அன்பு யாரிடத்தில் இல்லை? அனைவரின் உள்ளத்திலும் அன்பு மறைந்திருக்கிறது. கோபம் நிறைந்தவர்களிடத்திலும் அன்பு மறைந்திருக்கிறது. தன்னிடத்திலாவது எல்லோருக்கும் அன்பு இருக்கிறதல்லவா? தன்பால் உள்ள அன்பு தான் விரிந்து பிறர்பால் செல்கிறது. நாம் அனைவருமே கடவுளின் குழந்தைகள். ஏழைகளாக இருப்பவர்கள் செல்வந்தர்களை எதிர்த்துக் கையில் கத்தி எடுத்தால், அவர்களும் சகோதரர்களே. உரிமைக்காகத் தன் சகோதரனிடத்திலல்லாமல் வேறு யாரிடம் சண்டை போடுவது? உரிமையைக் கொடுக்க மறுப்பதால், நம் சகோதரர்களே விரோதிகளாகிவிடுகிறார்கள். சகோதரனை கொடிய விரோதியாக்கவும் விரோதியை ஆருயிர் சகோதரனாக்கவும் நம்மிடம் சக்தியிருக்கிறது. ஆகையால்தான் அன்பின் அபார சக்தியைப் பரிசோதித்துப் பார்க்கும்படி உங்களிடம் சொல்கிறேன். கத்தியெடுக்கும் ஏழையின் உள்ளத்திலும் அன்பு இருக்கிறது. ஆத்திரத்தில் புத்தியிழந்து பலாத்கார வழியை நாடுகிறார்கள். நிதானமாக யோசித்தால் ஹிம்சையைவிடுத்து சத்தியாக்கிரக வழியைத் தெரிந்து கொள்வார்கள். ஆனால் சத்தியாக்கிரகம், ஆத்மீக சக்தியில் பலமுள்ளவர்களின் ஆயுதம். நாம் ஆர்வத்துடன் காரியம் செய்தால், பொருளாதார சமூகப் பிரசினைகளை அன்பு வழியில் தீர்த்துவிடலாம்'' என்றார்.

பருக்காபாத் ஜில்லாவில் இரண்டு நாட்களில் 500 ஏக்கர் வரை பூமி தானம் கிடைத்திருக்கிறது. இந்த ஜில்லாவின் 'கோட்டா' பதினாயிரம் ஏக்கரையும் ஏப்ரல் மாதத்திற்குள் சேர்த்து விடுவதாக ஊழியர்கள் வாக்களித்துள்ளார்கள். இப்போது வினோபாஜி ஹர்டோயி ஜில்லாவில் யாத்திரை செய்து கொண்டிருக்கிறார்.

* * *

அவர்களின் பக்தியால் சாந்தி; இல்லையேல் கிராந்தி (புரட்சி)

உத்தரப் பிரதேசத்தில் லக்கிம்பூர் ஜில்லாவில் மைலானி என்னும் ஊரில் ரயில்வேத் தொழிலாளர்களும் மர வேலை செய்யும் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். சுற்றிலும் அடர்ந்த காடுகள். இங்கிருந்து மரங்கள் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. வினோபாஜியின் பிரார்த்தனைக் கூட்டத்தில் தொழிலாளர்கள் அதிகமாகக் கலந்து கொண்டார்கள். அவர் ரயில்வே என்ஜின் (Workshop) தொழிற்சாலைக்கு எதிரிலுள்ள ரயில்வே அதிகாரியின் வீட்டில் தங்கியிருந்தார். வினோபாஜி நாள் முழுதும் பல அலுவல்களில் ஈடுபட்டிருந்தாலும், தொழிலாளர்களின் உழைப்பையும் வாழ்க்கையையும் உற்றுக் கவனித்து, அவர்களைப் பற்றிய சிந்தை மிகுந்தவராய், பிரார்த்தனைப் பிரசங்கத்தில் "நம் நாட்டில் உழைப்பவர்கள் பக்தி மனோபாவம் மிகுந்தவர்கள். ஆகையால் தான் இன்று இந்தியாவில் சாந்தி நிலவியிருக்கிறது. பகவத் பக்தியால் பைத்தியம் பிடித்தவர்களாக தங்களின் தரித்திர நிலைமையும் தங்களுக்கு பகவான் விரும்பும் உன்னத நிலை என்று எண்ணுகிறார்கள். உழைப்பவர்களிடம் இந்த மனோபாவம் இல்லாத நாடுகளில் ரத்தப் புரட்சி நடப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் நம் நாட்டில் அவர்கள் தன்னடக்கத்துடன் வாழ்கிறார்கள். ஏழ்மையில் இன்பங் காண முயற்சிக்கிறார்கள். ஆடிப் பாடிக் களிக்கிறார்கள். கிராமங்களில் வாழும் உழைப்பாளிகள் தங்களின் கஷ்டங்களை பிறருக்கு எடுத்துச் சொல்லவும் சக்தியற்றிருக்கிறார்கள். ஆகையால், நான் அவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையில் செய்தி எடுத்துச் செல்லும் ஒரு தபால்காரனைப்போல கிராமம் கிராமமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறேன். ஏழைகளின் சார்பில், நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுத்து அவர்களை வாழ்விக்கச் செய்யுங்கள் என்று தெரிவிக்க வந்திருக்கிறேன். அதனால் கொடுப்பவர்களும் வாழ்க்கையில் சுகம் பெறுவார்கள். ஏழைகளுக்கு நிலம் கிடைத்தவுடன் சும்மா உட்கார்ந்து சாப்பிட முடியாது. வியர்வை சிந்த உழைத்து உற்பத்தி செய்து உணவு தேடிக் கொள்ளுவார்கள். பூமி தானம் வழங்கும் உங்களை மனதார வாழ்த்தி வாழ்நாள் முழுதும் கடமைப் பட்டிருப்பார்கள்'' என்று உருக்கத்துடன் பூமி தானம் வழங்கும்படிக் கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர், உழைப்பவர்களால் தான் உலகம் வாழ்ந்தாலும், அவர்கள் படும் கஷ்டங்களை விவரித்து, தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தவராய், பல முறை பேசவும் முடியாது தழுதழுத்த குரலில், "சிறிது

சிந்தித்துப் பாருங்கள். உலகம் உழைப்பவர்களுக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறது என்பது விளங்கும். அவர்கள் சமூக சேவைக் கென்றே பிறந்திருக்கிருர்கள். 'பகவான் கிருஷ்ணனின் கர்ம யோகிகளாக உலக சேவையில் ஈடுபட்டிருக்கிறேம்' என்பதும் அவர்களுக்குத் தெரியாது. ஏதோ வயிறு வளர்ப்பதற்காகப் பாடுபடுவதாகக் கருதுகிருர்கள். எஜமான்கள் சொன்னபடி கேட்கும் தாசர்களாகவும் ஆகிவிடுகிருர்கள். தங்களுக்கு வேலை கொடுப்பவர்களை நன்றியுடன் வாழ்த்துகிருர்கள். உழைப்பவர்களை எவ்வாறு புகழ்வது! உலகமே அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது. அவர்களின் சுகதுக்கங்களை நான் உணர்வதுபோல நீங்களும் உணர்வீர்கள். அனைவரும் அவர்களின் துக்கத்தைத் துடைக்கப் பாடுபட வேண்டும். ஒரு விதத்தில் அவர்கள் நமக்குத் தந்தை போன்றவர்கள். பெற்றோருக்கு மக்கள் செய்வது போன்று, இவர்களுக்கு சேவை செய்யக் கடமைப்பட்டிருக்கிறேம். ஏழைகள் வேண்டுவதுதான் என்ன? உல்லாசமாகச் சுற்றி வருவதற்காக மோட்டார் கார் கேட்கவில்லை; சுகபோக வாழ்க்கைக்கு பங்களாவும் கேட்கவில்லை. பசியாற உணவும், குடியிருக்கச் சிறு வீடும், குழந்தைகளின் கல்விக்கு வசதி, இவைதான் அவர்கள் வேண்டுவது. 'ராமாயணம்', 'குர்ரான்' யாராவது படித்து சொல்லக் கேட்டு ஆத்ம திருப்தியடைகிருர்கள். இந்த நம் சகோதரர்களின் க்ஷேம லாபங்களில் சிந்தனை செய்து கவனிக்காவிட்டால், நம் வாழ்க்கையில் திருப்தியிராது. நாம் சந்தோஷமாக வாழ முடியாது. இதைச் சொல்லவே நான் கிராமம் கிராமமாகச் சுற்றிக்கொண்டிருக்கிறேன். கிராமங்களில் ஏழைகள் வாழ வேண்டுமானல், அவர்களுக்கு நிலம் கிடைக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

பிரார்த்தனைக் கூட்டத்தின்போது சிறிய விவசாயிகளாக 42 பேர் 180 ஏக்கர்வரை பூமி தானம் அளித்தார்கள். கால், அரை ஏக்கர் விகிதம் பலர் கொடுத்தார்கள். இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் சட்ட சபை அங்கத்தினர் ஒருவர் தனக்கிருந்த 20 ஏக்கர் முழுவதையும் அர்ப்பணித்துவிட்டார். இதுவரை லக்கிம்பூர் ஜில்லாவில் 1,300 ஏக்கர் நிலம் கிடைத்திருக்கிறது. இந்த ஜில்லா வாசியாகிய, மாகாண காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி ஸ்ரீ பன்சிதார்ஜியும் அவருடைய சக ஊழியர்களும் 21,000 ஏக்கர் நிலம் பூமி தானத்திற்காகச் சேர்க்க தீவிரமாக வேலை செய்து வருகிருர்கள்.

பூஜ்ய வினேபாஜி சீதாபூர் ஜில்லாவில் கால்நடை யாத்திரையை ஆரம்பித்திருக்கிருர்.

ச. ஜெகந்நாதன்

* * *

"குறுகிய மனப்பான்மையால் கிடைக்கும் லாபம் கொஞ்சம்; நஷ்டந்தான் அதிகம். சமூக நன்மைக்காகத் தங்கள் உடைமைகளத்தனையும் தத்தம் செய்த சந்நியாசிகள் கொடுப்பது கொஞ்சமாயினும், அதனுல் அவர்களுக்குக் கிடைக்கும் பயன் அபரிமிதமானது. ஆதலால், ஜனங்கள் தங்கள் நிலத்தில் ஒரு பகுதியை நிலமில்லாதவர்களுக்காக தானமாய்க் கொடுக்கவேண்டும். இதனுல் எல்லையற்ற அன்பும் நன்றியும் அந்நிலத்தைப் பெறுபவர்களிடமிருந்து கிடைக்கும். தன் உடைமைகளைத் தன் வீட்டின் அளவுக்கே வரையறுத்து வைக்கும் மனிதனின் மனப்பான்மை எவ்வளவு குறுகியது என்ருர் துளசிதாசர். எல்லோரும் ஒருவரே என்றும், தம் சம்பத்து எந்தப் பெட்டியும் ஸ்தாபனமும் கொள்ளமுடியாத அளவுக்கு எங்கும் பரவியிருப்பதாகவும் பாடுகிருர் துகாராம் சுவாமிகள். நான் சொல்வதெல்லாம் கற்பனையோ, காவிய ரீதியானதோ அல்ல; அனுபவ வாயிலாகவே எதுவும் சொல்கிறேன். "ஈயாத லோபிகள் திருடர்களின் தாய் தந்தையர்" என்கிறது உபநிஷத். ஆனல் கம்யூனிஸ்டுகளின் தாய் தந்தையரும் அவர்களேதான். எங்கு கருமித்தனம் குறைகிறதோ அங்கு கம்யூனிஸமும் இல்லாமற் போய்விடும். சேர்த்துவைக்காமல் சமூக சேவையில் ஈடுபடுகிறீர்கள் என்று கம்யூனிஸ்டுகள் உணர்வார்களானல், அவர்களும் உங்களுடன் சேர்ந்து ஏழைகளின் சேவையில் ஈடுபடுவார்கள்." இவ்வாறு கோலகோகர்நாத்தில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் ஆச்சாரிய வினேபாஜி பேசுகையில் குறிப்பிட்டார்.

பூமிதான யக்ஞத்தைப்பற்றிய பாட்டுகளுடன், விளம்பரங்களைத் தூக்கிக்கொண்டு, ஒரு பெரிய ஊர்வலம் நடைபெற்றது. "பூமிதான யக்ஞத்தை நிறைவேற்றி வைப்போம்," "ஆச்சார்ய வினேபாஜிக்கு

ஜே ", "மகாத்மா காந்திக்கு ஜே" என்னும் கோஷங்கள் கிளம்புகின்றன. சுதந்திரப் போராட்டத்தின்போது இம்மாதிரியான ஊர்வலங்கள் நடந்தது நினைவுக்கு வருகிறது. இரண்டிலும் ஒரேவிதமான உற்சாகம்! மகாத்மா காந்தியடிகளுக்கு மிக்க பிரியமானவரும் நெருங்கியவருமான வினேபாஜி இந்த பொருளாதார சுதந்திரப்போரை உரிய காலத்தில்தான் ஆரம்பித்திருக்கிருர். அஹிம்சா புரட்சி, அதனல் சமூகத்திலும் தனி மனிதரிடத்தும் உண்டாகும் மாறுபாடுகள், மனிதருக்கிடையேயுள்ள பரஸ்பரத் தொடர்பு, நிலப்பிரசினையின் அவசியம் ஆகிய வற்றுக்கு ஒவ்வொரு நாளும் புதிய புதிய முறையில் விளக்கம் கொடுத்து வருகிருர் ஸ்ரீ வினேபாஜி. குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் உள்ள உறவுபற்றிக் குறிப்பிடும் போது அவர் சொன்னர்:

"குடும்பம் கௌரவத்தையும் பண்பாட்டையும் பொறுத்து தனித்தன்மை வாய்ந்தது. ஆனல் கிராமம் சுபீட்சமடைய வேண்டுமானல், செல்வத்தைக் கூட்டுப் பொறுப்பு ஆக்குவது அவசியம். குடும்பத்தின் பரம்பரைப் பண்பு குழந்தைக்குப் படிகிறது; குழந்தை குடும்பத்துடன்தான் வளர வேண்டும். ஆனல் செல்வமோ அந்தந்தக் கிராமம் முழுமைக்கும் சொந்தமானதென்று கருதவேண்டும். எல்லாக் காரியங்களும் கிராமத்தின் பொது நன்மைக்காக நடைபெறவேண்டும். கூட்டுப் பொறுப்பையும் கூட்டுறவு நடவடிக்கைகளையும் குலைக்கும் ரீதியில் எதுவும் நடைபெறக்கூடாது. தனி மனிதன் சமூகத்தினுள் ஐக்கியமாகிவிட வேண்டும். நிரந்தரமான ஆத்மாவின் ஸ்தூலமான ஒரு புகலிடமே இந்த உடல் என்ற கருத்து வந்துவிட்டால், இயற்கையின் இருமை (சூடு-குளிர்ச்சி; பெருமை-சிறுமை முதலிய) நிலைகள் நம்மைப் பாதிக்க மாட்டா. மனித சமூகத்தின் ஒருமை நமக்குப் புலனுகும். இந்த உலகில் இத்தகைய மனிதர்களைக் காண்பது அரிதுதான்; ஆனல் உலகத்தை வழிநடத்திச் செல்லும் ஆற்றல் அவர்களுக்குத்தான் உண்டு. சாதாரணர்களுக்கு இது சாத்தியமல்ல. எனவே, சூரியன், காற்று, தண்ணீர் ஆகிய வற்றைப்போல் நிலமும் எல்லோருக்கும் பொதுவானது என்று எளிய முறையில் சொல்கிறேன். ஒரு காலத்தில் பெருமையும் சக்தியும் பெற்றிருந்த நாடு, இன்று சுயநலத்தில் மூழ்கிவிடுவது கூடாது. அது நிலைத்திருக்க வேண்டுமானல்,நிலம் எல்லோருக்கும் பொதுவான தென்பதை மக்கள் சரிவர உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். சுய நலத்தில் மூழ்குவதால், நாடு சீரழிந்துவிடும். இவ்வளவு பெரிய நாட்டில் குறுகிய அற்ப புத்திக்கு இடம் எங்கே? நல்ல விரிந்த மனப்பான்மை கொண்ட மக்கள் உள்ள நாடுதான் முன்னேற்றமடைய முடியும்."

"என்னுடைய போதனைகளை உணர்ந்தாலும் தங்களுக்கு குழந்தைகளும் குடும்பமும் இருப்பதால்,நிலமில்லாதவர்களுக்குத் தங்கள் நிலத்தில் ஒரு பகுதியைக் கொடுக்க முடியவில்லை யென்று சிலர் சொல்கிருர்கள். நிலமற்ற ஏழைகளுக்கும் குழந்தைகுட்டிகள் உண்டு என்பதை அவர்கள் ஏன் மறந்துவிடுகிருர்கள்! ஒரு சில ஏக்கர் நிலத்தை வேண்டிப் பெறுவது எனது நோக்கமல்ல. தரித்திரநாராயணனின் பிரதிநிதியாக அவனுடைய உரிமையைத்தான் நான் கேட்கிறேன். பிச்சையாக இடும் பிடி அன்னமும் சில செப்புக்காசுகளும் ஏழைகளைக் கடைத்தேற்றமாட்டா; அவர்களை அடிமைப்படுத்தவே செய்யும். பணம் அவர்களைத் தீய வழிகளிலும் பழக்கங்களிலும் புகுத்திவிடும். உற்பத்தியின் சாதனமான நிலம் அவர்களிடம் போய்ச் சேரவேண்டும். மக்களின் ஆத்ம பலத்தை வளர்த்து அதன் மூலம் பொருளாதார சுதந்திரத்தை ஸ்தாபிப்பது தான் எனது விருப்பம். குடும்பத்தின் குறுகிய எல்லைக்குள் கட்டுப்பட்டிருக்கும் அன்பை வெளிப்படுத்தி, கிராமம் முழுதும் பரவச்செய்வதே என் ஆசை. நம் கிராமங்கள் 'கோகுலம்' ஆகவேண்டும். கிருஷ்ண பரமாத்மா ஐயாயிரம் வருஷங்களுக்கு முன் வாழ்ந்தவர் அல்ல; அவர் இங்கு, இப்போது எல்லோரது இதயங்களிலும் வீற்றிருக்கிருர். அவருடைய 'கோகுல' உணர்ச்சி நம் எல்லோரிடமும் பரவவேண்டும. உங்களது உடைமைகளிலிருந்து விடுபட்டு, உற்பத்தியின் சாதனங்களைச் சமூகத்திற்குக் கொடுங்கள். புதிய வாழ்வுக்கான வழி இதுதான்."

இங்கு 440 ஏக்கர் நிலமும் இரண்டு கிணறுகளும் ஒரு ஜோடி எருதும் கிடைத்தன.

தாமோதர்தாஸ் மூந்தடா

★ மஹாதேவ் தேசாயின் இறுதி நாட்கள் நான்கு ★

சுசீலா நையார்

(சென்ற இதழ் 145-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இரு ஸ்நான அறைகளுக்குமிடையில் உள்ள சுவர் கூரை வரையில் எழுப்பப்பட வில்லையாகையால், ஒரு அறையில் பேசினால் அடுத்த அறைக்குச் சுலபமாகக் கேட்கும். வலது புறத்திலுள்ள ஸ்நான அறையை பாபூ உபயோகிப்பதோடு, பிறரும் தேவையான பொழுது உபயோகித்துக் கொள்ளலாம். இந்த அறையில் கமோடுக்குமேலே விளக்கு வசதியிருக்கிறது. பாபூ எப்பொழுதும் கக்கூஸுக்குப் போகும்பொழுதும் படிக்கும் வழக்கமாகையால், அவருக்கு இந்த அறை பிடித்திருந்தது. ஆனால் இங்கே ஆள் உயரத்தில் இருந்த நிலைக் கண்ணாடி பாபூவுக்குப் பிடித்தமானதல்ல. இரண்டாவது அறையை ஸரோஜினி நாயுடு உபயோகித்து வந்ததோடு, பாவும் மீராபஹனும் உபயோகிப்பதுண்டு. அநேகமாக ஒவ்வொரு நாளும் நான் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு புதிய ஆடையை உடுத்தும்பொழுது மஹாதேவ் பாய், ஸரோஜினி நாயுடுவின் அறையிலிருந்து வெளிவருகிறவர், "ஏ சுசீலா, எவ்வளவு நேரம் நீ குளிப்பாய்?" என்று கூவுவார். இன்று என்றுமில்லாத வகையில் அவருக்கு நல்ல பசியாயிருந்தது. பாபூ அவரை வற்புறுத்தி நான் வருவதற்கு 45 நிமிஷங்களுக்கு முன்பே சாப்பாட்டிற்கு அனுப்பிவிட்டார். பிறகு பாபூ என்னைக் கூவி அழைத்து, "உனக்கு ரொம்ப நேரமாகிறது. எவ்வளவு நாழியாக மஹாதேவ் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாரென்று தெரியுமா?" என்றார். நான் மஹாதேவ் பாயினிடம், "மஹாதேவ்பாய், நீங்கள் எனக்காகக் காத்திருந்தீர்கள். உரிய நேரத்தில் நீங்கள் சாப்பிடப் போய்விடுங்கள், அடுத்தாற்போல் நானும் வந்துவிடுகிறேன்" என்றேன். மறு நாள் பாபூவின் ஸ்நான அறையிலிருந்து நான் வெளிவந்தபொழுது நான் அவரிடம் இதற்கென்றே போய், "நீங்கள் சாப்பிடப் போங்கள், எனக்கு நேரமாகும்" என்றேன். ஆனால் நான் ஸ்நானம் செய்துவிட்டு வெளி வந்து பார்த்தால் மஹாதேவ்பாய் எனக்காகக் காத்துக்கொண்டிருந்தார். எனக்கு தனியாகச் சாப்பிடுவதென்றால் பிடிக்காதென்பது அவருக்குத் தெரியும். சாப்பாட்டு மேஜை ஸரோஜினி நாயுடுவின் அறையில் இருந்தது. இங்கே வருவதற்குமுன் எனக்கு அவருடன் பழக்கமில்லையென்றே சொல்லலாம். ஆகையால் மஹாதேவ்பாய் சாப்பாட்டு நேரத்தில் என்னுடன் இருந்து வந்ததோடு முடிந்தவரையில் பிற வேலைகளிலும் எனக்கு உதவி வந்தார்.

மஹாதேவ்பாய் ஸரோஜினி நாயுடுவின் அறைக்குப் போய் இன்ஸ்பெக்டர் ஜெனரலுடன் பேசலானார். நான் பாபூவுக்கு மாலீஷ் செய்துகொண்டிருந்தேன். பேச்சினிடையில் சிரிப்பின் ஒலி கேட்டுக் கொண்டேயிருந்தது. நான் ஒரு காலை மாலீஷ் செய்துவிட்டு மற்றொரு காலை ஆரம்பிக்கப்போன தருணத்தில் ஸரோஜினி நாயுடு, "சுசீலா, இங்கே வா" என்று என்னைக் கூவி அழைத்தார்.

நான், 'இன்ஸ்பெக்டர் ஜெனரல் எல்லோரையும் பார்க்க விரும்புகிறார்போலும். இரண்டாவது காலையும் விரைவில் முடித்துக் கொண்டு போகலா'மென்று எண்ணினேன். இதற்குள் இரண்டாவது குரல் வந்துவிட்டதோடு, பா இரைக்க இரைக்க ஓடிவந்து, "மஹாதேவுக்கு என்னவோ ஆகிவிட்டது. அவருக்கு ஏதோ நோய் கண்டுவிட்டது. வாதம்போல் தோன்றுகிறது" என்றார். நான் பாபூவின் காலை விட்டுவிட்டு ஓட்டமாய் ஓடினேன். ஸரோஜினி நாயுடு மீண்டும் கூவினார். நான் அவர் அறையை அடைந்தேன். இதற்குள் அதிகமானால் ஒரு நிமிஷம் ஆகியிருக்கும்.

போய்ப் பார்த்தால் மஹாதேவ்பாய் ஸரோஜினி நாயுடுவின் அறையில் பெஞ்சியின் மேல் நினைவற்றுக் கிடந்தார். முகத்தில் விறைப்புத் தோன்றிற்று. நான் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே தலையிலிருந்து கால் வரையில் ஒரு பலமான குலுக்கும் ஏற்பட்டது. நான் நாடியைப் பிடித்துப்பார்த்தேன். நாடியே தென்படவில்லை. ரத்தத்தின் அழுக்கம் எப்படியிருக்கிற தென்று

பார்க்க முயன்றேன்; ரத்த ஓட்டமேயில்லை. இருதயத்தின்மீது ஸ்டெதாஸ்கோப் வைத்துப் பார்க்க, அங்கும் ஸர்வ மௌனமாயிருந்தது; ஹிருதயத்தின் துடிப்பு கேட்கவில்லை. நான் "பாபூவைக் கூப்பிடு, இவர் போய்விட்டார்" என்றேன். உதடுகள் அசைவதுபோல் தோன்றின. சுவாசம் சிறிது நின்று நின்று போய்க்கொண்டிருந்தது. நான் என் மருந்துப் பெட்டியைக் கொணர்ந்தேன். ஆனால் அதைத் திறக்கவே முடியவில்லை. நான் அதைத் திறக்க முயன்றபடி, "சாராயம் கொண்டுவா, இருதயத்திற்கு மருந்து கொடு" என்று ஏவிக்கொண்டே இருந்தேன்.

கை கால்கள் ஜில்லிடத்தொடங்கிவிட்டன. கையிலோ மருந்து இல்லை. பண்டாரி மருந்து கொண்டுவரப் போயிருந்தார். ஸரோஜினி நாயுடு 'ஓ டி கொலோனு'ம் தேனும் கலந்து கொடுத்துவிட்டு, "இது சாராயத்தைப்போல் வேலை செய்யும்" என்றார். நான் சாராயம் கேட்டது மேலே பூசுவதற்காக. ஆனால் ஸரோஜினி நாயுடு இவ்வாறு கலந்து கொடுத்ததும் நான் அதை மஹாதேவ் பாயின் வாயில் ஊற்றிவிட்டேன். விழுங்குவதற்கு அவருக்கு இதுவரையில் சக்தியிருந்தது. விழுங்கினார். மிஸ்டர் கடேலி மருந்துப்பெட்டியின் பூட்டை உடைத்து அதைத் திறந்துவிட்டார். அதிலிருந்து 'கால்ஷியம் குளுகோனெட்' தான் கிடைத்தது. ஹிருதயத்தை வலுப்படுத்த உதவும் வேறு மருந்து எதுவும் இல்லை. நான் டில்லியிலிருந்து அவசர அவசரமாகக் கிளம்பி பம்பாயிலும் ஓட்டமும் நடையுமாகச் சுற்றியதால், என் பெட்டியில் அவசர ஆபத்துக்கு வேண்டிய மருந்துகளை சேகரித்து வைத்துக்கொள்ளவே முடியாமற் போயிற்று. நான் மஹாதேவ் பாயின் கையைத் தூக்கினேன். கை துவண்டு போய்க் கிடந்தது. நரம்பில் கால்ஸியம் குளுக்கோனெட்டை ஊசியால் ஏற்றினேன். இதற்குள் பண்டாரி ஒரு சாராயப் புட்டியை எடுத்துக்கொண்டு வந்தார். நான் "கார்டியக் ஸ்டிமுலண்ட்' எங்கே?" என்று கேட்கவே, அவர் மீண்டும் கீழே ஓடினார். இதற்கிடையில் நான் சாராயத்தை வாயில் ஊற்றினேன். ஆனால் விழுங்கும் சக்தி மிகவும் குறைந்து போயிருந்தது. ஊற்றியது வெகுநேரம் வாயிலேயே இருந்தது. பிறகு பாபூ, "நான், அந்த சமயத்தில் உன் கையைப் பிடித்து நிறுத்த விரும்பினேன். ஆனால் பேசாமலிருந்து விட்டேன். உன் ஸ்தானத்தில் வேறு எவரேனும் இருந்திருந்தால் நான் சாராயம் கொடுக்க அனுமதித்திருக்கவேமாட்டேன்" என்றார்.

மஹாதேவ் பாய்க்கு வாந்தி வரத் தொடங்கிற்று. ஆனால் அதை வெளியே கொணர்வதில் சிரமம் இருப்பதாகக் காணப்பட்டது. நான் தாடையைத் தாங்கிக் கொண்டு சுவாசக்குழாயில் வாந்தியின் அம்சம் எதுவும் புகுந்துவிடாதிருப்பதற்காக தலையை ஒரு பக்கமாய்த் திருப்பி வைத்தேன். பாபூவோ நான் கூப்பிட்டனுப்பிய 2,3 நிமிஷங்களுக்குள்ளேயே வந்துவிட்டார். அவர் மாற்றி மாற்றி மஹாதேவ்பாயின் கையைப் பிடித்துப் பார்ப்பதும் தலையைத் தொட்டுப் பார்ப்பதுமாயிருந்தார். அவர் அவருடைய கண்ணுக்கு நேராக உற்றுப்பார்த்துக் கொண்டு நின்றுகொண்டிருந்தார். "மஹாதேவ் என்னை ஒருமுறை கண்ணைத் திறந்து பார்த்துவிட்டால் எழுந்து நின்றுவிடுவாரென்பது என் நம்பிக்கை" என்றார்.

ஸரோஜினி நாயுடு என்னைக் கூவிய பொழுது பண்டாரியைப் பார்ப்பதற்காகக் கூப்பிடுகிறாரென்று பாபூ எண்ணிக்கொண்டார். அவரே என்னை அழைக்கவந்த பொழுதும் மஹாதேவ் பாயிக்கு ஏதோ உடம்பு என்று சொன்னது அவர் காதில் விழவில்லை. அவர் ஏதோ படித்துக்கொண்டிருந்தார். பண்டாரி வந்திருப்பதனாலேயே என்னை அழைக்கிறார்களென்று எண்ணினார். நான் அனுப்பிய ஆள் அவரைக் கூப்பிடப் போன பொழுதும் பண்டாரியைப் பார்ப்பதற்கே தாமும் அழைக்கப்படுவதாக எண்ணிக்கொண்டார். பிறகு மஹாதேவ் பாய்க்கு நோய் என்று கேட்டபிறகும், ஏதோ பெரிய ஆபத்தான நோயென்று எண்ணவில்லை. இதற்கு முன் அவருக்குச் சில சமயங்களில் வரும் மயக்கமே இப்பொழுதும் வந்திருக்கும், சிறிது நேரத்தில் குணமாகிவிடும் என்றே கருதினார்.

ஸரோஜினி நாயுடு பாபூவிடம் மஹாதேவ் பாய் அறையின் நடுவில் நின்றுகொண்டிருந்தார். பண்டாரியும் ஸரோஜினி நாயுடுவும் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்கள். மஹாதேவ் பாய் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். வேடிக்கையும் விநோதமுமாயிருந்தது.

எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டிருந்தார்கள். இந்தச் சிரிப்பின் தொனியே எங்களுக்கு வெளியிலும் கேட்டுக்கொண்டிருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் மஹாதேவ்பாய் பண்டாரியிடம், "எனக்காக ஆரோக்கிய சம்பந்தமான பத்திரிகைகள் வேண்டு"மென்று கேட்டார். பிறகு இருந்தாற்போல் "எனக்கு மயக்கமாக வருகிறது" என்றார். அதற்கு பண்டாரி "அஜீரணமாயிருக்கும். படுத்துக்கொள்ளுங்கள்" என்றார். மஹாதேவ்பாய் நடந்துசென்று 3, 4 கெஜ தூரத்தில் கிடந்த பெஞ்சியின்மீது படுத்துவிட்டார். பண்டாரி நாடியைப் பிடித்துப் பார்க்கவே அது மிகவும் வேகமாகவும் மெலிந்தும் காணப்பட்டது. அவர் ஸரோஜினி நாயுடுவிடம் என்னை அழைக்கும்படிச் சொல்லிவிட்டு போனில் ஸிவில் ஸர்ஜனைக் கூப்பிடுவதற்காக மேலே போனார். மஹாதேவ்பாய் பேசிக்கொண்டிருந்தபொழுது கம்பள வெய்ஸ்ட்கோட் அணிந்திருந்தார். கட்டிலில் படுக்கப்போனபொழுது அவர் அதைக் கழற்றியிருந்தார்போலும். நான் போன சமயத்தில் அது பாதி கழன்றிருந்தது.

வாந்தி எடுத்ததோடு அவர் கனைத்துக் கொண்டுமிருந்தார். அந்தக் கனைப்பு பயங்கரமானதாயிருந்தது. அது ஏதோ ஒரு குகையிலிருந்து வருவதுபோல் தோன்றிற்று. அதை பாபூவினாலும் சகிக்க முடியவில்லை, எங்களாலும் கேட்க முடியவில்லை. சுவாசம் நின்று நின்று ஓடிக் கொண்டிருந்தது. கை கால் இழுப்பு அதிகமில்லையாயினும் இடையிடையே ஒரு நடுக்கம் காணப் பட்டது. ஒரு சந்தர்ப்பத்தில் முகம் பக்ஷவாதம் வந்ததைப் போல் ஒரு பக்கம் விகாரமாகக் கோணிப் போய் விட்டது. இந்த நோய் காரணமாக இவருக்கு ஒருக்கால் பக்ஷவாதம் ஏற்பட்டு விடுமோ என்று நான் எண்ணினேன். ஆனால் மஹாதேவ்பாயைப் போன்ற புண்ணியாத்மாக்களுக்கு இந்த அவஸ்தை எப்படி ஏற்படும்? திடீரென்று உடலில் பலமான ஒரு குலுக்கு ஏற்பட்டது. தாடை இறுக்கிக் கொண்டதைப் பார்த்தால் தாடை எலும்பே முறிந்து விடும்போல் தோன்றிற்று. அப்பொழுது நான் தாடையைப் பிடித்துக் கொண்டிருந்தேன். பிறகு அது தளர்ந்து விட்டது. நெஞ்சுக் கடைதல் குறைந்தது. சுவாசம் மேலும் மெலிந்துவிட்டது. நான் பாபூவிடம், "பாபூ ஜம்னாலால்ஜியைப் போல் இவர் போய்க் கொண்டிருக்கிறார்" என்றேன். நான் "போய்க் கொண்டிருக்கிறார்" என்று சொன்ன பிறகு தான் பாபூ 'நிலைமை உண்மையில் படுமோசமாகி விட்டது, மஹாதேவ் பாயின் உயிர் போய்க் கொண்டிருக்கிறது' என்பதை உணர்ந்தார் போலும். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் தம் கண்ணைத் திறந்தது போலும் பேச முயலுவது போலும் தோன்றிற்று. நான் உடனே சந்தோஷத்துடன், "நல்ல வேளை, பிழைத்து விட்டார்!" என்றேன். ஆனால் அது வீண் பிரமையே. மீண்டும் கண்கள் மூடிக்கொண்டன. நின்று நின்று ஓடிக் கொண்டிருந்த மூச்சு மேலும் மெதுவாகி விட்டது. உடலில் நீலம் காணத் தொடங்கி விட்டது.

பாபூ அவருடைய கண்களை உற்று நோக்கியபடியே இருந்தார். மஹாதேவின் பார்வை தம் பார்வையில் கலக்குமாகில் மஹாதேவ் எழுந்து உட்கார்ந்து விடுவார் என்ற எண்ணத்தில் தம் முழு சக்தியையும் தம் பார்வையில் செலுத்திக் கொண்டிருந்தார். ஒரு முறை அவருடைய கண்கள் திறந்தன வென்றும், ஆனால் கண்களின் ஒளி மங்கிப் போயிருந்ததென்றும் சொன்னார். பார்க்கும் சக்தியே போய்விட்டது. அந் நிலையில் அவர் பேச முயலுவதாவது! நெஞ்சில் கடையும் சத்தந் தான் கேட்டுக் கொண்டிருந்தது.

இதையெல்லாம் எழுதுவதற்கு இவ்வளவு நேரம் ஆனபோதிலும், இவ்வளவும் மின்னல் வேகத்தில் நடந்து விட்டன. எனக்கோ எல்லாம் ஒரு கண்ணிமைப் பொழுதில் முடிந்து போனதாகத் தோன்றிற்று. நான் சாராயக் கரண்டியை அவர் வாயில் இட்டுக் கொண்டிருக்கும் பொழுது பண்டாரி மருந்துடன் வந்து சேர்ந்தார். நான் இஞ்செக்ஷன் போடப் போன பொழுது அவர் தடுத்து, "நரம்பிலும் ஒரு ஊசி போடுங்கள்" என்றார். ஆகவே ஒன்று சதையிலும் ஒன்று நரம்பிலுமாக இரண்டு ஊசி போட்டேன்.

மஹாதேவ் பாய் வியர்வையில் நனைந்து கொண்டிருந்தார். ஆரம்பம் முதலே அவருடைய முகமும் கையும் சலவைக் கல்லைப் போல வெளுத்துப் போயிருந்தன. அந்த வெள்ளைச் சலவைக் கல்லின் மீது வியர்வை முத்துக்கள் சிதறிக் கிடந்தன. ஊசி போட்டதால் சிறிதும் குணம் ஏற்பட

★ காந்தியும் மார்க்ஸும் ★

அடிப்படையில் வேறுபட்ட இரண்டு தத்துவங்கள்

ஆச்சாரிய வினோபா பாவே

(சென்ற இதழ் 145-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்த விவாதத்திற்கு வேறு சிலர் பதில் கூறுகிறார்கள்:— "நிரந்தரமான பண்புகள் அழிந்துபோகாதபடி சமுதாயத்தை மாற்றியமைக்கவேண்டு மென்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். சன்மார்க்கத்தின் மேலுள்ள நம்பிக்கை தளர்ந்துபோகும்படி விட்டுவிடக் கூடாதுதான். ஆனால் குறிப்பிட்ட ஒரு நிலையில் (நைமித்திகம்) வைத்துப் பார்க்கும்போது ஒவ்வொரு பொது விதிக்கும் (நித்திய-தர்மம்) விதிவிலக்குண்டு என்பதை மறந்துவிடலாகாது. உதாரணமாக, பிரார்த்தனை செய்வது உங்கள் தினசரி ஒழுக்கம் என்று வைத்துக்கொள்வோம். அதை தினசரி குறிப்பிட்ட நேரத்தில் தவறாமல் செய்துவருகிறீர்கள். ஒரு நாள் பிரார்த்தனை நேரத்தில் பக்கத்து வீடு தீப்பற்றி எரியுமானால், அப்பொழுது தீயை அணைக்க விரைந்து ஓடமாட்டீர்களா? தீயை அணைத்தபிறகே நீங்கள் மனச்சாந்தியுடன் பிரார்த்தனை செய்வீர்கள். இதுதான் "நித்திய நைமித்திக விவேகம்" (பொதுப்படையான கடமை எது, உடனடியான கடமை எதுவெனப் பகுத்தறிதல்). இந்தப் பகுத்தறிவு வாழ்க்கையின் சகல துறைகளிலும் அவசியமே. ஹிம்சையைத் தவிர வேறு வழியில்லை என்று கம்யூனிஸ்டுகள் கூறுவதையும் நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இந்தியா போன்ற ஜனநாயக தேசத்தில் நாம் விரும்பும் மாறுதலை பலாத்காரமின்றி பொதுத் தேர்தல்கள்மூலம் சித்திபெறச் செய்யலாம் என்று நாங்கள் நம்புகிறோம். நாம் விரும்பும் மாறுதலுக்கேற்பப் பொது மக்களின் அறிவும் அபிப்பிராயமும் வளர ஒரு சில வருஷங்கள் ஆயினும் பரவாயில்லை, காத்திருக்கலாம். நமது நோக்கம் நிறைவேறும்வரை பொறுமையுடன் சதா உழைத்துக் கொண்டிருப்பதே நம் கடமை. ஆனால் அதிகாரத்திலிருக்கும் கட்சியார் பொதுத் தேர்தல் காலத்தில் பாரபட்சமின்றி நடந்து கொள்ளாமல் தங்கள் பதவியையும் அதிகாரத்தையும் துஷ்பிரயோகம் செய்யும் போது அதைத் தவிர்க்க அந்தச் சமயத்திலும் பரிசுத்தமான அஹிம்சை வழியையே வலியுறுத்திக்கொண்டிருப்போமானால் அது நாம் விரும்புவதற்கு முற்றிலும் நேர் விரோதமான பலனையே தரும். ஆகவே இத்தகைய தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் (நைமித்திக தர்மம்) மிகுந்த மன வேதனையோடேனும் அஹிம்சையல்லாத வேறு வழிகளையும் கையாளுவது நியாயமற்றதென நாங்கள் கருதவில்லை. ஆபத்துக்குத் தோஷமில்லை (ஆபத் தர்மம்) என்ற அளவில் மன்னிக்கத்தக்க பிழை என்று வேண்டுமானால் அதைக்கொள்ளலாம். ஆனால் அதைத் தயவுசெய்து பாவம் அல்லது பெருங்குற்றம் (அதர்மம்) என்று கருதவேண்டாம். ஆபத்துக் காலங்களில் அபூர்வமாகக் கையாளப்படும் இச்செயல்களால் நிரந்தரமான

மஹாதேவ் தேசாயின் இறுதி நாட்கள் நான்கு

முன் பக்கத் தொடர்ச்சி

வில்லை. நாடி ஏற்கெனவே நின்று விட்டது. இப்பொழுது சுவாசமும் நின்று போய் விட்டது. ஸிவில் ஸர்ஜன் வருவதற்குள் பட்சி கூட்டை விட்டுப் பறந்து போய் விட்டது. ஆட்டம் ஓட்டமெல்லாம் அடங்கிப் போயின. ஸிவில் ஸர்ஜன், "ரத்த அழுக்கம் கடுமையாயிருந்ததோ?" என்று கேட்டதற்கு நான், "இல்லை" யென்றேன். அவர், "அப்படியானால் 'காரோனரிதிராம்போஸிஸ்' ஸாயிருக்கும்" என்றார். "அவருக்குத் தலையில் நோவு தோன்றுவதுண்டா" என்றார். நான், "இல்லை. ஆனால் மயக்கம் வருவதுண்டு. இந்தத் தடவையும் காரோனரிதிராம்போஸிஸின் முக்கிய அறிகுறியான நோவு எதுவும் ஏற்பட வில்லை" என்றேன். "ஐயோ பாவம்" என்று சொல்லி விட்டு அவர் போய் விட்டார்.

முற்றிற்று.

★ ★ ★

மனிதப்பண்பு அழிந்துபோகுமென்று சொல்லிவிட முடியாது. நேர்மையான வழியினின்றும் சற்று விலகிவிட்டோமென்று வைத்துக் கொண்டாலும், பின்னால் அந்தத் தவறைச் சரிப்படுத்திக்கொள்ள முடியும். ஒரு இயந்திரத்தைச் செப்பனிடுவதற்காக அதன் திருகாணிகளைத் தளர்த்தி பின்னால் அவற்றை இறுக்கிவிடுகிறோமல்லவா! அதுபோலவே, அதிகார மாற்றமேற்பட்டு அடுத்த நிமிஷத்திலேயே நிரந்தரமான மனிதப்பண்புகள் அதிக வலுப்பெற்றுவிடும். இம்முறை ஆப்பை ஆழத்தில் செலுத்த அதைச் சற்று அசைத்துக் கொடுத்து அடிப்பதை ஒக்கும். தற்காலிகமாகக் கையாளப்படும் ஹிம்சை அஹிம்சையைக் காப்பாற்றுவதற்கே. அவ்வாறு கால மறிந்து செய்யாவிடின் ஒருவேளை நாம் அஹிம்சையினின்று வெகுதூரம் நழுவியிருக்கக்கூடும். ஒரு செடியானது இன்னும் நன்றாக வளரவேண்டு மென்று அதன் தழைகளை அரிந்து விடுகிறோமல்லவா! இங்கு செடியின் தழையை அரிவதற்கும் அதன் அடிமரத்தை வெட்டுவதற்கு முள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், இன ஆதிக்கம் முதலியன அஹிம்சைக்கு விரோதமானவை. பலாத்கார நடவடிக்கைகளில் முழு நம்பிக்கை கொண்டுள்ள கம்யூனிஸமும் அஹிம்சைக்கு விரோதமானதே. இதைக் கம்யூனிஸ்டுகள் அறியாமலிருக்கலாம். ஆனால் அவர்களுடைய பலாத்காரச் செயல்களாலுண்டான பலனைப் பார்க்கும் போது அவர்கள் அறிந்தே செய்கிறார்கள் என்று தான் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே நாங்கள் கம்யூனிஸத்தை ஆதரிக்கவில்லை. அதே சமயத்தில் ஒழுக்கம், பண்பு என்பன வற்றின் பெயரால் தற்போதைய அல்லல்களையும் அடக்கு முறையையும் நீடித்துக் கொண்டிருக்க அனுமதிப்பதானது, குறிப்பிட்டதொரு பண்புக்கு அளவிற்கு மிஞ்சிய மரியாதை செலுத்துவதாகும். மேலும், அன்னியர் ஆக்கிரமிப்பையோ, உள் நாட்டுக் குழப்பத்தையோ அடக்க ஆயுதம் தாங்குவது ஹிம்சையாகாதெனக் கூறுகிறோம். அதை "தண்ட தர்மம்" (துஷ்டநிக்ரஹம்) என்றழைக்கிறோம். ஆகவே இத்தகைய சில விதி விலக்குகளுடன் கூடிய அஹிம்சையை ஒப்புக் கொள்கிறோம்" என்று விவாதிக்கின்றனர்.

பரிசுத்த அஹிம்சா வாதிகளின் தத்துவமும் கம்யூனிஸ்டுகளின் தத்துவமும் ஒன்றுக்கொன்று நேர் விரோதமான இரண்டு அடிப்படைத் தத்துவங்களாகும். இவை தவிர, மேலே கண்ட வேறிரண்டு விவாதங்களும் இரண்டு தினுசான ஒழுக்கம், வழி முறைகளை அனுசரித்த கொள்கைகள். இவ்விரண்டினுள் முதலாவதை இந்த தேசத்தில் புத்தரும் காந்திஜியும் தீவிரமாகப் பரப்பினார்கள். மதாச்சாரியர்களில் ஒரு சிலரே இதை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இதை ஆதரிக்கும் சுருதி வாக்கியங்கள் மிகச் சிலவே. சுருதிக் கர்த்தாக்களில் பெரும்பான்மையோர் இரண்டாவது ஒழுக்கம், வழி முறையையே ஏற்றுக் கொண்டு எடுத்துக் கூறியிருக்கின்றனர். இந்திய தேசீயத்தில் பற்றுடைய பெரும்பாலான காங்கிரஸ்காரர்களும் காங்கிரஸிலுள்ள கோஷ்டிகளும் ஏறக்குறைய எல்லா சோஷியலிஸ்டுகளும் இந்த இரண்டாவது கூட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். காந்தீய வாதிகள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களிற் கூட அநேகர் இறுதியில் இந்தக் கூட்டத்திற்கு வந்து சேரக் கூடியவர்களே.

மேற் சொன்ன விளக்கமானது ஸ்ரீ கிஷோரிலால் அவர்கள் இங்கு சத்தியாக்கிரக தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட காந்திஜியின் கொள்கைகளுக்கும் பலாத்காரப் புரட்சியின் மூலம் சமுதாயச் சீர்திருத்தத்தை விழையும் கம்யூனிஸ்டுகளின் கொள்கைகளுக்கும் இடையிலுள்ள தாரதம்மியத்தைக் குறித்து மேற்கொண்டிருக்கும் விவாதத்திற்கு நம்மை இட்டுச் செல்கிறது.

(தொடரும்)

ஸ்ரீ கிஷோரிலால் மஷ்ருவாலா எழுதிய 'காந்தியும் மார்க்ஸூம்' என்ற ஆங்கில புத்தகத்திற்கு வினோபாஜி எழுதிய முன்னுரையின் ஒரு பாகம். இந்தப் புத்தகம் "ஸர்வோதய பிரசுராலய"த்தில் கிடைக்கும்; விலை ரூ. 1—8—0.

அஹிம்சையும் கருணையும்

காகா கலேல்கர்

(சீக்கிய குரு நானக்கின் தினத்தன்று ஹிந்தியில் பேசியது)

மோக்ஷம் என்ற சொல்லைப்போல் அஹிம்சை என்ற சொல் அடையமுடியாதது என்பது சிலர் கருத்து. இது இச்சொற்களின் குற்றமல்ல, இதுவே அவைகளின் குணம் என்பது என் எண்ணம். அஹிம்சை என்ற தத்துவமுள்ள வேறு சொல் வேண்டுமானால் அது அன்பு அல்லது தோழமை என்பதுதான். அன்பு என்ற சொல் இழுக்குக்கு உட்படுத்தப்படலாம். ஆனால் தோழமை என்பதில் இப்பயத்திற்கும் இடமில்லை. உண்மையில் பார்த்தால் அஹிம்சை, தோழமை, அன்பு அல்லது சிநேகம் என்ற சொற்களில் 'தனது' என்ற உணர்ச்சி ஏற்படுகிறது. நாம் நமது நன்மையையே விரும்புகிறோம், நமது குற்றங்களைக் குறைவாக எண்ணுகிறோம், நம் தவறுகளை உடனே மன்னித்துவிட்டு நாம் சீர்படும் சங்கற்பத்தில் நம்பிக்கை கொள்கிறோம். நம் உள்ளங்களில் நம்முடையது என்ற தொடர்பு உள்ள இடங்களிலெல்லாம் இப்படிப்பட்ட எண்ணங்கள் இயற்கையாக வெளியாகின்றன.

நம்முடையது, பிறருடையது என்ற வேற்றுமை இல்லாது, பிறர் நன்மையை விரும்புவதும், பிறர் நன்மைக்கும் சௌகரியத்திற்கும் தானே சிரமப்படுவதும், பிறர் குற்றங்களில் பொறுமை காட்டுவதுமே அஹிம்சை, தோழமை என்பதாம். தோழமை இருக்குமிடத்தில் பழிவாங்கும் உணர்ச்சி இருப்பதில்லை. பஞ்சாப் மாகாணம் அமிர்தசரசிலே ஜெனரல் டயர் நம் மக்களைக் கொலை செய்தபோது காந்திஜி சர்க்காரிடம் நியாயம் கோரினார்; ஆனால் ஜெனரல் டயருக்கு தண்டனை கொடுக்க விரும்பவில்லை என்றும் இத்துடன் சேர்த்துச் சொன்னார். காந்திஜி பின்பற்றிய இக்கொள்கையில் ஆச்சரியம் ஏதுமில்லை. ஆனால் சிறிது யோசித்தபின் நாட்டு மக்களனைவரும் இப் "பழிவாங்காமை" என்ற கொள்கையை ஒப்புக்கொண்டனர். நம் நாட்டுப் பண்பில் அஹிம்சை வேரூன்றியிருக்கிறது என்பது இதனால் தெரியவருகிறது. காந்திஜி போன்ற சிறந்த கர்மயோகிகளே மக்களின் உள்ளத்தில் நுழைந்து அங்கு படுத்து உறங்கும் அஹிம்சைத் தத்துவத்தைத் தட்டியெழுப்ப முடியும்.

இன்றைய நாள், மன்னிப்பதும் மன்னிப்புக்கோருவதும் என்பதற்கே. இவ்விரதத்தை, இம் முறையை, இப்படிப்பட்ட நாட்களை ஏற்படுத்தின மகா வீரர்களின் உள்ளங்களில் உண்மையான அஹிம்சை வாழ்ந்துவந்தது. அவர்கள் அமைதியுடன் தம் காரியத்தைத் தியாகம் செய்யவும் முடிந்தது. நாம் வாயினால் அஹிம்சையை ஆமோதிப்பதுடன், அநியாயம் செய்பவனுக்குத் தண்டனையும் ஏற்படச் செய்கிறோம். இம்மட்டுமா! பல தடவைகளில் பாவத்திற்குப் பழி வாங்க மகா பாவம் செய்யவும் தொடங்குகிறோம்.

உலக முழுதும் இந்த தோஷம் என்ற போதையில் சிக்கியிருக்கிறது. ஹிட்லர் தேசியம் என்ற கொள்கையில் யூதர்களை அழித்தான். ஸ்டாலின் தன் மக்களுக்கு உத்தரவு அளித்து ஜெர்மனியர்களிடம் விரோதத்தைக் கற்பித்தான். "ஜெர்மனியர்களைப் பற்றி போதிய வெறுப்பு ரஷ்ய மக்களிடம் ஏற்படாவிட்டால் ரஷ்யா ஜயிக்கமுடியாது" என்றான் ஸ்டாலின்.

இன்று நாம் ரஷ்யர்களை வெறுக்கவில்லையென்றும், அந்த நாட்டையும் சீனாவையும் சந்தேக நோக்குடன் பார்க்கவில்லையென்றும் அமெரிக்கா நம்மேல் கோபப்படுகிறது. பாகிஸ்தான் செய்துவரும் விஷமப் பிரசாரத்திற்கு நாம் எதிர்ப் பிரசாரம் செய்யவில்லையே என்று சிலர் நம்மேல் சீறுகிறார்கள். பகைமை பகைமையால் தீராது. பகைமையைத் தீர்ப்பது பகைமையற்ற தோழமையே.

"பாவியிடம் பழிவாங்க நாமே பாவியாகக் கூடாது" என்பதே ஹிந்து கலாசாரத்தின் அடிப்படை. தோழமை நோக்குடனே நாம் அனைவரையும் பார்ப்போம். தோழன், விரக்தன், பகைவன், பாவி, கொடியோன், நேர்மையற்றவன், கயவன், கொடும்பாவி, ஆஷாட

பூதி முதலிய அனைவரிடமும் தோழமை யுடனே நெருங்குவோம்.

இந்திய அரசாங்கம் பாகிஸ்தான், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், சீனு ஆகியவைகளிடம் இதே கொள்கையைக் கையாள்கிறது. அமெரிக்கா போன்ற பல நாடுகள் இதன் காரணமாக நம்மிடம் ஆத்திரப்பட்டாலும் நமது கொள்கையே சரியானது என்று அவை அறிந்துகொண்டிருக்கின்றன. பாகிஸ்தான் என்ன செய்தாலும் சரி, அதை அநியாயம் செய்ய விடமாட்டோம்; அத்துடன் நமது தோழமையையும் விடமாட்டோம்; சகோதரத்துவத்தை மறுக்கவும்மாட்டோம்.

இவை உலக அரசியல் விஷயங்கள். நமது சமூகத்திலும் பொறுமை மனப்பான்மை, தோழமை என்பவைகளை பலப்படுத்தவேண்டும். நம்மால் பிறருக்குத் தீங்கு எவ்வகையிலும் கூடாது. நமக்குத் தீங்கு செய்யப்பட்ட காரணமாயினும் நாம் பகைமை கொள்ளக்கூடாது. அநியாயத்தை எதிர்த்து நிற்போம், ஆனுல் பழிவாங்கும் எண்ணமே வேண்டாம்.

கிறிஸ்தவ மத ஜகத்குருவான போப் பாண்டவர் பிரதி வருஷமும், திருநாளில், தோழமை பெருகவும் அமைதி நிலவவும் பிரார்த்தனை செய்கிருர். அவர் முயற்சி பலனளிக்கிறதென்று தெரியவில்லை. நமது ஜைனர்களும் பிரதி வருஷமும் அனைவரையும் மன்னித்து அனைவர்களிடம் மன்னிப்பும் கோருகிருர்கள். எனினும் இதர சமூகங்களைவிட ஜைன சமூகம் அதிகப் பொறுமையுள்ளது என்று அனுபவ வாயிலாகத் தெரியவில்லை. சாதுக்கள் சன்னியாசிகளிடம் இருக்கும் பொறுமை பகைமை வெறும் வார்த்தை சங்கற்பங்களாலோ ஜபதவங்களாலோ மறைவதில்லை. தர்ம வழி அவ்வளவு சுலபமில்லை. இதற்குச் சாதனை செய்யவேண்டும். இன்று நல்ல கருத்துக்களை வெளியிட்டோ, கேட்டோ, ஏதோ கொஞ்சம் செய்ய முடிந்தது என்று திருப்திப்படலாகாது. 'இன்றுவரை செய்த பாவத்திற்கு வருந்திப் பரிகாரம் செய்துவிட்டோம். நாளைமுதல் புதுப்பாவம் செய்யக்கூடும்' என்றும் சிலர் கருதுகிருர்கள்.

"இது பேச்சுக்குக் காலம் இல்லை, செயலில் இறங்கவேண்டும்" என்று சொல்லிச் சொல்லி சளைத்துவிட்டோம். விரதங்கள் திருநாட்கள் வந்தால் ஏதோ செய்வது, சொல்வது, இறந்த சங்கற்பமாவது ஆகட்டுமே என்று அனைவரும் கூடுகிறோம். கூட்டம் முடிந்ததும் நல்ல காரியம் ஒன்று செய்தோம் என்று கருதுகிறோம். இம்மாதிரி இதுவரை பல நாட்கள் கொண்டாடியும் பலன் என்ன என்று யோசிக்கவேண்டும். நம் உள்ளங்களைச் சோதிப்போமேயானுல், திடமான சங்கற்பம் செய்வோமேயானுல், இன்று பொறுமை தினம் கொண்டாடியதற்கு அர்த்தமுண்டு.

ஒரு விஷயத்தில் நாம் முன்னேறினேம் என்பது உண்மை. நாம் குறுகல் மனப்பான்மையிலிருந்து வெளி வந்தோம். நல்ல வார்த்தையைக் கேட்கவோ நல்ல வேலையைச் செய்யவோ, தேவை ஏற்பட்டால் நம் வாழ்வை மாற்றவோ நாம் இக்குறுகிய மனப்பான்மையில் கட்டுப்பட்டிருப்பதில்லை. 'கிணற்றுத் தவளை' என்ற முறையை விட்டுவிட்டோம். பிற மதத்தினரை நம்புகிறோம். அவர்களுடன் தொடர்புகொண்டு அவர்கள் விஷயங்களை கேட்கச் சித்தமாக இருக்கிறோம்.

நமது திருநாட்களில் பிறரை அழைப்பதுபோல், நாமும் அவர்களுடைய விரதங்கள் உற்சவங்களில் கலந்துகொள்ளவேண்டும். முகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள், பார்சிகள் முதலிய எல்லா மதத்தவர், எல்லா தேசத்து மக்களின் நற் காரியங்களிலும் பங்கெடுக்கவேண்டும். டில்லியைப்போன்ற தலைநகரங்களில் உலகின் பல தேசங்களின் பிரதிநிதிகள் இருக்கிருர்கள். நாம் அவர்கள் அனைவரையும் சந்திக்கக்கூடும், அவர்களுடன் தோழமை கொள்ளக்கூடும். இது பெரிய சாதனை ஆகும். ★ ★

"மங்கள் பிரபாத்", நவ-1951

"கதர் மலர்" — நான்கு வருஷ பைண்டு தொகுதிகள்

"கதர் மலரி"ன் நான்கு வருஷத்திய தொகுதிகள் தனித்தனியாக பைண்டு செய்து தயாராக இருக்கின்றன.

ஒவ்வொரு வருஷத் தொகுதியும் விலை ரூ. 4—0—0; தபால் செலவு வேறு.

★ நான் கண்ட காந்தி ★

ஆர். ஆர். திவாகர், உதவி மந்திரி, மத்திய சர்க்கார்

அதிர்ஷ்டவசமாக, பாபூவின் வாழ்க்கையின் இறுதி நாட்களில் எனக்கு அவரைச் சந்திப்பதற்குப் பல சந்தர்ப்பங்கள் வாய்த்தன. இங்கே நான் மிகவும் முக்கியமான மூன்று சந்திப்புக்களைமட்டும் விவரிக்கப்போகிறேன்.

பம்பாயைச் சேர்ந்த ஸ்ரீ டி. தேண்டுல்கர் என்பவர் காந்திஜியின் வாழ்க்கையைப்பற்றி அழகிய நம்பகமான புஸ்தகம் ஒன்று எழுத விரும்பி, அதுபற்றி காந்திஜியைக் கலந்து கொள்ள விரும்பினர். 1948ம் வருஷம் ஜனவரி 22ம் தேதி 2 மணிக்கு, குறிப்பிட்ட நேரத்தில், நாங்கள் இருவரும் பிர்லா மாளிகையை அடைந்தோம். காந்திஜி உபவாசத்தை நிறுத்தி இன்னும் 5 நாள் பூர்த்தியாகவில்லை. அவர் எப்பொழுதும்போல் தம் ஸ்தானத்தில் பலவீனமான நிலையில் உட்கார்ந்திருந்தார். நாங்கள் அப்பொழுது அவருக்குச் சிரமம் கொடுக்க நேர்ந்ததற்காக மன்னிப்பு வேண்டினோம். அவர் மிகவும் இனிய முறையில் நடந்துகொண்டார். ஸ்ரீ தேண்டுல்கர் எழுதவிருந்த வாழ்க்கை வரலாற்றில் மிகுந்த சிரத்தை காட்டினர். ஸ்ரீ தேண்டுல்கர் காந்திஜி எழுதியுள்ள 'ஹிந்த் ஸ்வராஜ்' என்ற புஸ்தகம் எழுதப்பட்ட தேதியைக் கேட்டுத் தெரிந்துகொண்டதோடு பாபூவின் புஸ்தகங்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக் கையாளுவதற்கு அநுமதி கோரினர். காந்திஜி அநுமதியளித்தார். ஸ்ரீ தேண்டுல்கர் தாம் ஸ்ரீ மகாதேவ் பாயின் 'டயரி'யையும் (தினக் குறிப்பு) உபயோகித்துக்கொள்ளலாமா என்று கேட்டதற்கு பாபூ தாம் சந்தோஷமாக அநுமதியளிப்பதாகவும், ஆனல் ஸ்ரீ நரஹரி பாயிடமே அந்த டயரிகள் இருப்பதால் இறுதியில் பொறுப்பு அவருடையதே என்றும் தெரிவித்தார்.

அதே சமயத்தில் ஸ்ரீ பியாரேலால் வந்து அருகில் அமர்ந்தார். பியாரேலால் வந்ததனல் ஏதோ திடீரென்று நினைவுக்கு வந்தது போல், ஒருவொருக்கொருவர் சண்டைபோட்டுக்கொண்டு மடிந்துபோன யாதவர்கள், அவர்களுக்கும் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் இருந்த சம்பந்தம் ஆகியவற்றை விளக்கும் கதையை என்னைக் கூறும்படிச் சொன்னர். நான் எனக்கு நினைவிருந்ததைக்கொண்டு "யாதவர்கள் மிகவும் கர்விகளாகவும் அகம்பாவிகளாகவும் ஆகிவிட்டார்கள். தாம் வெளியேறுவதற்குமுன் அவர்களை அழிக்காது விட்டால் அவர்கள் உலகத்தையே நாசம் செய்துவிடுவார்களென்று ஸ்ரீ கிருஷ்ணர் அஞ்சினர். அவர்களுடைய குல குருவான கர்க்க முனிவர் அவர்கள் அனைவரும் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு அழிந்துபோக வேண்டுமென்று சாபம் கொடுத்திருந்தார். சாபம் நிறைவேறிற்று. அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணர் உலகத்திலிருந்து மறைய வேண்டிய சமயம் வந்தது. அவர் ஒரு மர நிழலில் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். ஒரு வேடனுக்கு அங்கு மானென்று இருப்பது போல் தோன்றவே அவன் அவருடைய உள்ளங்காலில் பாணத்தை எய்துவிட்டான். அதனல் அவர் மரணம் எய்தினர்" என்று சொன்னேன்.

பாபூ கதையை கவனமாகக் கேட்டபின், "ஓகோ, அப்படியா நடந்தது!" என்ருர். தம் ஆயுள் காலத்தில் காங்கிரஸ்காரர்கள் ஒருவருக்கொருவர் சண்டை பிடித்துக்கொள்வதைக் குறித்து அவர் யோசித்துக்கொண்டிருந்ததாக எண்ணினேன்.

பாபூவை நான் அடுத்த முறை சந்தித்தது ஜனவரி 24ம் தேதியாகும். அப்பொழுது கர்நடக மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் தம் கூட்டாளிகளுடன் பாஷாவாரி மாகாணப் பிரிவினை செய்வதுபற்றி பாபூவைச் சந்திக்கவிருந்தார். நாங்கள், "ஒரு மாகாணத்திற்கும், இன்னெரு மாகாணத்திற்கும் வித்தியாசம் பாராட்டக்கூடாது. கூடிய விரைவில் எல்லா மாகாணங்களையுமே பாஷாவாரியாகப் பிரித்துவிடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டோம்.

காந்திஜி, "எல்லைகளைப்பற்றியவரையில் அக்கம்பக்கத்து மாகாணங்களின் பிரதிநிதிகள் கலந்து பேசி சௌஜன்யமான முடிவுக்கு வந்தாகவேண்டுமென்றும் இதைப்

பொறுத்தே மாகாணப் பிரிவினைகள் நடப்பது இருக்கிற" தென்றும் அழுத்தமாகச் சொன்னார். இதைக் குறித்து அவர் வெகு காலத்திற்கு முன்பே "ஹரிஜனில்" எழுதியதுண்டு.

"இந்த ஆலோசனை தர்ம ராஜ்யத்திற்கு, ராம ராஜ்யத்திற் கல்லவா பொருந்தும்? சௌஜன்யமான உடன்பாடு ஏற்பட முடியாமல் போகும்பொழுது மத்தியஸ்தருடைய தீர்ப்புக்கு வருவதற்கு அனுமதியளிக்கவேண்டும்" என்றேன். அவர் அசைந்துகொடுக்கவேயில்லை. உள்ளத்தை ஊடுருவிப் பார்க்கும் சொற்களில் அவர், "திவாகர், இது நடக்காது. நான் உன்னிடம் சொல்கிறேன்" என்று உரக்க அறிவித்துவிட்டு, "மத்தியஸ்தர்களுடைய, பஞ்சாயத்தார்களுடைய தீர்ப்பும் நிர்ப்பந்தமானதென்றே கருதப்படும். எந்தக் கட்சியும் அதை மனப்பூர்வமாக ஏற்காது. நாம் உண்மையாகவும், சமாதானமாகவும் வாழ்வதென்று முடிவுசெய்துள்ளோமென்றால் விரோதங்களை, மோதல்களைக் கண்டிப்பாகத் தவிர்த்தாக வேண்டும்" என்றார்.

பாபூவை மூன்றாம் முறை, அதாவது கடைசியாக நான் தரிசித்தது 1948-ஜனவரி 28ம் தேதியாகும். அப்பொழுது நாங்கள் காங்கிரஸின் புதிய அமைப்பைப்பற்றி ஆலோசித்தோம்.

1945 அக்டோபர் முதலே காந்திஜி என்னை காங்கிரஸின் அமைப்பு சம்பந்தமான உபகமிட்டியில் சேர்த்துக்கொண்டேவந்தார். ஏனெனில் 1945 ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நான் சிறையிலிருந்து வெளிவந்தவுடன் காந்திஜியுடன் இது விஷயமாக வாத விவாதங்கள் நடத்துவதில் மிகுந்த சிரத்தை காட்டினேன்.

1948ல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிடம் அறிக்கையை சமர்ப்பித்ததற்குமுன் இந்த உப கமிட்டி மூன்று முறை திருத்தி அமைக்கப்பட்டது. இந்த ஒவ்வொரு சமயத்திலும் எனக்கு அதில் வேலைசெய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. நாங்கள் சிபாரிசு செய்திருந்த அமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு இப்பொழுது அமுலில் இருந்துவருகிறது. அது நாங்கள் தயாரித்த கடைசி அமைப்பாகும். அதைத் தயாரித்தது நானே. 1948-ஜனவரி-28ம் தேதி, காந்திஜி கொலையுண்டதற்கு 2 நாட்களுக்கு முன்பு, இதைக் குறித்தே நான் காந்திஜியுடன் ஆலோசனை நடத்தினேன்.

காந்திஜி எப்பொழுதும்போல் புது டில்லியிலுள்ள பிர்லா மாளிகையின் மூலையிலுள்ள அறையில் பனியை ஒத்த தூய வெண்மையான கதர் ஆடையுடன் அமர்ந்திருந்தார். அவர் எதிரிலேயே ஒரு சிறிய மேஜை இருந்தது. அவர் உலர்ந்த பழங்கள், பச்சைக் கீரை, கறிகள், ஆட்டுப்பால் ஆகியவை அடங்கிய சிற்றுண்டியை அருந்திக்கொண்டிருந்தார். அவர் என்னுடன் நடந்த பேச்சில் முழு கவனமும் செலுத்தியிருந்தமையால், எங்கள் பேச்சு முடிந்துவிட்டபிறகும் அவர் சிற்றுண்டியை முடித்தாகவில்லை. ஒரு சமயம் ஸ்ரீ சங்கர்லால்தேவ் அவருக்கு இதை நினைவுறுத்தவும் செய்தார். காந்திஜி சிரித்துவிட்டு சீமைத் தக்காளி, பச்சைக் கீரை ஆகியவற்றின் கதம்பத்தைச் சாப்பிட்டுக்கொண்டே, "பார்த்தீர்களா, நான் மாட்டைப்போல் பச்சைக் காய் கறிகளைத் தின்கிறேன்!" என்றார்.

எங்கள் கமிட்டியின் அங்கத்தினரான ஸ்ரீ டண்டன்ஜி எங்கள் மந்திராலோசனைகளில் மற்றவர்களைவிட அதிகமாகக் கலந்துகொண்டார். டாக்டர் ராஜேந்திர பிரசாதோ, நேரிடையாகக் கலந்துகொள்ளாமல் பார்வையாளரைப்போ லிருந்தார். ஸ்ரீ தேவும், ஸ்ரீ ஜுகல் கிஷோரும் நானும் காந்திஜியுடன் இதுபற்றி முன்னமேயே கலந்து பேசியிருந்தமையால் எங்களுக்கு அவருடைய கருத்துக்கள் தெரிந்திருந்தன. டாக்டர் பட்டாபியும், ஸ்ரீ எஸ். கே. பாடிலும் பேசியது மிகவும் குறைவே. காந்திஜியின் மூளை எங்கள் மூளையிலிருந்து விலகி வேறுவகையில் வேலைசெய்துகொண்டிருந்ததென்பது தெளிவு. அரசியலை வேருகப் பிரித்துவிட்டு சேவை உணர்ச்சியுடன் நிர்மாண வேலைகளில் ஈடுபடுவதிலேயே அவருக்குக் குறி. நாங்கள் எல்லோருமே, அதிகாரம் ஏற்றது முதல், காங்கிரஸில் புகுந்துள்ள மாசுகளையும் லஞ்சப் பேயையும் அகற்ற வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தோம். ஆனால் ஒரு அரசியல் ஸ்தாபனமாகவே அது இருந்து வருவதை விரும்பினோம். நான் ஒரு சமயத்தில் "காங்கிரஸ் நாற்சந்தியில் நிற்கிறது. அது, ஒன்று அரசியலிலேயே இருந்துவரவேண்டும்;

127786

அல்லது, முழு மனதுடன் நிர்மாண வேலைகளில் இறங்கிவிடவேண்டும்" என்றேன். இதற்கு அவர், "காங்கிரஸ் நிர்மாண வேலைகளைக் கைவிடவோ அலட்சியம் செய்யவோ தொடங்குமானால் அது தற்கொலை புரிந்து கொண்டதற்குச் சமமாகும்" என்று கண்டிக்கும் முறையில் கூறினர்.

பல மணி நேரம் கலந்தாலோசித்த பிறகு நகல் திட்டமொன்றை அவரே தயாரித்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. நான் அப்பொழுது, 1946-ல் முதன் முதலில் காங்கிரஸ் அமைப்பு உப கமிட்டியுடன் சோத்பூர் ஆசிரமத்தில் கண்டு பேசியபொழுது அவர் கூறியவற்றையே பெரும்பாலும் இப்பொழுதும் அவர் கூறுவதாகக் குறிப்பிட்டேன். அப்பொழுது அவர் என்னிடம் தந்திருந்த நகல் திட்டத்தை அனுப்பிவைப்பதாகவும் சொன்னேன். அவர் அதை வரவேற்றார்.

நல்லவேளையாக அந்த நகல் திட்டம் என் பழைய தஸ்தாவேஜுகளிடையே பத்திரமாயிருந்தது. ஹிந்தியிலிருந்த மூலப் பிரதியையும் அதன் மொழிபெயர்ப்பையும் அன்று மத்தியானத்திலேயே அவரிடம் அனுப்பிவைத்தேன். அவருக்கு அது உதவியாயிருந்திருக்கும். ஏனெனில் 'சேவகன்' அல்லது 'லோக சேவகனி' டம் என்னென்ன குணங்கள் இருக்கவேண்டுமென்று அதில் கூறப்பட்டிருந்ததோ அவைகளை தாம் இறப்பதற்கு நான்குமணி நேரத்திற்கு முன்பு நாட்டிற்கு விடுத்த இறுதிச்செய்திபோன்ற அந்த நகல் திட்டத்தில் ஒரு எழுத்தைக்கூட மாற்றாமல் அப்படியே தந்திருக்கிறார்.

இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு அரசியல் ஸ்தாபனம் என்று இருந்ததை இனி அறவே மாற்றிவிட வேண்டுமென்பது அவருடைய திட்டமான அபிப்பிராயம். சேவையையே நோக்கமாகக் கொண்டு வேலை செய்யக் கூடியதும், தன் சேவகர்களை நிர்மாண வேலைகளை நடத்த வேண்டி கிராமந்தோறும் அனுப்பிவைக்கக் கூடியதுமான ஒரு ஸ்தாபனத்தைப்பற்றி அவர் எண்ணிக்கொண்டேயிருந்தார். அரசியல் கட்சிகளைப்பற்றியவரையில் அவை தம் இஷ்டம்போல் இடங்களை மாற்றிக்கொள்ளுமென்று அவர் எண்ணியிருக்கக்கூடும். அவர் சம்பூரண கிராம சேவைக்குப் பிரதான்யம் அளித்ததைப் பார்க்கும்பொழுது அவர் தமது நியாயமான நடத்தையின் மூலமாக அரசியலையும் தேர்தல் போக்கையும் சரியான பாதையில் செலுத்துவதற்குத் தகுதி வாய்ந்த ஊழியர்களை ஏற்கவும், தோற்றுவிக்கவும் விரும்பினரென்பது தெளிவு.

★ ○ ★

★ உடலுழைப்பு ★

மேஜை நாற்காலிகள் போட்டுக் கொண்டு புத்தகங்களை வைத்துப் படித்தால்தான் ஞானமேற்படும், அறிவு வளரும் என்ற கருத்து அறியாமையை, அஞ்ஞானத்தைக் காட்டுவதாகும். நாம் இந்த அறியாமையிலிருந்து வெளியேறியாகவேண்டும். வாழ்க்கையில் படிப்பிற்கு இடம் நிச்சயமாயிருக்கிறது. ஆனல் அது அதற்குரிய இடத்தில் இருந்தால்தான் அழகுபெறும். உடலுழைப்பைக் கெடுத்து அதுமட்டும் செய்து வரப்படுமானல் அதை எதிர்த்துக் கிளம்புவது கடமையாகிவிடுகிறது. உடலுழைப்புக்காக நாளின் அதிக நேரத்தையும் படிப்பு முதலியவைகளுக்குக் குறைந்த நேரத்தையும் செலவழிக்க வேண்டும். இந்தக் காலத்தில் இந்நாட்டில் பணக்காரர்கள் அல்லது உயர்ந்த வகுப்பினரென்று கருதப்படுவோர் உடலுழைப்பை அவமதிப்பதால் உடலுழைப்பிற்கு உயர்ந்த ஸ்தானமளித்தல் அவசியமாகும். அறிவை நன்கு இயங்கச் செய்வதற்கும் உடலுழைப்பில் அல்லது உபயோகமான ஏதேனுமொரு கைத்தொழிலில் உடலை இயங்கச் செய்தல் அவசியம்.

காந்திஜி

'ஆசிரம வாழ்க்கை' என்ற புத்தகத்திலிருந்து

(ஸர்வோதய பிரசுரம்: விலை 1—4—0)

★ ஆத்ம விழிப்பால்தான் துன்பம் தீரும் ★

ஆச்சாரிய விநோபா பாவே

கால் நடையாகச் செல்ல வேண்டு மென்று நான் எண்ணிய பொழுது, "ஒரு நாள் வேலைக்காக நீங்கள் ஒரு மாதத்தைச் செலவிடுகிறீர்கள். இதன் மத்தியில் உங்களின் வேலைத் திட்டம் என்னவாக இருக்கும்?" என்று சகோதரர் ஒருவர் கேட்டார். "ஹரியின் பெயரைச் சொல்லு வதும், ஹரியின் பெயரைச் சொல்ல மற்றவர் களுக்குக் கற்றுக் கொடுப்பதும் எனது வேலைத் திட்டமாக இருக்கும்" என்றேன். உங்களுக்குப் பயன் படக்கூடியது என் னிடத்தில் ராம நாமம் உச்சரிப்பதைத் தவிர வேறொரு சக்தி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை, ஆகையால்தான் நான் இந்த பதிலைச் சொன்னேன்.

* * *

மதங்கள் அநேகம், வழிபாடுகள் அநேகம்

இன்று நம் தேசத்தின் முன் மிகப் பெரிய பிரசினைகள் இருக்கின்றன. இது ஆச்சரியத் திற்குரிய விஷய மல்ல. நம்முடைய தேசம் மிகப் பெரியது. நமது தேசத்திற்குச் சுதந்திரம் வந்து இப்பொழுது எத்தனை வருஷ மாகிறது? திடீரென்று பொறுப்பு வந்ததால், நமது தேசம் என்ற படகானது ஆழமான தண்ணீரில் மிதக்கிறது. இப் பிரசினைகளைத் தீர்ப்பதற்குச் சுலபமான வழி ராம நாமம் ஒன்றைத் தவிர, மனித முயற்சியில் இருப் பதாக நான் கருத வில்லை.

"ஹரியின் பெயர்" என்பதன் கருத்து என்ன? ஹரி நாமத்தை உச்சரிப்பவர்கள் வேறு எதனுடைய பெயரையும் உச்சரிக்க மாட்டார்கள். நம்முடைய மகான் களெல்லாம், "சகோதரர்களே, பரமேசுவ னின் வழிபாடும் பணத்தின் வழிபாடும் ஒன்றாக நடக்காது" என்று நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். மனதில் ஆண்ட வனுக்கு இடம் கொடுத்தால், வேறு எதற் கும் அதில் இடம் இருக்க முடியாது. நம் மிடத்தில் அநேக விதமான வேறுபாடுகள் இருக்கின்றன. இவைகள் நமது பாதையைத் தடுத்து வைத்திருக்கின்றன. இந்த வேறு பாடுகளெல்லாம் அழிந்து நம்முடைய பாதை சுத்தமாகி விட்டால் தேசம் ஒன்றாகி விடும். நம்முடைய தேசத்தில் அநேக மதங்கள் இருக்கின்றன என்பது வருந்துவதற் குரிய விஷயமல்ல, அது நமது பாக்கியந் தான். அநேக மதங்களின் கூட்டு வழிபாடு நடை பெறும் இடத்தில் மதங்களின் இந்த வெவ் வேறு தன்மையானது தேசம் மலர்ச்சி யடைவதற்கு உதவியாகத் தான் இருக்கிறது. இந்தியா மலர்ச்சியடைவதற்கு இங்குள்ள வெவ்வேறு மதங்களும் போதுமான உதவி யளித்திருக்கின்றன. வெவ்வேறு மதங்களின் மூலமாக ஒரே ஆண்டவனுடைய பெயரை நாம் உச்சரித்தோமானால் ஆயிரக்கணக்கான வித்தியாசங்கள் மறைந்து விடும்.

* * *

ஹரி நாமத்தில் வித்தியாசத்தை அழிக்கக் கூடிய சக்தி

நாம் ஒருவர் மற்றவர்களின் பாஷையைக் கற்க வேண்டும். நமது வெவ்வேறு இலக்கியங்களில் அநேக விசேஷங்கள் நிறைந் திருக்கின்றன. ஆனால் இங்கோ பாஷை களின் பேரிலும் துவேஷம் ஆரம்பித்திருக் கிறது. எந்த இலக்கியமும் துவேஷத்தின் பேரில் நிலைக்காது. இம்மாதிரியே, மாகாண வேறுபாடு, பிரதேச வேறுபாடு, கட்சி வேறுபாடு முதலியவைகளும் நம்மில் இருக் கின்றன. இந்தியாவில், துன்பமோ எல்லாப் பக்கங்களிலும் இருக்கிறது. ஊழியத்தில் ஈடுபட வேண்டியது தான் நமது தேவை. கட்சி வேறுபாடு முதலியவைகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு ஏதாவது ஒரு உபாயம் இருக்கிற தென்றால் அது பகவா னுடைய நாமம் தான். நாம் அனைவரும் ஆண்டவனால் சிருஷ்டிக்கப் பட்டவர்கள் என்பதை நான் ஜனங்களுக்குக் கூறுவேன். ஆண்டவன் அனைவருக்கும் தந்தை, நாம் அனைவரும் அவருடைய புத்திரர்கள். நாம் ஒருவர்க்கொருவர் சண்டையிடுவோமானால்

அவருக்கு மிகவும் வருத்தமாக இருக்கும். எல்லோரும் அமிர்தத்தினுடைய புத்திரர்கள். சரீரத்தை ஏன் பார்க்கிருய்? கடைசியில் அனைவரும் சாம்பலில் தான் கலக்கவேண்டும். சாம்பலான பிறகு, பிராமணனுடைய சாம்பல் எது, ஹரிஜனனுடைய சாம்பல் எது, மற்றவர்களின் சாம்பல் எது என்று அடையாளம் கண்டு பிடிக்கப்பட மாட்டாது. ஆத்மா ஒன்று என்பதை கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நமக்கு அண்டையிலுள்ளவர்களுக்கும் எளியவர்களுக்கும் ஊழியம் செய்வோம், பரஸ்பரம் ஒருவர் மற்றவரை நேசிப்போம் என்பதற்காகவே நாம் சரீர ரூபமாக வந்திருக்கிறோம். இதில் தான் மனித சரீரத்திற்குச் சாபல்யமிருக்கிறது. இது தான் ஹரி நாமம் என்பதன் பொருளாகும்.

ஹரிநாமத்தை உச்சரிப்பவர்கள், ஊழியத்தில் ஈடுபடவேண்டும். தண்ணீர் சமுத்திரத்தின் பக்கம் செல்லுவதற்காகக் கிளம்புகிறது; ஆனுல் வழியில் அதனுல் எவ்வளவு ஊழியம் செய்யமுடியுமோ அந்த அளவு செய்துகொண்டே செல்கிறது. சமுத்திரம் வரையில் போய்ச் சேருவதில் வெற்றியடைய முடிந்தால் சமுத்திரத்திற்கு போய்ச் சேருகிறது, இல்லையென்ருல் வழியிலேயே முடிந்துவிடுகிறது. அம்மாதிரியே, நம்மிடம் இருக்கும் பலத்தைக்கொண்டு துன்பப்படுபவர்களுக்கும் எளியவர்களுக்கும் சேவை செய்ய முயற்சிக்கவேண்டும்.

* * *

இரண்டு கைகளையும் உபயோகப்படுத்த வேண்டும்

இந்தியாவில் எது குறைவாக இருக்கிறது? நிலமிருக்கிறது; எத்தனையோ நதிகள் இருக்கின்றன. இருந்தபோதிலும் நாம் பிச்சை வாங்குகிறோம். உண்ணுவதற்கு உணவும் உடுப்பதற்கு உடையும் இல்லாமலிருக்கிறது. பரமேசுவரன் நமக்கு இரண்டு கைகளைக் கொடுத்திருக்கிருர், அவைகளைக் கொண்டு வேலை செய்வதில் என்ன ஆபத்து இருக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. பகவான் மனிதனுக்கு இரண்டு கைகளைக் கொடுத்திருக்கின்ருர், அவைகளைக் கொண்டு அவன் கர்மயோகத்தைச் சாதிக்கக்கூடும் என்பது தான் மனிதனுடைய சிறப்பு. சுவர்க்கத்தில் தேவர்கள் சுகத்தையே அனுபவிக்கிருர்களென்ருல், பூலோகத்தில் மிருகங்கள் துன்பத்தையே அனுபவிக்கின்றன. சுகம் மட்டும் அனுபவிக்கக்கூடிய இடத்தில் யோகத்தைச் சாதிப்பதெப்படி? மனித வர்க்கத்தால் கர்ம யோகத்தைச் சாதிக்க முடியும். ஆகையால் தான், தேவவர்க்கம் மிருக வர்க்கம் முதலியவைகளைக் காட்டிலும் மனித வர்க்கம் சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஆண்டவன் நமக்கு இரண்டு கைகளைக் கொடுத்திருக்கிருன். இதுதான் அவருடைய பெரிய கொடை. அவைகளை உபயோகப் படுத்தும்பொழுது தான் நம்முடைய துன்பம் அழியும்.

* * *

சுயராஜ்யம் என்பதற்கு சரியான அர்த்தம் என்ன?

சுயராஜ்யம் வந்துவிட்டது என்று ஜனங்கள் கூறுகிருர்கள். சுயராஜ்யம் என்பது ஏதாவது பார்சல் மூலமாகவா வந்தது? அது நமக்குச் சொந்தமானது; நம்முடைய சம்பாத்தியமாகும். சுயராஜ்யம் வந்திருக்கிறது என்பதன் பொருள் வெளிச்சம் ஏற்பட்டிருக்கிறது என்பதுதான். இப்பொழுது வேலை செய்வதற்கு வசதி ஏற்பட்டிருக்கிறது. நாம் வேலை செய்யாமல் இருந்தால் வெளிச்சத்தால் என்ன பயன் கிடைக்கும்? சுயராஜ்யம் இல்லாத போது பொறுப்பை அதிகமாக உணர்ந்து வந்தோம். ஆனுல் இப்பொழுதோ, எல்லாவற்றையும் சர்க்கார் தான் செய்ய வேண்டுமென்று அனைவரும் சொல்ல ஆரம்பித்திருக்கிருர்கள். சர்க்கார் உங்களிடமிருந்து தனியானதாக இருக்கிறதா என்று நான் கேட்கிறேன். நீங்கள் யாரை விரும்புகிறீர்களோ, அவர்களுக்கு வோட்டுக் கொடுத்துத் தேர்ந்தெடுக்கிறீர்கள். நீங்கள் பலமுள்ளவர்களானுல் தான் உங்களின் சர்க்காரும் பலமுள்ளதாகும். நீங்கள் பலவீனர்களாக இருந்தால் உங்கள் சர்க்காரும் பலவீனமுள்ளதாகத் தான் இருக்கும்.

"இது வரையிலும் நாங்கள் அதிகமான வேலை செய்திருக்கிறோம், இப்பொழுது எங்களை ஓய்வெடுக்க விடுங்கள்'' என்று ஜனங்கள் கூறுகிருர்கள். ஓய்வு எப்படி? பௌர்ணமி வந்து விட்டதா என்ன?

அமெரிக்காவின் பாசக்கயிறு — ஜே. ஸி. குமரப்பாவின் எச்சரிக்கை

சுமார் ஒரு மாதத்திற்கு முன் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஒரு உடன்படிக்கை கையெழுத்தாகி யிருக்கிறது. அதன் படி இந்தியாவுக்கு அபிவிருத்திக் காரியங்களுக்கென்று ஐந்து கோடி டாலர் கிடைப்பது சாத்தியமாகும். அமெரிக்கா, உலகின் மற்ற எல்லாப் பாகங்களிலும் தன் பிடியை வலுப்படுத்திக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷார் அரசியல் ஏகாதிபத்தியத்தில் வல்லவர்கள் என்றால், அமெரிக்கர் பொருளாதாரத் துறையில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இது உலகப் பிரசினைகளைப் பற்றி நாம் இனிப் பேசவியலாதபடிச் செய்து விடுமோ? "கிராம-நகர அபிவிருத்தி" முதலான எந்த விதமான மாயையிலும் சிக்காமல் நாம் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

இந்த ஐந்து கோடி டாலர் உதவியோடு திருப்தியடைவதாகக் காணோம்; இந்தியாவின் "முன்னேற்றத்தை" துரிதப் படுத்துவதற்கு இன்னும் ஒரு 100 கோடி டாலர் உதவியும் அளிக்க வேண்டும் என்கிறார் அமெரிக்கத் தூதரான செஸ்டர் பௌலஸ். அமெரிக்க "நிபுணர்"களும் வந்து நம் நாட்டில் இறங்க ஆரம்பித்து விட்டார்கள்.

இதனலெல்லாம் அபாயமே விளையும். அமெரிக்கரின் செல்வாக்கால் வர்த்தக முறையும் யந்திரக் கலப்பைகளும் பரவும். நம் விவசாயத்தை யந்திரங்களையும் பெட்ரோலையும் நம்பி நடத்துவது, நம்மை அமெரிக்கருக்கு அடமானம் வைப்பதற்குச் சமமானதே. இவர்கள் நமக்குக் கட்டளையிடுவதை நாம் ஆட்சேபிக்க நேர்ந்தால், நமக்குப் "பாடங் கற்பிப்பதற்காக" எண்ணெய் சப்ளை செய்வதை நிறுத்திக் கொள்வார்கள்; பின்பு நாம் பட்டினி கிடக்கத்தான் வேண்டும். கடந்த யுத்தத்திற்கு முன்பு, சென்னை மாகாணத்தில், பணக்காரர்களான சில விவசாயிகள் குருடாயில் பம்புகளை நிறுவிக் கொண்டனர். யுத்த காலத்தின் போது அவர்களுக்குத் தேவையான எண்ணெய் கிடைக்க வில்லை; ஆதலால் பம்புகள் வேலையற்றுப் போகவும், அவர்களின் பழய பொருளாதார நிலையும் சீரழிந்து விட்டது; இந்தக் கஷ்டத்தால் சிலர் அழிந்தே போனார்கள்.

நம் நாட்டில் கிடைக்காததும் உற்பத்தி செய்ய இயலாததுமான பொருள்களை நம்பி நம் பொருளாதார அமைப்பை ஸ்தாபிதம் செய்தால், அது தற்கொலை செய்து கொள்வ

ஆத்ம விழிப்பால்தான் துன்பம் தீரும்

(முன்பக்கத் தொடர்ச்சி)

இப்பொழுது தான் அமாவாசை முடிந்திருக்கிறது, இனி சந்திரன் மெதுவாக வளருவான். "இது வரையிலும் எங்களுக்கு காங்கிரஸ்காரர்களின் மீது நம்பிக்கை இருந்தது, இப்பொழுது நாங்கள் சர்வோதயக்காரர்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம்" என்று சில ஜனங்கள் கூறுகிறார்கள். இது எவ்வளவு பெரிய பிரமை! சாப்பிட்டு விட்டால், தானே சர்வோதயமாகி விடுவதற்கு "சர்வோதய சமாஜம்" ஒரு அமிர்தப் பொட்டலம் அல்ல. 'நம்முடைய வாழ்க்கைக்காக நாம் பிறருடைய ஊழியத்தை ஏற்றுக்கொள்ளமாட்டோம், முடிந்த அளவு பிறருக்கு ஊழியம் செய்வோம்' என்று நாம் விரதம் எடுத்துக்கொள்ள வேண்டும். இம்மாதிரி செய்பவர்கள்தான் "சர்வோதய சமாஜ" ஊழியர்களாவர். சர்வோதய சமாஜம் என்பது எல்லோருடையதாகும். அது எந்த விதமான சாட்சியத்தையும் கோருகிறதில்லை. நான் சர்வோதய சமாஜத்தின் கொள்கைகளை ஒப்புக்கொள்ளுகிறேன் என்று சொல்லக்கூடியவர்கள் சர்வோதய சமாஜ ஊழியர்களாவர்.

மனிதர்கள் அனைவரும் ஊழியர்களாகட்டும்

சகோதரர்களே, நீங்கள் எல்லா வித்தியாசங்களையும் மறந்து விடுங்கள்; இது தான் நான் உங்களுக்குக் கூறுவது. சர்வோதயக்காரர்கள், சர்வோதய மல்லாதவர்கள் என்ற எல்லா வித்தியாசங்களையும் அழித்து விட்டு, நல்ல மனிதன், மனிதர்களுக்கு ஊழியம் செய்பவன் என்ற ஒரே மனப்பான்மையுடன் இருங்கள். ★ ★ ★

தற்குச் சமமாகும். ஜப்பானின் அனுபவம் இத் துறையில் நமக்குப் படிப்பினையாக அமையும். ஜப்பானியர்கள் சரணடைந்த தற்கு, அணுக் குண்டால் உண்டாக்கின பயம் காரணம் அல்ல; அவர்களுக்குத் தேவையான பெட்ரோல் கிடைக்க வில்லை. இதனால் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவது அசாத்தியமாகி விட்டது. ஹிரோஷிமாச் சம்பவம் கௌரவமானதொரு சாக்கு. நாம் முன்னேறுவது சிறிதளவேயிருந்தாலும் பரவாயில்லை; அது நம்மைக் கொண்டே நடைபெற வேண்டும். அவசரப் படுவதால் பயனில்லை, காரியம் அழிந்து விடும். வெளி நாடுகளிலிருந்து கிடைக்கும் இத்தகைய பெரும் உதவியால், நாம் சுதந்திரத்தை இழந்து விடுவோம். அது நம் கழுத்தைச் சுருக்கியுள்ள பாசக் கயிறாகி, புதிதாய்க் கிடைத்துள்ள நம் சுதந்திரத்திற்கு ஆபத்தையே தரும். ★ ● ★

"கிராம உத்யோக் பத்ரிகா," பிப்ரவரி, '52

★ சர்க்கா சங்கத்தின் தீர்மானங்கள் ★

சர்க்கா சங்கத்தின் டிரஸ்டிகளின் கூட்டம் சேவாகிராமத்தில் ஜனவரி 20, 21, 22 தேதிகளில் நடந்தது. அதில் நிறைவேறிய தீர்மானங்களில் சிலவற்றின் சாரத்தைக் கீழே கொடுக்கிறோம்:

1. சர்க்கா சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி அவர்களின் 5 வருஷ பதவிக் காலம் முடிவு பெறுவதால், அவர் ராஜினாமாச் செய்தார். ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவருக்குப் பதிலாக ஸ்ரீ ஏ. வி. சஹஸ்ரபுத்தே அவர்கள் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் முன்னமே மஹாராஷ்டிர சர்க்கா சங்கக் கிளையின் காரியதரிசியாகப் பல வருஷங்கள் அனுபவம் பெற்றவர். சென்ற 10 வருஷங்களாக பம்பாய் சர்க்காருக்கு கதர் – குடிசைத் தொழில் அபிவிருத்தி போர்டில் ஆலோசகராகவும், கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துவதில் வேலை செய்தும் வந்தார். சமீபத்தில் ஜப்பானுக்குச் சென்று குடிசைத் தொழில் அபிவிருத்தியைப் பார்த்து வந்தார்.

2. ஸ்ரீ த்வாரகநாத் லேலே சங்கத்தின் உதவிக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

3. வருஷா வருஷம் மூன்று டிரஸ்டிகள் ஒரு வருஷத்திற்காக எடுத்துக்கொள்வதுண்டு. இவ்வருஷத்திற்காக இந்த மூன்று ஸ்தானங்களுக்கு ஸ்ரீ சித்தராஜ் தட்டா (ராஜஸ்தான்), ஸ்ரீ த்வஜ ப்ரசாத் சாஹு (பீஹார்), ஸ்ரீ ரா. குருசாமி (தமிழ் நாடு) ஆகிய மூவரும் டிரஸ்டிகள் போர்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

4. புதிய பட்ஜெட் கமிட்டியில் கீழ்க் கண்டவர்கள் அங்கத்தினராக இருப்பர்: 1. ஸ்ரீ தீரேந்திர மஜும்தார், 2. ஸ்ரீ ஏ. வி. சஹஸ்ரபுத்தே, 3. ஸ்ரீ த்வாரகநாத் லேலே, 4. ஸ்ரீ ஆர். எஸ். தோத்ரே, 5. ஸ்ரீ கிருஷ்ண தாஸ் காந்தி.

பொதுவாக பட்ஜெட் கமிட்டி பிரதி ஜனவரி, ஏப்ரல், ஜுலை, அக்டோபர் மாதங்களிலும், அவசியமான வேறு சமயங்களிலும் கூடும்.

5. இதுவரை சங்கத்தின்கீழ் பல பயிற்சி முகாம்கள் நடத்திவந்த ஸ்ரீ கனு காந்தி சௌராஷ்டரத்தில் சேவை செய்வதற்காக சங்கத்திலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார். ராஜினாமாவை ஏற்று, சங்கம் அவருடைய சேவையைப் பாராட்டிற்று.

6. சேவாகிராமம் காதி வித்தியாலயத்தின் நிர்வாகியாக இருந்த ஸ்ரீ நந்தலால் பட்டேல், வித்தியாலயப் பொறுப்பிலிருந்து விலகி, இனி நூற்பு – நெசவுக் கருவிகள் ஆராய்ச்சி வேலையில் மட்டும் ஈடுபட்டு வேலை செய்து வருவார்.

7. கருவி ஆராய்ச்சிக் கமிட்டியில் கீழ்க் கண்டவர்கள் அங்கத்தினராக இருப்பர்: 1. ஸ்ரீ ஏ. வி. சஹஸ்ரபுத்தே, 2. ஸ்ரீ ரா. வர்க்கேடி, 3. ஸ்ரீ நந்தலால் பட்டேல், 4. ஸ்ரீ மோஹன்தாஸ் பரீக், 5. ஸ்ரீ கிருஷ்ண தாஸ் காந்தி, 6. ஸ்ரீ மாதவலால் பட்டேல், 7. ஸ்ரீ விஷ்ணுபாய் வ்யாஸ்.

8. சர்வ சேவா சங்கம் நடத்தும் ஹிந்தி "ஸர்வோதய" பத்திரிகைக்கு சந்தாப் பணத்திற்குப் பதிலாக நூலாகவும் சர்க்கா சங்கத்தின் கிளைகளின் மூலம் வசூல் செய்யத் தீர்மானித்தது.

★ ★ ★

★ காந்திஜி உலகிற்கு அளித்த புதிய வழி ★

ஆச்சாரிய விநோபா பாவே

(சர்வோதய தினத்தன்று உத்தர் பிரதேசத்தில் எடாவாவில் செய்த பிரசங்கம்)

காந்திஜி தம் பூதவுடலை நீத்து, மனித சமூகத்திற்கு இன்னும் மகத்தான சேவை செய்வதற்காகக் கடவுளுடன் கலந்து இன்றுடன் நான்கு வருடங்களாகின்றன. மனித குலத்திற்கு இடையுருது சேவை செய்வது தான் அவருக்கிருந்த மிகப்பெரிய அபிலாஷை; "நமக்கு இன்னும் மகத்தான சேவை செய்வதற்காக" அவர் அருபியும் அகண்டமுமான பொருளுடன் கலந்துவிட்டார் என்று நான் சொல்வதற்குக் காரணம் அது தான். அன்றாடம் அவர் செய்யும் பிரார்த்தனையில் கீழ்க்கண்ட சுலோகம் ஒன்று அடங்கியிருக்கும்: 'மண்ணரசும் வேண்டேன், விண்ணொடு வேண்டேன் மோட்சம்; துக்கத் தீயில் வாடும் மக்களின் துயரைப் போக்குவதையே விரும்புவேன்.'

காந்திஜியின் இதயத்தில் இந்த விருப்பந் தான் ஓங்கி நின்றது; தம் வாழ்நாள் முழுதும் ஓய்வு ஒழிச்சலின்றி இதற்காகவே அவர் பாடுபட்டார். நம் கண் முன்பே அவருடைய அற்புதமான சாதனைகளைக் கண்டிருக்கிறோம். அவருக்கு முன்பும் அவர்போன்ற எண்ணற்ற மகான்கள், கடவுளின் அருளால், நம் நாட்டில் உதித்தார்கள். இங்கு எனக்கு புத்தர் பிரானின் ஞாபகம் வருகிறது. அவரும், எல்லா உயிர்களின் துன்பங்களுக்கும் முடிவு காணக்கூடிய ஒரு சரியான மார்க்கத்தைப் பற்றிய சிந்தனையிலேயே தம் வாழ்நாள் முழுதும் செலவிட்டார். அம்மார்க்கத்தைத் தேடி, அன்பு நெறியால், எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுவதால், மனிதனுக்கு ஜீவன் முக்தியை — உயிருள்ள போதே எய்தும் முக்தி நிலையை—க் காட்டினார். எல்லா மகான்களும் அதே அன்பு நெறியைத் தான் போதித்துள்ளனர். "கருணையே மதத்தின் அடிப்படை, கர்வம் எல்லாப் பாவங்களுக்கும் காரணம்" என்றார் துளசிதாசரும். நம் நடத்தை கருணையின் வழிச் செல்வதாய் இருக்க வேண்டும்; ஆனால் அதே சமயத்தில் நாம் கருணை ததும்பியவர் என்று கர்வங் கொ..லாகாது. கருணையுடன் கர்வமும் சேருமானால் அதுவே பாவத்திற்குக் காரணமாகி விடும். நம்மையறியாமல் நமக்கு நாமே எவ்வளவு கருணையும் அன்பும் காட்டுகிறோமோ, அவ்வளவு மற்றையோரிடமும் காட்ட வேண்டும். நாம் செய்யும் வரம்பு மீறிய காரியங்கள் எத்தனையோவற்றை மன்னித்துவிடுகிறோம். தவறான வழிகளிலிருந்து விலக மீண்டும் மீண்டும் சந்தர்ப்பங்களை அளிக்கிறோம். தனது வாழ்க்கையைப் பரிசீலனை செய்யும் எவருக்கும் இது புலனாகும். மற்றவர்களை நம்மில் ஒரு அங்கமாக, நம் ஆத்மாவிலேயே ஒரு பகுதியாகப் பாவித்துக் கருணை காட்டுவோமாக. நாம் ஒரு சுடரின் பல பொறிகளே என்பதும், மற்றவர்களுடன் புழங்கும்போது கருணையும் மன்னிப்பும் காட்டவேண்டும் என்பதும் நம் மகான்களின் வாக்கு. காந்திஜியும் இதையே தான் போதித்தார். புத்தர் பிரானின் காலந் தொடங்கி, அல்லது அதற்கு முந்திய வேத காலத்திய ரிஷிகளிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணர் வரையுள்ள, மகான்கள் உலகிற்குப் போதித்ததைத்தான் அவரும் எடுத்துரைத்தார். புதியதொரு கோட்பாட்டை அவர் போதிக்கவில்லை, போதித்ததாக உரிமை பாராட்டிக் கொள்ளவும் இல்லை; முன்னோர்களின் அனுபவத்தையும் உபதேசத்தையும் ஆதாரமாய்க் கொண்டு தாம் செயலில் இறங்க முயற்சித்ததொன்றே தான் செய்த தெல்லாம் என்று சொன்னார். ஆனால் அவருடைய ஜீவிய வேலையின் சிறப்பான அம்சம் என்னவென்றால், கருணை, மன்னிக்குந் தன்மை, சமாதானம், உண்மை, அன்பு, தீய குணத்திலிருந்து விடுதலை முதலிய நல்லியல்புகளை தனி மனித வாழ்க்கையில் அனுஷ்டிக்குமாறு சொல்லாமல் அவைகளை தேசத்திலும் அரசியலிலுமுள்ள பெரும் பிரசினைகளைத் தீர்க்க சமூக-தேசிய அளவில் பிரயோகித்தார். சத்தியம் - அஹிம்சை என்னும் இரு ஆயுதங்களைக் கொண்டு நமது தியாகத்தின் மூலம் மற்றவர்களின் மனமாற்றத்தை ஏற்படுத்தி தேச சுதந்திரத்தின் பிரசினையைத்

தீர்க்க புதிய மார்க்கத்தைக் காண்பித்தார். நாம் அவருடைய போதனையைச் சரியாகவும் பூரணமாகவும் அனுஷ்டிக்கவில்லை யென்ருலும், அதற்குச் சிறிது பலன் கிடைத்தது; உலக நிலை ஒரு விதமாய் உருவாகி, நாம் கடந்த அறுபது வருஷங்களாகப் போராடிக் கொண்டிருந்த சுதந்திரப் பிரசினை தீர்ந்துவிட்டது. இது நம் கண்முன்பு நிகழ்ந்த அதிசயம். சமூக அரசியல் பிரசினைகளைத் தீர்ப்பதற்கு ஆத்ம சக்தியைப் பயன் படுத்துவதற்கான வழியைக் காண்பித்த பெருமை காந்திஜிக்கே உரியது.

ஆத்மாவின் சக்தி, ஒரு ஸ்தூல சரீரத்தில் மட்டும் கட்டுப்பட்டதல்ல; இந்தப் பிரபஞ்ச முழுமையுமே அது பரவியுள்ளது. ஆதலால், மனிதனின் தனியான அல்லது பிரத்தியேக வாழ்வில்தான் ஆத்மாவினுல் செயலாற்ற முடியும் என்பது தவறு. சர்வ வியாபகமாயிருப்பதால், அது மிகச் சிறிய மண்டலத்திலும், மிகப் பெரிய மண்டலத்திலும் வேலை செய்ய வல்லது. வாள் கத்தி முதலான ஆயுதங்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட தூரத்திற்குத்தான் அவை உதவும். துப்பாக்கி முதலான ஆயுதங்களை குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பாலிருந்துதான் பிரயோகிக்க முடியும். ஆனல் ஆத்மாவுக்கு இந்த வரையறைகளெல்லாம் இல்லை. ஒரு தனி மனிதனின் இதயத்தில் அது வேலை செய்வதுபோல் எல்லா உயிர்களின் இதயத்திலும் அது வேலை செய்யும். ஆனல், சரித்திரத்திலோ ஆத்மாவின் சக்தி தனி மனித வாழ்வில் ஆற்றிய செயல்களைத் தான் நாம் காண்கிருேம். மகான்கள் ஆத்மாவின் சக்தியால், அன்பினுல், ஒரு பாவியை மகானுகவும் பகைவனை நேசனுகவும் மாற்றியதைப் பற்றிப் படித்திருக்கிருேம். இத்தகைய சம்பவங்கள் மற்ற நாடுகளிலும் இல்லாமலில்லை. ஆனல் ஒரு கூட்டத்திற்கோ அல்லது ஜன சமூக அளவிலோ ஆத்ம சக்தியைப் பயன் படுத்தியது ஒரு புதுமையான சோதனை. இந்தக் காலமும் அதற்கு ஏற்றதாயிருந்தது. இந்த யுகத்தின் தேவையும் அதுதான். இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆட்சி ஜனங்களை நிராயுதபாணியாக்கி, அதன்மூலம் சரித்திரத்தில் எந்தச் சக்கரவர்த்தியும் முயற்சிக்காத அளவுக்குத் தன் சூழ்ச்சியைக் காட்டியுள்ளது. அது அவ்வாறு செய்ய முடிந்ததற்கு விஞ்ஞானத்தின் உதவிதான் காரணம். மொகலாயர்களின் காலத்தில், நாட்டில் ஒரு சட்டம் நிறைவேற வேண்டுமானுல் அதற்குள் சில வருஷங்கள் சென்றுவிடும். ஒரு உத்தரவு ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளையும் அடைவதற்கு நீண்ட காலம் ஆகும். ஆனல் இக் காலத்திலோ, லண்டனில் ஒன்றைப் பிரகடனம் செய்தால் அவ்வாறு செய்த சில மணி நேரத்திற்குள் நம் இந்தியாவின் மூலை முடுக்கிலெல்லாம் அது பரவிவிடுகிறது.

காந்திஜி சரித்திரத்தின் ஒரு தேவை

இருபதிலிருந்து முப்பது கோடி வரையுள்ள (அக்காலத்திய) ஜனத்தொகையும், புராதன நாகரிகத்தையும், கலாசார தர்ம அபிவிருத்தியில் மகத்தான சாதனைகளைக் காட்டும் சரித்திரத்தையும் கொண்ட நம் நாடு தன் ஆயுதங்களை இழந்துவிடவும், சாதாரண மனிதனுக்குத் தெரிந்திராத வேருெரு ஆயுதத்தை உருவாக்குவதன் மூலந்தான் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடிந்தது. இந்தியாவைப் போன்ற ஒரு பெரிய நாடு என்றென்றும் அடிமையாகவே இருந்துவர இயலாது. எனவே, காந்திஜியின் தோற்றம் சரித்திரத்தின் ஒரு தேவையாக இருந்தது. அவர் தோன்றியிராவிட்டால், வேருெருவர் அந்தக் காரியத்தைச் செய்திருப்பார். இந்த யுகமும் இந்தியாவின் சரித்திரமும் அஹிம்சையை தேச வியாபகமான அளவில் பரிசோதனை செய்து பார்ப்பதற்கு அனுகூலமாய் அமைந்தன. அக்காலத்தில் அஹிம்சை ஆயுதத்தைப் பரந்த அளவில் பிரயோகிப்பதைப்பற்றிக் கருதுவதற்கும் இல்லாமலிருந்தது. விஞ்ஞான முன்னேற்றம் இல்லாததால் அரசர்களின் அதிகாரமுங்கூட காலம், இடம், தீவிரம் ஆகியவற்றில் ஒரு வரையறைக்குள் நின்றது. மனித சமுதாய அளவில் அஹிம்சா சக்தியை நிரூபணம் செய்யும் வாய்ப்பு காந்திஜிக்குத்தான் கிட்டியது. ஏனென்ருல் உலகில் இந்தியா விடுக்கும் செய்தி அதுவாக இருந்தது. இந்த நாடு அதற்கு ஏற்றதொரு நிலைக்களமாக அமைந்தது. நம் சரித்திர சம்பிரதாயங்கள் புராதனமானவை; ஆத்மிக சம்பத்து இடையருது தொடர்ந்து வருகின்றமையால், ஜனங்களின் இதயம் அஹிம்சையை எளிதாக ஏற்றுக்கொண்டது. சைவ உணவு கொள்ளுபவர்கள் பெரும் அளவில் இந்தியாவில்தான் உள்ளனர். இங்கு

மாமிசம் சாப்பிடுவோர்கூட சைவ உணவே வாழ்க்கையில் சிறந்த வழியென்று நம்புகின்றனர்.

மேற்கத்திய சமதர்ம நெறி—சோஷலிசம்—இன்னும் குழந்தைப் பருவத்தில்தான் உள்ளது. இந்தியாவிலுள்ள சமதர்ம நெறி, தனக்கென்று தனித்தன்மை வாய்ந்தது; மிருகங்களிடத்துங்கூட அது காட்டப்படுகிறது. இந்திய மக்கள் பசுவைத் தங்கள் குடும்பத்தினரில் ஒன்றாகவே பாவிக்கின்றனர். இவ்வாறாக, இந்தியாவின் சூழ்நிலை காந்திஜி அவதரிப்பதற்கு மிக்க அனுகூலமாயிருந்தது. காந்திஜி இல்லாவிட்டால், இந்திய மண்ணில், அஹிம்சையின் சக்தியை நிரூபிக்க வேறொருவர் வந்து தோன்றியிருப்பார்.

இந்தியாவின்மூலம் உலக முழுமையையும் அஹிம்சையில் பயிற்றிவிடலாம் என்று காந்திஜி சொல்வது வழக்கம். அமெரிக்காவுக்கு ஒருமுறை விஜயம் செய்ய அழைத்தனர்; நம் தேசத்தில் அஹிம்சையின் சோதனை நிறைவேறி, இந்திய சமூக வாழ்க்கையில் அது பலித்த பிறகுதான் அங்கு வருவது சாத்தியமென்று சொல்லி, அவர் நிராகரித்துவிட்டார். அதுவரை உலகுக்கு எந்தச் செய்தியும் விடுப்பதற்குத் தான் அருகரல்ல என்றும் அவர் சொல்லிவந்தார். அவ்வாறு அவர் சொன்னது உண்மையே; இந்தியாவைப்பற்றி அவர் மிகவும் உயர்வான நம்பிக்கைகளைக் கொண்டிருந்தார்.

நம் நாட்டின்மேல் அவருக்கிருந்த பக்திதான் எவ்வளவு! எவ்வளவு அதிகமாய் அதை அவர் நேசித்தார்! அவரது வேலை பூர்த்தி பெற்றபடியால் இமயமலைக்குச் சென்று கடவுளைப்பற்றிய தியானத்தில் வாழ்வை ஈடுபடுத்தவேண்டும் என்று ஒரு அன்பர் கூறியபோது, "என் தேச மக்கள் இமயமலைக்குச் சென்றால் நானும் அங்கு அவர்களுக்குச் சேவை செய்வதற்காகச் செல்வேன்" என்று பதிலளித்தார். மக்களின் சேவையே அவருக்கு இமாலயமும், தியானமும் என்றிருந்தது. இமயமலைக்கு அவர் செல்லவேண்டிய அவசியம் என்ன? அவர் எங்கெங்கு இருந்தாரோ அங்கெல்லாம் இமாலயமும் சிவாலயமுந் தானே! கீதை என்னும் தாயிடம் வாஞ்சையுள்ள புத்திரராக அவர் இருந்தார்; பற்றற்ற வாழ்க்கை வாழ்வதற்கு இடையறாது பாடுபட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு இமாலயம் என்றால், கல் குவியலின் தொடர்கள் அல்ல; ஆனால் அது அவருக்கு புராதன ரிஷிகள் அங்கு கடைப்பிடித்த நியமங்களைக் குறிக்கும்.

நம்மிடமுள்ள முக்கிய சக்திகளை உணரும்படி அவர் செய்தார், கோழைத்தனத்திலிருந்து நம்மை உயர்த்தி வீரத்தை ஊட்டினார். வாசற்படி தாண்டியறியாத பெண்கள்கூட, வெளிவந்து, போராட்டத்தில் இறங்கி, ஆயுதந் தரித்த சிப்பாய்களை எதிர்த்து நின்றார்கள். தாக்க வருபவனைச் சமாளிப்பதற்காக ஆயுதம் தரித்திருக்கும் ஒருவனைக்காட்டிலும் அவ்வாறு செய்வதற்குத் தன் ஆத்ம சக்தியையே நம்பியிருக்கும் ஒருவன் தீரம் மிக்கவன் என்று அவர் சொல்வது வழக்கம். ஆயுதம் தரித்தவன் இறக்கவும் சித்தமாயிருக்கிறான், அந்த அளவுக்கு அவன் தீரமானவன்தான்; ஆனால் தன்னைக் காத்துக்கொண்டு, ஆயுதங்களின் உதவியால் தன் எதிரியைக் கொல்ல விரும்பும் அளவில் அவன் கோழையே. கொல்லாமல் இறப்பதற்குச் சித்தமாயிருப்பவன்தான் தீரன். இந்த அற்புதத்தை அவர் நிகழ்த்தினார்; ஏனென்றால் ஜனங்களின் உள்ளார்ந்த சக்தியை அவர் உணர்ந்தார். அஹிம்சையின் சக்தியை இந்தியா நிரூபிக்கும் என்பது அவரது திடமான நம்பிக்கை. இந்த நம்பிக்கைக்கு, நம் கண்ணெதிரில் நிகழ்ந்தபடி, அவரது வாழ்க்கையே நிரூபணமாகியது; இதனால், நம் நாட்டில் அஹிம்சையின் சக்தியைத் தெளிவு படுத்தலாம் என்ற நம்பிக்கை மேலும் உறுதியாகிறது.

மகாத்மாக்களின் வாழ்க்கை

மகாத்மாக்களின் வாழ்க்கை நம் ஆத்மாவின் பிரதிபிம்பத்தைக் காட்டும் கண்ணாடி. சிங்கக் குட்டியொன்று ஆட்டு மந்தையில் சேர்ந்து வளரவும், தன் இயல்பை மறந்து திரிந்தது; மற்றொரு சிங்கத்தைக் கண்ட பிறகுதான் தன் சுய இயல்பை அது உணர்ந்ததாம். அதேபோல, நாம் எல்லோரும் மகான்களின் வாழ்க்கையில் நம்மை நாமே உணரும் சிங்கங்கள். காந்திஜியின் வாழ்க்கை நம்மில் பொதிந்துள்ள ஜீவ சக்திகளை நாம் கண்டுகொள்வதற்கு வழிகாட்ட வல்லது.

பூமிதான யக்ஞம் தோற்றத்தில் சிறிதாக இருந்தாலும் அதில் புரட்சியின் வித்துக்கள் பொதிந்துள்ளன. பொருளாதாரப் புரட்சி

சுயராஜ்யத்திற்குப் பின்பு, அதற்கு முன் இருந்தது போலவே இந்தியாவின் தேவையாக இருக்கிறது. பொருளாதாரப் புரட்சியின் முக்கியத்துவம் சுயராஜ்யத்தினதைவிடக் குறைந்ததல்ல. நான் எதற்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறேன்? என் தளர்ந்த கால்களால் காந்திஜி காட்டிய பாதையில் நடக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். அது நமது சம்பிரதாயங்களிலிருந்து தோன்றிய, நம் தேசத்திற்கே தனியான ஒரு வழி. நாம் இதை உணர்ந்து நம்மிடமுள்ள சிங்கத்தின் —ஆத்மாவின்—மேல் பிரதிபலிப்போமானால் நாமும் சிங்கங்களாக மாறலாம். காந்திஜிக்குத்தான் அது உரித்தான வழி என்று நாம் சொல்லக் கூடாது. அது நம்முடையதுந் தான். மகான்களின் வாழ்க்கை நம்முடையதிலிருந்து வேறுபட்டது என்று கருதுவோமானால் அது தற்கொலைக்குச் சமமானது. மகான்களின் வாழ்க்கையில் நாம் நமது ஆத்மாவின் பிரதிபிம்பத்தையே காண்கிறோம். நமது ஆத்மாவும் காந்திஜியைப் போன்று அவ்வளவு பெரும் சக்தி கொண்டது என்பதை நாம் உணரவேண்டும். இந்த நம்பிக்கையுடன் அடிமேல் அடியாக அந்தப் பாதையில் செல்வோமானால், சத்தியத்தை உணர்ந்து, நமது பிரசினைகளுக்கு முடிவு காணலாம்.

நிலப் பிரசினை

நிலப் பிரசினையை எடுத்துக்கொண்டு, அதற்கு அமைதியான பரிகாரத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன். குறிப்பிட்டதொரு உத்தியைக் கையாண்டு, நம்பிக்கையுடன் சோதித்துப் பார்க்கிறேன். ஜனங்கள் நான் சொல்லும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறார்களென்றும் தெரிகிறது. நிலம் கடவுளின் கொடையென்றும் அவருடைய குழந்தைகளான அனைவருக்கும் பயன்படவேண்டுமென்றும் உணர்கிறார்கள். நில மில்லாதவர்கள் நிலம் கோரினால், தாகமடைந்திருப்பவனுக்குத் தண்ணீர் கொடுப்பதுபோல், அவர்களுக்கு நிலம் கொடுப்பது நம் கடமை. அதே போல, உழுவதற்கு நிலம் வேண்டுமென்று ஒருவர் கேட்டால் அவருக்கு நிலம் கொடுப்பது நம் கடமை. ஜனங்கள் நான் சொல்வதை உடனே கடைப்பிடிப்பது கஷ்டமாக இருந்தாலும், உணர்ந்து ஏற்கிறார்கள்; கஷ்டமென்று உணர்வதற்குக் காரணம், நிலத்திடம் உள்ள அவர்களுடைய பாசத்தை விடமுடியவில்லை. ஆனாலும், இதை உணர ஆரம்பித்திருக்கிறார்கள் என்பது பற்றித் திருப்தியடைகிறேன். இதுவரை எனக்கு சுமார் 62 ஆயிரம் ஏக்கர் நிலம் கிடைத்திருக்கிறது. இதையெல்லாம் அன்பைக்கொண்டே பெற்றேன். இதனால் நான் கையாளும் முறை வெற்றி பெறும் என்ற நம்பிக்கை ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. நிலப் பிரசினையைத் தீர்ப்பதற்காகப் புதியதொரு சோதனை இந்தியாவில் நடைபெறுகிறதென்று பிற நாட்டுப் பத்திரிகைகளும் எழுதுகின்றன. இப்போதுள்ள உலக நிலையில் அது ஒரு நூதனமான வழியென்று சொல்லி, வியப்புடன் பார்க்கிறார்கள். ஆனால் நம் சரித்திரமும் சம்பிரதாயமும் அறிந்தவர்களுக்கு அது நூதனமாகத் தோன்றாது. நியாயமான, சுலபமான வழி இதுதான் என்று உணர்வார்கள். மனித சமூகத்தின் நலனை உறுதிப்படுத்தி, சமூகத்தை துரிதமாக மாற்றியமைக்கும் வழி அது. ஹிம்சையைத் தழுவாமல் சமூகப் புரட்சியைச் சாதிக்கும் வழி அது. இந்த வழியில் எனக்கு நம்பிக்கையுண்டு; அதைக் கொண்டே வேலை செய்யவும் விரும்புகிறேன். நீங்களனைவரும் காந்திஜியின் வாழ்க்கையைக் கண்டிருக்கிறீர்கள்; இந்திய கலாசாரப் பண்பின் பிம்பம் உங்கள் இதயங்களில் தெரிகிறது. எல்லோரும் என்னுடன் இந்த வழியில் சக பிரயாணிகளாயிருந்து, இப்புனித வேலையில் உங்களால் முடிந்த அளவு கொடுப்பீர்களென்றும், இந்தியாவின் மிகச் சிக்கலான பிரசினைகளைத் தீர்ப்பதில் பூரண ஒத்துழைப்பையும் தந்து, இங்கு புதியதொரு சக்தியைத் தோற்றுவிப்பீர்கள் என்றும் நம்புகிறேன்.

"ஹரிஜன்", 1—3—'52

இத்தாலியில் பிரான்சிஸ் முனிவரின் சமாதியில் சர்வோதயப் பிரார்த்தனை

இத்தாலியில் அஸ்ஸிஸி என்னும் இடத்தில் பூஜ்ய பிரான்சிஸ் முனிவரின் சமாதியுள்ளது. பிரான்சிஸ் முனிவர் பன்னிரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த பிரசித்தமான கிறிஸ்துவப் பெரியார். கள்வர்களுக்கும், பட்சிகளுக்கும், ஓநாய்க்குங்கூட அவர் அன்புமூலம் செய்த உபதேச வார்த்தைகளும், அன்பை அடிப்படையாகக்கொண்ட அவரது வாழ்க்கையும் கல்லையும் கரையச் செய்யும். குஷ்டரோகிகளிடம் அவர் காட்டிய அன்பு அளவிடமுடியாதது. நம் தேசத்து காந்திமகானைப் போலவே பிரான்சிஸின் வாழ்க்கை அன்புமயமானது.

காந்திஜி மறைந்த சர்வோதய தினத்தன்று, இவ்வருஷம் ஜனவரி-மீ 30-வ, மேல் நாட்டு சமாதானப் பிரியர்களில் சிலர் பிரான்சிஸ் முனிவரின் சமாதிக்குச் சென்று மாலை 5-மணிக்குக் கூடினுர்கள். அப்பொழுது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கல்விப் பகுதி கூட்டத்திற்குச் சென்றிருந்த, ஹிந்துஸ்தானி தாலிமி சங்க உதவிக் காரியதரிசி, ஸ்ரீமதி ஆஷாதேவி அவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு காந்திஜியைப்பற்றி முதலில் பேசினுர். பின்பு அங்கு கூடியிருந்த அன்பர்கள் பிரான்சிஸ், காந்திஜி இரண்டு மகான்களின் பெயர்களையும் ஸ்மரித்துக்கொண்டு, உலகில் அன்பும் அஹிம்சையும் வளர்ந்து ஒரே உலகமாக ஒற்றுமையுடனும் அமைதியுடனும் இயங்கவேண்டும் என்று பிரார்த்தனை செய்தனர்.

அவர்கள் எல்லோரும் அந்தப் புனித சமாதியில் புனித சர்வோதய தினத்தன்று செய்த பிரார்த்தனையின் சாரம்:

"உலகத்தில் பொருளாதார, அரசியல், கலாசார ஐக்கியம் ஏற்படவேண்டும். இறுதிப் பயன் இதை எந்த வழியில் அடைகிறேமோ அதைப் பொறுத்திருக்கும். ஹிம்சைமூலம் அடைந்தால் முடிவும் ஹிம்சையாகவே இருக்கும்என்பதை சரித்திரத்தில் காண்கிறேம். ஆனல் அஹிம்சை முறையினுல் இந்த லட்சியத்தை அடைந்தால் ஜனசமுதாயத்தில் உண்மையான அமைதியையும், மக்களின் சுதந்திரத்தையும், புதிய சமூகத்தைக் சிருஷ்டிக்கக்கூடிய புதிய ஜீவனையும் நாம் அடையலாம்.

இங்கு புதைந்துகிடக்கும் அவருடைய உடலை மறந்து, அவரது ஆத்மாவிலிருந்து வீசும் ஒளியையும் அன்பையும் நாம் ஏற்கவேண்டும். பக்த பிரான்சிஸ் தன் வாழ்க்கையில் கண்ட ஆத்மீக அன்பின் பிரபாவத்தை நாம் ஞாபகமூட்டிக்கொள்ளவேண்டும்.

சென்ற நூற்றுண்டுகளில் மேல் நாட்டு நாகரிகத்தால் ஏற்பட்ட நமது குறைகளும், கொடுமையும், இறுமாப்பும் அளவில்லாதன. இதைக்கொண்டு நாம் இப்பொழுது கோரும் உலகத்தின் ஆத்மீக ஐக்கியத்தை அடைய முடியாது என்பது உறுதி.

உலகத்தின் கீழ்-மேல் நாடுகளை ஒன்றுக இணைக்கவல்லது, அஹிம்சை மார்க்கத்தையும் அதன் தத்துவத்தையும் தவிர வேறு இல்லை. ஆசியாவும் மேல் நாடுகளும் இதுவரை கொலை, களவு, அநீதி முதலானவற்றைக் கையாண்டதனுல் உண்டான பயனை நினைக்கவும் மனம் கூசுகிறது. இந்த நிலையில் பக்த பிரான்சிஸ் அவருடைய காலத்தில் ஹிம்சையை அன்பினுல் எதிர்த்து நின்றது போல, இப்பொழுது அஹிம்சா முறையைப் பின் பற்றுவதுதான் சிறந்த தெய்விக வழி. உண்மையான இன்பத்தையும் பூரண விடுதலையையும் கொடுக்கக்கூடிய அளவு கடந்த அன்பையும் சகிப்புத் தன்மையையும் பக்த பிரான்சிஸ் வெளிப்படுத்திவந்தார்.

மேல்நாட்டு நாகரிகம், சாஸ்திர-விஞ்ஞான முன்னேற்றம் எல்லாம் ஒரு எல்லையை அடைந்துவிட்டன. அவைகளில் ஒரு புதிய ஆத்மீக அம்சத்தைப் புகுத்தாவிட்டால் ஜனசமூகத்தின் விடுதலைக்கும் இன்பத்திற்கும் அவை பயன்படாதுபோகும். இதுவரை ஹிம்சை முறையால் ஏழை எளியோரை பலவான்கள் அடக்கியாண்டு வந்தனர். அத்துடன், அதிகார இறுமாப்பால் தங்களையும் அழித்துக்கொண்டனர். அதிகாரத்தினுலும்

★ பத்திரிகை உலகில் காந்திஜியின் "ஹரிஜன்" ★

மகாத்மா காந்திஜி நடத்திவந்த மூன்று ஹரிஜன் வாரப் பத்திரிகைகளை 1952 மார்ச்சு முதல் நிறுத்திவிடுவதாக நவஜீவன் டிரஸ்டிகள் செய்த தீர்மானம் பத்திரிகைகளில் வெளி வந்தது. இதைப் பார்த்து ஆயிரக்கணக்கான வர்கள் அதிர்ச்சியும் துயரமும் அடைந் தார்கள். இவைகளை எப்படியாவது நடத்த வேண்டும் என்று சிலர் கங்கணம் கட்டிக் கொண்டு நன்கொடை கொடுப்பதாகச் சொன்னார்கள். பலர் தாங்கள் அதிக சந்தா தார் சேர்த்துத் தருவதாக வாக்களித்தனர். பத்திரிகை உலகத்திலும் காந்தி பக்தர்களிட மும் இந்தப் பரபரப்பு ஏற்பட்டது ஆச்சரிய மல்ல.

இந்த தேசத்தை விடுவித்து சத்தியத்தின் மூலம் அமைதியையும் மக்களின் ராஜ்யத்தை யும் ஸ்தாபிக்கவே காந்திஜியின் குரலில் "யங் இந்தியா", "ஹரிஜன்" பத்திரிகைகள் தோன்றின. தேசம் உய்யும் அளவுக்கு சத்தியம் நிலைக்கும்வரை காந்திஜி ஆரம்பித்த பத்திரிகை அழியாமல் பிரகாசிக்கவேண்டும்.

காந்திஜியின் பத்திரிகைகளை நிறுத்த வேண்டிய அவசியம் என்ன? பத்திரிகை நடத்துவதைப்பற்றி காந்திஜியின் சித்தாந்த மாவது: 1. பத்திரிகையில் விளம்பரம் போடக்கூடாது; விளம்பர வருமானத்தைக் கொண்டு பத்திரிகை நடத்தக்கூடாது. 2. பத்திரிகையை வாசகர்களின் சந்தாவைக் கொண்டே நடத்தவேண்டும். 3. வாசகர் களின் போதிய ஆதரவு இல்லாமல் நஷ்டம் ஏற்பட்டால் பத்திரிகையை நிறுத்திவிட வேண்டும். காந்திஜி இருந்தபொழுது மூன்று ஹரிஜன் பத்திரிகைகளுக்கும் ஏராளமான சந்தாதார்கள் இருந்தனர். மூன்று ஹரிஜன் பத்திரிகைகளுக்கும் 1946-ல் 52,000 சந்தா தார்கள். பின்னர் 1947ல் 34,000; காந்திஜி இறந்தபொழுதோ 25,000. இடையில் கொஞ்ச காலம் நின்றுவிட்டது. ஆதலால் மேலும் 8,000 சந்தாதார்கள் குறைந்து விட்டனர். 1952-ல் சந்தா எண்ணிக்கை மொத்தம் 9,000-க்கு வந்துவிட்டது. இதில் ஆங்கில ஹரிஜனுக்கு 2,840, குஜராத்திக்கு 3,890, ஹிந்திக்கு 2,270 தான். போதுமான சந்தாதார்கள் இல்லாததால் மொத்தமாக வருஷத்திற்கு ரூ. 40,000 நஷ்டம் ஏற்பட்டது. நவஜீவன் டிரஸ்டை ஏற்படுத்தியபொழுது, நஷ்டம் ஏற்பட்டால் கட்டாயமாகப் பத்திரி கைகளை மூடவேண்டுமென்று காந்திஜி கண்டிப்பாய் எழுதியுள்ளார். இந்த நிலைமை யில் நவஜீவன் டிரஸ்டு வேறு என்ன செய்யக் கூடும்? நிறுத்திவிடத் தீர்மானித்தது ஆச்சரியமில்லை.

காந்திஜி பிறந்த குஜராத்திலேயே என் சந்தாதார் தொகை இவ்வளவு குறைந்து விட்டதென்று தெரியவில்லை. அகில இந்தியா வில்—அதிகமாக, ஹிந்தி பேசும் மாகாணங் களில்—என் ஹிந்திப் பத்திரிகைக்கு ஆதரவு கொடுக்கவில்லை யென்பதும் தெரியவில்லை. எப்பொழுதும் ஆங்கில ஹரிஜனுக்கு தென் னாட்டில் அதிகமாக ஆதரவு இருந்திருக்கும் என்று எண்ணுவது மிகையல்ல. ஆதலால், ஆங்கில ஹரிஜனை ஆதரிக்கும் கடமையும் பொறுப்பும் தென்னாட்டினருக்கு அதிகம் என்று நினைக்கிறோம்.

தமிழ்நாட்டில் சில வருஷமாக சில காதி வஸ்திராலயங்கள் மூலம் ஹரிஜனுக்கு சந்தா சேர்க்க முயன்றோம். சந்தாத் தொகை

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஹிம்சையினாலும் பீடிக்கப்பட்டு சிக் குண்டுள்ள இப்பொழுதைய உலக நிலைமை இப்படியே என்றென்றும் இருக்கமுடியாது. சரித்திரத்தில் பதிந்து கிடக்கும் பிரான்சிஸ் முனிவரையும் காந்திஜியையும் போன்ற மனித மாணிக்கங்களை நாம் தியானத்தில் கொண்டு, உலகத்திலுள்ள கீழ்-மேல் நாடுகள் சாட்சி யாக, இதுவரையில் வழி தவறிக் கெட்டுப் போன சமுதாயம் மீண்டும் அஹிம்சையையும் அன்பையும் ஏற்று உலகத்தை உய்விக்கும் புரட்சிப் பணியில் ஈடுபட நம்மை அர்ப்பணம் செய்துகொள்வோம்.

அன்புமயமான உலக சகோதரத்துவமும் நிரந்தர அமைதியும் ஏற்படுவதற்காகப் பாடு படும் கிழக்கு-மேற்கு நாட்டு மக்கள் எங்களது இந்தப் பிரார்த்தனையிலும் பணியிலும் ஈடுபடுவார்களாக." ★ ★

கொடுக்கச் சிரமம் உள்ளவர்களுக்கு தனிப் பிரதிகள் கொடுக்கவும் சில வஸ்திராலயங்கள் மூலம் முயற்சி நடந்தது. இதனாலும் பயன் இல்லை என்று சொல்ல வருந்துகிறோம். "ஹரிஜன்," ஹிந்தி "ஸர்வோதயம்," "கிராம உத்யோக் பத்ரிகா" போன்ற காந்திய-சர்வோதயக் குரல் ஓசை இந்நாட்டில் மங்கி விட்டால் விமோசனமே இராது என்று கருதி, இந்தப் பத்திரிகைகளெல்லாம் படிக்காவிட்டாலும் இவைகளின் சுருக்கமாவது (Digest) கதம்ப ரூபத்தில் சிறிய மலிவான மாதப் பத்திரிகையாக வாலிபர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று எண்ணி சமீபத்தில் "கதர் உலகம்" ("The Khadi World") என்னும் ஆங்கிலப் பத்திரிகையை ஆரம்பித்தோம். கதர் உலகம் மூலம் அதன் தாய்ப் பத்திரிகைகளுக்கு புதிய சந்தாதாரும் படிப்பவர்களும் அதிகமாவார்கள் என்று எதிர்பார்த்தோம்.

இங்கு, காந்திஜியின் தத்துவ விளக்கம் சம்பந்தமாக காந்திஜி கூறியது ஞாபகம் வருகிறது. காந்திஜியின் வாழ்க்கைசித்தாந்தம், அவருடைய திருஷ்டி முதலியவைகளை ஒரு உருவாக எழுதவேண்டுமென்று காந்திஜியை சில நண்பர்கள் 1947-ல் கேட்டுக்கொண்டனர். காந்திஜிக்குச் சமயம் இல்லாவிட்டாலும், ஸ்ரீ காகா கலேல்கர், ஸ்ரீ கிஷோரிலால் மஷ்ருவாலா, வினோபாஜி இவர்களில் யாராவது ஒருவரைக்கொண்டு எழுதச்செய்ய வேண்டுமென்று காந்திஜியை மேலும் கேட்டனர். அதற்கு காந்திஜி எழுதிய பதில் விசேஷமானது. மேலே குறிப்பிட்ட மூன்று பேரும் தகுதியுள்ளவர்கள் என்று ஒப்புக்கொண்டார். ஆனால், காகா கலேல்கர் ஓயாத நாடோடி; அவர் ஓரிடத்தில் உட்கார்ந்து இந்த வேலையைச் செய்யமுடியாது. ஸ்ரீ கிஷோரிலாலோ நோயுற்ற உடலைச் சுமையாகத் தாங்கிக்கொண்டே சக்திக்கு அதிகமாக வேலை செய்து வருகிறார்; அவராலும் இது முடியாது. வினோபாஜியோ ஆராய்ச்சியாளர்; இந்த வேலையில் அவருக்கு மனம் இராது. இவ்வாறு கூறி, காந்திஜி இந்த யோசனை சாத்தியமில்லை என்று சொல்லி விட்டார்.

ஆனால் காந்திஜிக்குப் பிறகு அதிர்ஷ்டவசமாக ஸ்ரீ கிஷோரிலால் மஷ்ருவாலா மூன்று ஹரிஜன் பத்திரிகைகளையும் ஏற்று நடத்தி, மகாத்மாவின் அடிச்சுவடுகளில், அவருடைய லட்சியத்தைக் கடைப்பிடித்து, காந்திஜியின் குரல் மங்காமல் காத்து வருகிறார். வினோபாஜியும் ஹிந்தி "ஸர்வோதய"த்திற்கு ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்தி வருவது நமது பெரும் பாக்கியமே. இருளடைந்த இந்த தேசத்தில், பத்திரிகை உலகில் இந்த இரு தீபங்களும் அணைந்து விடாமல் பார்த்துக் கொள்வது காந்திய பக்தர்களின் கடமையாகும்.

நல்ல வேளையாக ஹரிஜன் பத்திரிகைகளை மேலும் ஆறுமாதகாலம் தொடர்ந்து நடத்துவதாக நவஜீவன் டிரஸ்டு மீண்டும் முடிவு செய்துள்ளது. இதற்குள்ளாக தேவையான சந்தாதாரைவிட ஏராளமான சந்தாதார் சேருவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஒருவேளை நவஜீவன் டிரஸ்டு ஆங்கில ஹரிஜனை நடத்த முடியாவிட்டால் இதை சர்வ சேவா சங்கம் ஏற்றுக்கொண்டு நடத்த முன் வந்துள்ளது. யார் நடத்தினாலும் நஷ்டம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது வாசகர்களின் கடமையாகும்.

மாணவர்களுக்கு மான்யம்

மேலும், சர்வ சேவா சங்கம் புதிதாக சந்தாதாராகச் சேரும் மாணவர்களுக்கும் நிர்மாண ஊழியர்களுக்கும் ஹரிஜனின் வருஷச் சந்தாவில் பாதியை ஈடுசெய்ய முன் வந்துள்ளது. மாணவர் அல்லது நிர்மாண ஊழியர் புதிதாகச் சந்தாதாராகச் சேர்ந்தால் ஹரிஜனுக்கு வருஷச் சந்தா ரூ. 6க்குப் பதிலாக ரூ. 3 மட்டும் கட்டினால் போதுமானது. பாக்கி சந்தா ரூ. 3ஐ சர்வ சேவா சங்கம் நவஜீவன் டிரஸ்டுக்கு மான்யமாகக் கொடுக்கும். இதேபோல் ஹிந்தி ஹரிஜன் பத்திரிகைக்கும் மான்யம் கொடுக்கப்படும். இம் மாதிரி, இரண்டிலும் சேர்ந்து புதிய 1500 சந்தாதார்களுக்கு ரூ. 4500 வரை மான்யம் கொடுக்க சர்வ சேவா சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழ் நாட்டில் மாணவர்களும் நிர்மாண ஊழியர்களும் புதிதாக சந்தாதாராகச் சேரும்படி வேண்டிக்கொள்கிறோம்.

"கதர் மலர்" வாசகர்கள் இதில் விசேஷ ஊக்கம் எடுத்துக்கொண்டு பத்திரிகை உலகில் இந்த ஆங்கில, ஹிந்தி "ஹரிஜன்" தீபங்கள் அணையாமல் பார்த்துக்கொள்ள முன் வருவார்கள் என்று உறுதியாக நம்புகிறோம். ★

★ சர்வோதய மேளா-யாத்திரை ★

மாகாணங்களில்

சேவாகிராமம் கதாயி மண்டல் விபாக்கின் சஞ்சாலக் ஸ்ரீ என். ஆர். சோவனி விடுத்துள்ள அறிக்கையின் சாரம்:—

சென்ற வருஷம் மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, கேரளா முதலிய இடங்களில் சர்வோதய யாத்திரை செய்து பல கிராமங்களில் தொண்டர் கோஷ்டிகள் சர்வோதய லட்சியத்தைப்பற்றிப் பிரசாரம் செய்தார்கள். இவ்வருஷமும் எல்லா மாகாண விபாகங்களிலும் சர்வோதய மேளா-யாத்திரைகள் நடத்தவேண்டிய அவசியத்தைப்பற்றி சர்க்கா சங்க அக்கிராசனர் ஒரு அறிக்கை விடுத்தார். அதனல் சர்க்கா சங்கக் கிளைகள் உள்ள இடங்களில் எல்லாம், புதிய உற்சாகமும் ஊக்கமும் காட்டி, பல யாத்திரைக் கோஷ்டிகள் கிராமங்களில் பிரசாரம் செய்தார்கள். சர்க்கா சங்கத் தொண்டர்கள், கதாயி மண்டல் அங்கத்தினர்கள், நிர்மாண ஊழியர்கள் எல்லோரும் யாத்திரையில் பங்கு எடுத்துக்கொண்டார்கள்.

இதுவரையிலும் மாகாண விபாகங்களிலிருந்து கிடைத்த கடிதங்களிலிருந்து சுமார் 250 சர்வோதய யாத்திரைக் கோஷ்டிகள் பங்கு எடுத்துக்கொண்டிருக்கலாம் என்று தெரிகிறது. மாகாணவாரியாக யாத்திரை செய்த சர்வோதய கோஷ்டிகளின் எண்ணிக்கை விவரம், இது வரை கிடைத்துள்ள அறிக்கைப்படி, பின்வருமாறு:

		கோஷ்டிகளின் எண்
ஆந்திர மாகாணம்		
கிருஷ்ணு	விபாக்	4
கர்னுடக மாகாணம்		
கலாட்கி	விபாக்	2
கல்ஹால்	,,	1
ஹுப்ளி	,,	2
குர்ல்ஹோசர்	,,	1
சவதத்தி	,,	1
ரான்	,,	4
தென் கர்னுடகம்	,,	4
தார்வார்	,,	1
	மொத்தம்	16
தமிழ்நாடு		
சென்னை	விபாக்	1
திருப்பூர்	,,	9
திருச்சி-தஞ்சை	,,	15
மதுரை	,,	4
திருநெல்வேலி	,,	4
	மொத்தம்	33
கேரளம்—3 விபாகங்களிலும்		35
ராஜஸ்தான்		11
பீஹார்		26
ஹைதராபாத்		1
சிவராம்பள்ளி		1
சௌராஷ்டிரம்		1
குஜராத்		20
நாகவிதர்ப்பம்		2
சேவாகிராமம்		1
காதி சதன், நரசிங்கபூர், பீஹார்		1
வங்காளம் (சுமார்)		50
	ஆக மொத்தம் கோஷ்டிகள்	202

பொதுத் தேர்தல் நடந்துகொண்டிருந்ததால் சர்வோதய யாத்திரையில் பொதுஜனங்களிடையே அவ்வளவு உற்சாகம் இராது என்று எண்ணினேம். ஆனல் இதற்கு மாருக யாத்திரைக் கோஷ்டிகள் போன இடங்களில் எல்லாம், ஆண் பெண் குழந்தைகள் எல்லோரும் உற்சாகத்துடன் பொதுப் பிரார்த்தனை, துப்புரவு வேலை, நூற்பு யக்ஞம், பிரசங்கம் முதலியவைகளில் ஏராளமாகக் கலந்து கொண்டார்கள்; சர்வோதய மேளாவிற்கு நூல் காணிக்கை கொடுத்தார்கள். மேலும், பூமிதான யக்ஞத்திற்கு, விநோபாஜியின் வேண்டுகோளுக்கு இணங்க, சிலர் பூமிதானமும் வழங்கினர்கள்.

காலத்தின் வெள்ளம் வெகு வேகமாக வந்துகொண்டிருப்பதை மக்கள் உணர்ந்து வருகிருர்கள் என்பது தெளிவு. நகரத்தின் பணக்கார யந்திர நாகரிகம் கலக்கமடைந்திருக்கிறது. கிராம மக்களிடம் புதிய சக்தி பெருகிக்கொண்டு வருகிறது என்பது வெளிப்படை. அடுத்த வருஷ சர்வோதய யாத்திரையில் அதிகமான கோஷ்டிகள் பங்கு எடுத்துக்கொண்டு, பூமிதான பொருளாதாரத் திட்டமும் சுயதேவைப் பூர்த்தியும் ஒவ்வொரு குடிசையிலும் வேரூன்றும்படிச் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. * *

தமிழ்நாட்டில்

தமிழ் நாட்டில் எல்லா விபாகங்களிலும் 30 ஊழியர் கோஷ்டிகள் சர்வோதய பட்சத்தில் யாத்திரை செய்தார்கள்; 413 கிராமங்களில் பிரசாரம் செய்தார்கள்.

கிராமங்களில் சுயதேவைப் பூர்த்தி, மில் பொருள் பகிஷ்காரம், பூமிதான யக்ஞம் முதலிய விஷயங்களைப்பற்றிப் பிரசாரம் நடந்தது. அத்துடன், ராட்டை கதிர் முதலியவை பழுது பார்ப்பதிலும், மூங்கில் ராட்டை செய்யக் கற்றுக் கொடுப்பதிலும் ஊழியர்கள் சேவை புரிந்தார்கள். குழிக் கக்கூஸ் பலவிடங்களில் போட்டுக் காட்டினார்கள். நூற்பு யக்ஞம், பொதுத் துப்புரவு, பிரார்த்தனை, சர்ச்சை முதலியவை அன்றாட வேலைத்திட்டமாக இருந்தது.

தேர்தல் மும்முரத்திலும், அறுவடைக் காலத்திலும், மற்றக் கஷ்டங்கள் இருந்த போதிலும் தொண்டர்கள் போன கிராமங்களில் எல்லாம் கிராமவாசிகள் உற்சாகத்துடன் வரவேற்றனர். உணவு — ஆடை சம்பந்தமாய் மில் பொருள்களை பகிஷ்காரம் செய்வதாகச் சுமார் 200 பேர் சங்கற்பம் செய்தார்கள். இந்த யாத்திரையினால் கிராம மக்களுடன் நல்ல தொடர்பு ஏற்பட்டது, ஊழியர்களுக்கும் நமது வேலைக்கும் கிடைத்த பெருத்த லாபமாகும்.

திருப்பூர் விபாக்

திருப்பூர் விபாக்கில் 12 கோஷ்டிகள் 157 கிராமங்களுக்குப் போனார்கள். பல இடங்களில் நூற்பு யக்ஞத்தில் 2141 பேரும், பிரார்த்தனையில் 16341 பேரும், துப்புரவில் 470 பேரும் கலந்துகொண்டார்கள். 230 ராட்டைகளும், 522 கதிர்களும் தொண்டர்கள் பழுது பார்த்துக் கொடுத்தனர். நூல் காணிக்கையாக 609 சிட்டம் கிடைத்தது. 17 கக்கூஸ்களும் 34 உரக்குழிகளும் தயார் செய்தனர். 134 பேர் மில் பகிஷ்காரப் பிரதிக்ஞை செய்தார்கள்.

கோபி தாலுகா கூகலூர் வட்டாரத்தில் 13 கிராமங்களிலும், இந்தியன்பாளையம் வட்டாரத்தில் 12 கிராமங்களிலும், காட்டுப் பாளையம் வட்டாரத்தில் 12 கிராமங்களிலும், சத்தியமங்கலத்தில் 13 கிராமங்களிலும், புளியம்பட்டி சரகத்தில் 12 கிராமங்களிலும் ஆக 62 கிராமங்களில், சர்வோதய பட்சத்தில் பொதுத் துப்புரவு, நூற்பு வேள்வி, பிரார்த்தனை முதலிய திட்டத்தை நடத்தினார்கள். இதில் ஸ்ரீ கே. பி. வி. கிரி, ஸ்ரீ ஜி. எஸ். லக்ஷ்மணன், ஸ்ரீ பி. ஜி. கருத்திருமன் எம். எல் ஏ., முதலிய பல அன்பர்களும், இந்தியன்பாளையம் சர்க்கா சங்க ஊழியர்கள் 20 பேரும் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டார்கள்.

சென்னை விபாக்

சென்னை விபாக்கில் 2 கோஷ்டிகள் 28 கிராமங்களுக்கு விஜயம் செய்தார்கள். நூல் காணிக்கை 29 சிட்டம் வசூல் செய்யப்பட்டது. யாத்திரீகர்கள் 9 ராட்டைகளைப் பழுது பார்த்துக் கொடுத்தார்கள்.

திருநெல்வேலி விபாக்

சங்கரன்கோவில் கிளையிலிருந்து ஒரு கோஷ்டியும், சிப்பிப்பாறையிலிருந்து ஒரு கோஷ்டியும், விளாத்திகுளத்திலிருந்து ஒரு கோஷ்டியும், திசையன்விளையிலிருந்து ஒரு கோஷ்டியும், ஆக நான்கு கோஷ்டிகள் கன்னியாகுமரியை நோக்கி யாத்திரை செய்தார்கள்.

சிப்பிப்பாறை கதாயி மண்டல் காரியதரிசி ஸ்ரீ அய்யாத்துரை, ஸ்ரீ சிவசுப்ரமணிய பாண்டியன், ஸ்ரீ பழவூர் சுப்ரமணிய பிள்ளை, ஸ்ரீ வி. என். சீனிவாசன் முதலியவர்களும் இதர கதாயி மண்டல் அங்கத்தினர்களும், ஆக 23 பேர் நான்கு கோஷ்டிகளிலும் கலந்துகொண்டார்கள்.

மற்ற கோஷ்டிகளைப்போலவே, தினம் காலை 5-மணியிலிருந்து இரவு நெடுநேரம் வரையிலும் துப்புரவு, நூற்பு யக்ஞம், பிரார்த்தனை, பிரசாரம் முதலிய திட்டங்களை அநுஷ்டித்தார்கள். யாத்திரை வழியில் விளாத்திகுளம் வட்டாரத்திலுள்ளவர்கள் தங்கள் சுயதேவைக்கு கைமணையில் பருத்தி அரைத்து நூற்கத் தீர்மானித்திருக்கிறார்கள். கன்னியாகுமரி யாத்திரையில் கலந்துகொள்ள முடியாதவர்களான சில தொண்டர்களும், கதாயி மண்டல் அங்கத்தினர்களும் மாலையிலும் இரவிலும் தங்கள் ஸ்தலத்தில் சுற்றுப்புறமுள்ள கிராமங்களில் இந்த வேலைத் திட்டத்தை நடத்தினார்கள். பிப்ரவரி 12ந்தேதி கன்னியாகுமரியில் விபாக்கின் 37 தொண்டர்கள் கலந்துகொண்டார்கள். கன்னியாகுமரியில் ஸ்ரீ எஸ். சிவன் பிள்ளை

தலைமையில் மேளா நடந்தது. அந்த வட்டார சர்க்கா சங்கத் தொண்டர்களும், கஸ்தூரிபா நிதியின்கீழ் பயிற்சிபெறும் பெண்களும், ஆக சுமார் 250 பேர் கலந்துகொண்டார்கள். அன்று கல்லுப்பட்டி ஸ்ரீ ரா. குருசாமி (சர்க்கா சங்க டிரஸ்டி) அவர்களின் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது.

திருநெல்வேலி விபாக்கில் இந்த 4 கோஷ்டிகளும் சுமார் 230 மைல் நடந்து 53 கிராமங்களுக்கு விஜயம் செய்தார்கள். பல கிராமங்களிலும், நூற்பு யக்ஞத்தில் கலந்துகொண்டவர்கள் 1753 பேர்; பிரார்த்தனையில் கலந்து கொண்டவர்கள் 12,665 பேர். ராட்டை 376-ம், கைமணை 40-ம், கதிர்கள் 34-ம் யாத்திரீகர்களால் பழுதுபார்த்துக் கொடுக்கப் பட்டன. யாத்திரையில் கிடைத்த நூல் காணிக்கை 355 சிட்டம். 6 கக்கூசுகளும், 33 உரக்குழிகளும் தொண்டர்கள் போட்டுக் கொடுத்தார்கள். மில் பொருள் பகிஷ்கார சங்கற்பம் செய்து கொண்டவர்கள் சுமார் 20 பேர்.

வட ஆர்க்காடு ஜில்லா

வட ஆர்க்காடு ஜில்லாவில் சர்வோதய பட்சத்தில் காதி பிரசாரகர் பி. வி. ராமச்சந்திர அய்யர் தலைமையில் 9 பேர் அடங்கிய ஒரு கோஷ்டி 70 மைல் நடந்து 21 கிராமங்களில் சர்வோதயப் பிரசாரம் செய்தார்கள்.

இந்த யாத்திரையில் பிர்க்கா அபிவிருத்தி அதிகாரி ஸ்ரீ எஸ். கிருஷ்ணமூர்த்தியும், அவருடைய கிராம அபிவிருத்தி அதிகாரிகள் நால்வரும், காதி ஆபீசர் ஒருவரும், புகளூர் ஹரிஜன சேவா சங்கம் ஸ்ரீ எஸ். எஸ். நாகேஸ்வரன் அவர்களும் கலந்துகொண்டனர்.

யாத்திரை ஸ்தலங்களில் முக்கிய ஏற்பாடுகளை பிர்க்கா அபிவிருத்தி அதிகாரி ஸ்ரீ எஸ். கிருஷ்ணமூர்த்தியும், அவருடைய சகாக்களும் செய்தனர். நூல் காணிக்கையாக 67 சிட்டம் கிடைத்தது. யாத்திரையில் நடந்த பொதுக்கூட்டங்களில் மொத்தம் சுமார் 1000 பேரும், நூற்பு யக்ஞத்தில் 168 பேரும், பிரார்த்தனையில் 434 பேரும் கலந்துகொண்டார்கள்.

திருச்சி - தஞ்சை விபாக்

அஸ்தி கரைத்த ஸ்ரீரங்கம் அம்மா மண்டபத் துறையில் 12–2–'52ல் சர்வோதய மேளா நடந்தது. தஞ்சை, திருச்சி ஜில்லாக்களின் சர்க்கா சங்க ஊழியர்களும், கதாயி மண்டல் அங்கத்தினர்களும், நிர்மாண ஊழியர்களுமாக 40 பேர் எட்டு யாத்திரை கோஷ்டிகளாக தஞ்சை - திருச்சி ஜில்லாக்களில் கிராமந்தோறும் சர்வோதய லட்சியம், சுயதேவைப் பூர்த்தி, வினோபாஜியின் பூமி தான யக்ஞம், மில் பொருள் பகிஷ்காரம், உரக்குழி தயாரிப்பு முதலிய விஷயங்களைப் பற்றிப் பிரசாரம் செய்துகொண்டு, 12–2–'52 காலை ஸ்ரீரங்கம் அம்மாமண்டபத்திற்கு மேளாவுக்கு வந்து சேர்ந்தனர். அங்கு காலை 7-30 முதல் 8-30 மணி வரையில் சமூக நூற்பு யக்ஞமும் சர்வமதப் பிரார்த்தனையும் நடைபெற்றது. நூற்பு வேள்வியில் பெண்கள் உள்பட சுமார் 150 பேர் கலந்துகொண்டனர் நூல் காணிக்கையும் செலுத்தப்பட்டது.

பின்னர் யாத்திரை கோஷ்டியினர் தாங்கள் செய்துவந்த யாத்திரையின் அனுபவங்களைப்பற்றிச் சர்ச்சை செய்தனர்.

இந்த மேளாவையொட்டி திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் சமூக நூற்பு வேள்வியிலும், சர்வமதப் பிரார்த்தனையிலும் மேற்கண்ட யாத்திரை கோஷ்டியினரும் திருச்சி வாசிகளும், குறிப்பாக பெண்களும், கலந்து கொண்டனர். நூற்பு யக்ஞத்தில் சுமார் 150 பேர் கலந்துகொண்டனர். இங்கும் மேளாவுக்கு நூல் காணிக்கை செலுத்தப்பட்டது. பொதுவாக, இந்த மேளாவில் திருச்சி வாசிகளும் ஏனையோரும் மிக்க உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது என்று திருச்சி - தஞ்சை விபாக் சஞ்சாலக் ஸ்ரீ மருதநாயகம் அறிவிக்கிறார்.

புதுச்சேரியில் மேளா

வேட்டவலம் கதாயி மண்டல் காரியதரிசி, ஸ்ரீ ரத்தினசாமி கண்டர் எழுதுவது:- ஆலூர், வேட்டைவலம் முதலிய கிராமங்களில் ஸ்ரீ ஏ. ராமச்சந்திர ரெட்டியார் தலைமையில் பிப்ரவரி 10-வ சர்வோதய முகாம் நடந்தது. பிப்ரவரி-மீ 12-வ புதுச்சேரியில் அன்னார் தலைமையில், காந்திஜியின் அஸ்தி கரைத்த சமுத்திரக் கரையில், நூற்பு யக்ஞம், பிரார்த்தனை, நூற்புவேள்வியுடன் சர்வோதய மேளா நடந்தது.

★ ★ ★

சர்வோதய யாத்திரையும் கிராம வேலையும்

சர்க்கா சங்கம், திருப்பூர் விபாக்கின் சஞ்சாலக் 5–3–'52ல் விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:—

சமீபத்தில் சர்வோதய யாத்திரைகள் மூலம் சங்கக் கிளையைச் சேர்ந்த அநேக கிராமங்களில் பிரசாரமும், கிராம வேலைகளும் நடை பெற்றுள்ளன. அவ்வமயம் அந்த கிராமங்களில் நம்பால் எழுந்துள்ள ஆதரவையும், சர்வோதய லட்சியத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய நம்பிக்கையையும் ஸ்திரப்படுத்திக் கொள்வது அவசியம்.

இது, நேரில் அடிக்கடி அக்கிராமங்களுக்குச் சென்றாலன்றி சாத்தியமில்லை. ஆகையால் உடனடியாக, இம்மாதக் கடைசிக்குள், சர்வோதய யாத்திரை முகாம்கள் நடந்த கிராமங்களுக்கு மீண்டும் தொண்டர்கள் விஜயம் செய்து, பிரசார வேலைகளுடன், அந்த கிராமங்களில் (1) கதாயி மண்டல்கள், (2) நூற்போர் மண்டல்கள், (3) மில் பகிஷ்காரக் கமிட்டிகள், (4) சர்வோதயக் குழுக்கள் — இவற்றில் ஏதாகிலும் ஒன்று அமைக்க வேண்டும். கதாயி மண்டல்கள் அமைப்பது அவசியமாகும்.

(2) நூற்போர் மண்டல் என்பது, சர்க்கா சங்க வேலைத் திட்டத்திலும், சுய தேவைப் பூர்த்தி, சர்வோதய லட்சியங்களிலும் நம்பிக்கையிருக்கும் 5 நூற்பவர்கள் இருந்தால் போதும்; அவர்களுக்கு மற்ற கதாயி மண்டல் விதிகளின்படி யோக்கிய தாம்சங்கள் இல்லாமலிருந்தாலும், இம் மண்டல் திட்டப்படி வேலை செய்து வரலாம்.

(3) மில் பகிஷ்காரக் கமிட்டி:- உணவு உடை இருவகையிலும் குவியல் முறையில் அமைந்து உற்பத்தி செய்யப்படும் வஸ்துக்களை எக்காரணங் கொண்டும் நம்பியிருக்கக் கூடாது என்ற உறுதிபடைத்த 3 அல்லது 5 பேர் கொண்ட மண்டல்களாக அமைத்து மாதாந்திரக் கூட்டங்கள், நூற்பு, பிரார்த்தனை, கிராமத் துப்புரவு, கூட்டுறவுக் கிராமக் கைத்தொழில் வளர்ச்சி முதலிய வேலைகள் செய்ய வேண்டும்.

(4) சர்வோதயக் கமிட்டிகள் என்பவை, காந்தியடிகளின் 21 நிர்மாண வேலைகளில் எதிலாவது நம்பிக்கை வைத்துள்ள அன்பர்கள் சேர்ந்த கமிட்டிகளாகும். கதர், கிராமக் கைத்தொழில், மதுவிலக்கு, ஜாதிமத சமரசம், தொழிலாளர் நலம், பசுப் பாதுகாப்பு, சுரண்டலற்ற வாழ்க்கை, குஷ்ட நிவாரணம், ஹிந்தி பிரசாரம், ஹரிஜன அபிவிருத்தி முதலிய எதில் நம்பிக்கையிருந்தாலும், அந்த வேலையின் வளர்ச்சிக்காகச் சிறிது நேரமாகிலும் மாதந்தோறும் செலவிடுவதற்குத் தயாராயிருக்கும் எவரும் இதில் அங்கம் வகிக்கலாம்.

கதாயி மண்டல் அமைப்பதாயின் காரியாலய விதிகளுக்குட்பட்டு ஏற்படுத்த வேண்டும். மற்ற மூன்று வகை ஸ்தாபனங்களும் காலக்கிரமத்தில் கதாயி மண்டல்களாக அமைவதற்காகவே முயற்சி செய்து வரும்படியும், அடிக்கடி பார்வையிட்டும், உற்சாகமூட்டியும் வரவேண்டும். கிளைகள் அவ்வக் கிராமங்களில் இம்மாதிரி கமிட்டிகள் அமைத்து அதில் சேரும் நண்பர்களின் பெயர்களின் விவரம் தெரிவிக்குமாறு கோரப்படுகிறது.

தலைவர், காரியதரிசி முதலிய பதவிகளால் ஏற்படும் பிளவுகள் வேலையைப் பாதிக்கிற படியால், நமது அறிக்கைகள் தபால்கள் முதலியன அனுப்பும் பொருட்டு ஒருவரை அவர்களே தேர்ந்தெடுத்து தெரிவிப்பது நலம். எல்லா அங்கத்தினர்களும் ஒன்றாகச் சேர்ந்து வேலை நடக்க இம்முறை பயன்படும். ★ ★

"ஹிந்தி பத்ரிகா"

தமிழ் நாடு ஹிந்தி பிரசார சபாவின் ஹிந்தி – தமிழ் மாதப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 3 — தனிப் பிரதி (தபால் செலவுடன்) 0—5—9

விவரங்களுக்கு எழுதவும்:

தமிழ் நாடு ஹிந்தி பிரசார சபா, தென்னூர், திருச்சிராப்பள்ளி.

குறிப்பும் செய்தியும்

சர்வோதய சம்மேளனம்

இந்த வருஷம் சர்வோதய சம்மேளனம் காசிக்கருகில் சேவாபுரி என்ற இடத்தில் ஏப்ரல் 13, 14, 15 தேதிகளில் நடைபெறும். அந்தச் சமயம் ஆச்சாரிய விநோபாஜி விஜயம் செய்வார். முந்திய சம்மேளனம்போல் தனிப்பட்ட நிர்மாண ஸ்தாபன மகாநாடோ, ஸ்தாபனங்களில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டமோ, சர்வ சேவா சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டமோ நடக்காது. பூமிதான யக்ஞத்தை தேசீய இயக்கமாகச் செய்து இப்பொழுதுள்ள அவசரமான தேசீயப் பிரசினைகளைத் தீர்க்க திட்டம் வகுப்பதிலேயே சம்மேளனத்தின் முழு கவனமும் நேரமும் செலவிடப்படும் என்று தெரிகிறது.

விநோபாஜிக்கு உத்தரப் பிரதேசத்தில் அவர் கோரிய 5 லட்சம் ஏக்கர் நிலம் பூமிதானமாகக் கிடைக்கக் கூடும். இதைப் பின்பற்றி மற்ற மாகாணங்களிலும் உடனே ஒரு திட்டம் வகுத்துக் கொண்டு, பூமிதான யக்ஞத்தை ஆரம்பித்து நிறைவேற்ற தலைவர்களும் ஊழியர்களும் முன்வர வேண்டும் என்பது விநோபாஜியின் கோரிக்கை. ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் சர்வோதய ஊழியர்கள் ஏராளமாக சேவாபுரிக்குப் போய் பூமிதான யக்ஞத் திட்டதில் பங்கு கொள்ள தக்க சமயம் வாய்த்துள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து அதிகமானவர்கள் போவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஸ்ரீ ஓ. பி. ராமசாமி ரெட்டியார், சர்தார் வேதரத்னம், ஸ்ரீ கே. கே. சுப்பண்ண கவுண்டர் போன்றவர்கள் பூமிதான யக்ஞத்தில் தலைமைப்பொறுப்பு எடுத்துகொண்டு தமிழ்நாட்டில் நிலப் பிரசினையைத் தீர்த்து சமூக அமைதியையும் சௌஜன்யத்தையும் உண்டாக்க முன்வருவார்கள் என்று வாலிபர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

சர்வோதய சமாஜத்தில் தங்கள் பெயரை தமிழ்நாட்டில் சர்தார் வேதரத்னம் அவர்களிடம் பதிந்து கொண்டவர்களுக்கு சேவாபுரி சம்மேளனத்திற்கு அழைப்புப் பத்திரம் வரும். போகவர ரயில் யாத்திரையிலும் முன் வருஷம்போல் அரை சார்ஜ் சலுகை ரயில்வே போர்டு அளிக்கும் என்று தெரிகிறது. இதற்காக சேவாகிராமத்திலிருந்து வரும் அழைப்புடன் ரயில்வே சலுகைக்கு ஒரு அத்தாட்சிப் பத்திரமும் அனுப்பப்படும்.

இலங்கையில் உள்ள சர்வோதய ஊழியர்கள் தங்கள் பெயரை 'இலங்கை காந்திய சேவா சங்கம், காரியதரிசி, ஸ்ரீ வேலாயுதம் பிள்ளை, நீர்வேலி, யாழ்ப்பாணம்' என்ற விலாசத்தில் பதிந்து கொள்ள வேண்டும்.

அகில இந்திய நிர்மாண ஊழியர்களின் 'டைரக்டரி' — அல்லது 'யார் யாவர்' (who is who) என்ற விவரம் அடங்கிய புத்தகம்— இதுவரையில் தயாரிக்கப்படவில்லை. தனிப்பட்ட ஸ்தாபனங்களைப்பற்றியும், அகில இந்தியாவிற்கும் 'டைரக்டரி' இல்லை. இவை இரண்டையும் தயாரிக்கப் பல முயற்சிகள் செய்தும், இதுவரை பலனளிக்கவில்லை. இந்த வருஷம் இவைகளை தயாரிக்க தீவிர முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இதற்காக ஒரு கேள்வித்தாள் (Questionaire) பாரம் தயாரிக்கப்பட்டு ஸர்வோதய சம்மேளன அழைப்புப் பத்திரத்துடன் ஒவ்வொரு ஸர்வோதய ஊழியருக்கும் அனுப்பப்படும். அந்த பாரம் ஹிந்தி, ஆங்கிலம் இரண்டு பாஷைகளிலும் இருக்கும். அந்த பாரத்தைப் பூர்த்தி செய்து அனுப்பினல் அடுத்த 1953-ம் வருஷ சம்மேளனத்திற்குள்ளாக டைரக்டரி தயாரித்து, அச்சிட்டு, விநியோகிக்கக்கூடும். ஸர்வோதய ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைத்தால் இந்த டைரக்டரியை எளிதில் தயார் செய்யலாம்.

விநோபாஜியின் பூமிதான யக்ஞம்

ஆச்சாரிய விநோபாஜி இதுவரை பூமிதான யாத்திரை செய்த இடங்களில் மட்டும் கிடைத்த நிலத்தின் விவரம் பின்வருமாறு:

(அட்டை 3-ம் பக்கம் பார்க்க)

127786

Edited and Published by N. Ramaswami
For Sarvodaya Prachuralayam, All India Spinners' Association, Veerapandy, Tirupur.
Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.

தெலுங்கானா 15,000 ஏக்கர்கள்; மத்திய பாரதம் 7,000; ராஜஸ்தான் 1,000; விந்தியப் பிரதேசம் 1,000; டெல்லி 1,000; உத்தரப் பிரதேசம் 39,554; ஆக மொத்தம் ஏக்கர்கள் 64,554.

'கீதா ப்ரவசனம்'

ஆச்சாரிய வினோபா பாவே 1932-ல் தூலியா சிறையில் இருந்த பொழுது, தினமும் பகவத் கீதையைப் பற்றித் தன்னுடன் இருந்த அரசியல் நண்பர்களுக்கு மராட்டியில் 18 தினங்கள் பேசினார். அதன் தொகுப்பு 'கீதா ப்ரவசனம்' என்று புத்தக ரூபமாக வெளிவந்தது: பின்னர், அதன் ஹிந்தி, தெலுங்கு பெயர்ப்புகள் வெளியாயின. சமீபத்தில் ஸ்ரீ சத்தியனும் ஸ்ரீ எஸ். வி. கிருஷ்ண வாரியரும் செய்த மலையாள மொழிபெயர்ப்பும் பிரசுரமாகியுள்ளது. மலையாள மொழிபெயர்ப்பு மிகச் சரளமாகவும் பாமரரும் புரிந்துகொள்ளும்படியும் அமைந்திருக்கிறது.

இதைத் தமிழில் மொழிபெயர்த்து "கதர் மலரி"ல் சிறு சிறு பாகமாக 1950 ஆகஸ்டு-மீ முதல் சென்ற 1951 நவம்பர் வரை பிரசுரித்தோம். இம்மாதிரி சிறு பாகமாக மாதச் சஞ்சிகையில் பிரசுரிப்பதால் இதைப் பூர்த்தி செய்யப் பல வருஷங்களாகும். மேலும், இம்மாதிரி மகத்துவம் மிக்க விஷயத்தை பின்னம் பின்னமாகப் பிரசுரிப்பதும் உசிதமல்ல. ஆதலால் இதைப் புத்தக ரூபமாக சீக்கிரத்தில் பிரசுரிப்பது அவசியம் என்று உணர்கிறோம்.

ஆச்சாரிய வினோபாஜி அவர்களும் தமிழ் மொழி பெயர்ப்பும் சீக்கிரம் வெளி வர வேண்டும் என்று விரும்புவதாக அறிகிறோம். அவரது திருஷ்டி சில காலமாகத் தென்னாட்டை நோக்கி இருப்பது இயற்கை. உத்தரப் பிரதேச யாத்திரை முடிந்ததும் தென்னாட்டிற்கு வருவார் என்று எதிர்பார்க்கலாம்.

"கீதைக்கும் எனக்கும் உள்ள சம்பந்தம் புத்தி-தர்க்கத்தை மீறியதாகும். என் உடல் தாயின் பாலினால் எவ்வளவு வளர்ந்திருக்கிறதோ அதை விட அதிகமாக என் உள்ளம், அறிவு ஆகிய இரண்டும் கீதைப் பாலினால் புஷ்டி அடைந்திருக்கின்றன."

மேலே உள்ள வார்த்தைகளுடன் 20 வருஷத்திற்கு முன் தூலியா ஜெயிலில் கீதா ப்ரவசனத்தை ஆரம்பித்தார். அவர் கீதையில் ஊறி உறைந்துபோனவர். கீதையைத் தனது ஜீவ வாழ்க்கையாக மாற்றி விட்டார். அவர் சொல்வதும் செய்வதும் கீதையை அடிப்படையாகக் கொண்டது. தனது பூமிதான யக்ஞ யாத்திரையின் சித்தாந்தம் முழுதும் கீதையில் அடங்கியிருப்பதாகக் கூறுகிறார். யாத்திரையில் அவரைக் காண வரும் பக்தர்களுக்கு தனது கீதா ப்ரவசனத்தை தினமும் பாடம், தியானம், மனனம் செய்யச் சொல்கிறார். கீதா ப்ரவசனம் வாங்குகிறவர்களுக்கு இம்மாதிரி தனது ஆசீர்வாதத்துடன் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறார். ஆகவே, தென்னாட்டுக்கு அவர் வரும் முன், பூமிதான யக்ஞத்திற்குத் தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்த, 'கீதா ப்ரவசனம்' மக்களிடையே மலிவான விலையில் கிடைக்கச் செய்வது பெரிய திருப்பணியாகும்.

சமீபகாலமாக சர்க்கா சங்கம் கதர் சாஸ்திர - தத்துவத்திற்கு நேரான தொடர்பில்லாத விஷயங்களைப் பற்றி பிரசுரம் வெளியிடக் கூடாதென்ற கொள்கையை அனுஷ்டித்து வருகிறது. இது நியாயமே. ஆகையால் சர்வோதய பிரசுராலயம் இதை வெளியிடுவது சாத்திய மில்லை. இதற்காக போதுமான பண உதவி செய்ய யாராவது அன்பர்கள் முன் வந்தால் சர்வோதய பிரசுராலயத்தார் மொழிபெயர்த்து அச்சிட்டு விற்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக் கூடும். இத் திருப்பணிக்கு முன் வரும் அன்பர்கள் தாங்கள் எந்த அளவு உதவி செய்யக் கூடுமென்று தெரிவித்தால் பின்னர் சங்கம் யோசித்து முடிவு செய்யக்கூடும்.

கதாயி மண்டலும் "கதர் மலரு"ம்

கதாயி மண்டல்களுக்காக கதர் மலருக்கு ஒரு ரூபாய் மான்யம் போக பாக்கி ரூ. 2 வருஷச் சந்தாவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த குறைந்த சந்தாவைச்செலுத்திய பல கதாயி மண்டல்களுக்கு பத்திரிகை அனுப்பி வருகிறோம். மற்ற கதாயி மண்டல்களிடமிருந்தும் சந்தாவை எதிர்பார்த்து அவர்களுக்கும் ஜனவரி 15-உ வரை கதர் மலர் பிரதி அனுப்பி வந்தோம். கதர் மலரில் ஏற்படும் நஷ்டத்தைக் குறைக்கவேண்டி சந்தா செலுத்தாத மண்டல்களுக்கு பிரதிகள் அனுப்புவது நிறுத்தப்பட்டிருக்கிறது. விபாகங்களின் அங்கீகாரம் பெற்ற எல்லா கதாயி மண்டல்களும் 1952 முதல் சந்தாத் தொகையை அந்தந்த விபாக் காரியாலயத்தின்மூலம் உடனே அனுப்பக் கோரப்படுகிறது. பழய பிரதிகள் தேவையானால் ஒவ்வொரு பிரதிக்கும் 3 அணு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். ★ ★

காந்தீய - கதர் - ஸர்வோதய இலக்கியம்

காந்திஜி எழுதிய நூல்கள்

	ரூ. அ.
ஸர்வோதயம்	0—6
ஆசிரம வாழ்க்கை	1—4
ராமநாமம்	0-12
ராட்டை - தத்துவ விளக்கம்	1—4
சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம்	0—4
நீதி தர்மம்	0—4
ஆசிரம பஜனாவளி (தொகுப்பு)	0—6

A collection of Gandhiji's writings:

The Ideology of the Charkha	0—14

கதர் தத்துவ நூல்கள்

சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும்	1—0
கதர் தத்துவமும் சேவையும்	0-12
சர்க்கா சங்க வேலைத்திட்டம்	0—8
சர்க்கா சங்க வரலாறு	1—0
சேவாகிராம முகாம்	1—0
காந்தீய நவநீதம்	2—0
கதாயி மண்டல்	0—2
தமிழ்நாட்டு விபாகங்கள்	0—2

சமக்ர கிராம சேவா நூல்கள்

மலஜல சுத்தி	0—8
சுயம்பூரண கிராமம்	0—5
துப்புரவு விஞ்ஞானம்	0—8

பூமிதான யக்ஞத் தலைவர் விநோபாஜியின் பிரசங்கங்கள்

	ரூ. அ.
காந்திஜியின் குரல்	0—6
ஸர்வோதய யாத்திரையும், பூமிதான யக்ஞமும்	0—2
அறிவுரைகள்	0-12
பிரார்த்தனைப் பிரசங்கம்	0—8

கதர்-ஸர்வோதயப் புரட்சி நூல்கள்

ஸ்ரீ தீரேந்திர மஜும்தார் எழுதியவை

ராட்டைப் புரட்சி	0—6
ஸ்வராஜ்யமும் சர்க்காவும்	0—8
சுயராஜ்யத்தின் உண்மைப் போர் பாகம் I	0—3
„ „ பாகம் II	0—3
இதென்ன சுயராஜ்யம்?	0—3
Revolutionary Charkha	0—6
Demand of the Times	0—12

கதர் சாஸ்திரமும் கணிதமும்

நூற்புக் கலையின் நுணுக்கங்கள்	1—0
தக்ளியால் நூற்பதெப்படி?	0—8
பட்டை போட சுலபவழி	0—4
பருத்திப் பிரசினை	0—6
நரம்பு செய்தல்	0—8
கதர் உபகரணங்கள்	1—0
கைராட்டையின் சரித்திரம்	1—8
கிஸான்-பெட்டி-ஈரிழை ராட்டை	1—0
நூற்புக் கணிதம் பாகம் I	0—6
„ „ II	0—8
„ „ III	0-14
„ „ IV	1—0

காந்தீய - ஸர்வோதய கருத்துப் பிரசாரத்திற்கும் புரட்சிக்கும்

* கதர் மலர் *

வாசகர்களுக்கு வேண்டுகோள்

வாசகர்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரராகச் சேரக்கூடிய தங்கள் நண்பர்களின் பெயரும் விலாசமும் விவரமாக எழுதக் கோருகிறோம்.

THE KHADI WORLD

A Monthly Digest for Khadi - Sarvodaya Ideology.

Started in July, 1951.

Annual Subs: Rs. 3   Price: As. 4

ஸர்வோதய பிரசுராலயம், A. I. S. A., வீரபாண்டி, திருப்பூர்

கமலா பிரஸ், திருப்பூர்